- தொழிற் கல்வி மற்றும் பயிற்சி திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் அவற்றை நாளதுவரையாக்கல்
- இலங்கையில் மாகாணசபைகளுக்கான தொழிற் கல்வி மற்றும் பயிற்சித் திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் அவற்றை செயற்படுத்துதல்
- தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சிக் கொள்கைகளை தயாரித்தல் மற்றும் அவற்றை நாளதுவரையாக்கல்
- தொழில்நுட்ப மற்றும் தொழிற் கல்வி மற்றும் பயிற்சித் துறையில் ஆராய்ச்சிக் கற்கைகளை ஒருங்கிணைத்தல் மற்றும் செயற்படுத்துதல்
- மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் கூட்டு திட்டத்தினை நாளதுவரையாக்கல் மற்றும் அதற்கமைய ஆணைக்குழுவின் வருடாந்த செயலாக்கத் திட்டத்தைத் தயாரித்தல்
- ஆணைக்குழு மாதாந்த, காலாண்டு மற்றும் ஆண்டுத் தேர்ச்சி அறிக்கைகளைத் தயாரித்தல்

மேற்கூறிய பணிகளை நிறைவேற்றுவதற்காக திட்டமிடல் மற்றும் ஆராய்ச்சிப் பிரிவில் எட்டு (08) பேர் கொண்ட பதவியணியொன்று காணப்படுகின்றது. இப்பிரிவில் பணிப்பாளர் ஒருவர் (01), உதவி பணிப்பாளர்கள் இருவர் (02), அபிவிருத்தி உத்தியோகத்தர் ஒருவர் (01), கணனி பிரயோக உதவியாளர் ஒருவர் (01), முகாமைத்துவ உதவியாளர் ஒருவர் (01) மற்றும் அலுவலக உதவியாளர் ஒருவர் (01) கடமைபுரிகின்றனர்.

அதற்கிணங்க, திட்டமிடல மற்றும் ஆராய்ச்சிப் பிரிவால் 2017 ஆம் ஆண்டில் பின்வரும் வேலைத்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டுள்ளன.

5.1 அரச, தனியார் மற்றும் அரச சார்பற்ற துறை பயிற்சி நிறுவகங்களுக்கு நிதியுதவிகளை விருதளித்தல் மற்றும் அந்நிறுவகங்களைக் கண்காணித்தல்

அரச, தனியார் மற்றும் அரச சார்பற்ற துறை பயிற்சி நிறுவகங்களில் நடாத்தப்படும் தொழில் மற்றும் தொழில்நுட்ப பயிற்சிப் பாடநெறிகளின் தரத்தையும் மற்றும் தொழிலாளர் சந்தை சார்பகத்தன்மையையும் முன்னேற்றுவதற்கு அவசியமான பயிற்றுவிப்பு உபகரணங்களைப் பெற்றுக்கொடுப்பதற்காக ஆணைக்குழு இவ் வேலைத்திட்டத்தை செயற்படுத்தியூள்ளது. இதனூடாக அரச, தனியார் மற்றும் அரச சார்பற்ற துறை பயிற்சி நிறுவகங்களில் நடாத்தப்படும் பாடநெறிகள் தேசிய தேர்ச்சி தரங்களுக்கமைய தராதர அங்கீகாரம் செய்யப்பட்டு அதன் மூலம் தேசிய தொழிற் திறன் தகுதிச் (NVQ) சான்றிதழ்களை விருதளிப்பதற்கான வாய்ப்பும் கிடைக்கின்றது.

2017 ஆம் ஆண்டு நிதியுதவி வேலைத்திட்டத்திற்காக மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவில் பதிவுசெய்யப்பட்டுள்ள பயிற்சி நிறுவகங்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டன. அதற்கமைய, பெறப்பட்ட விண்ணங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பயிற்சி நிறுவகங்கள் கணிப்பீடுகளிற்கு உட்படுத்தப்பட்டு நிதியூதவிகளை விருதளிப்பதற்கான அலுவல்கள் மேற்காள்ளப்பட்டன. 2017 ஆம் ஆண்டில் அரச, தனியார் துறை மற்றும் அரச சார்பற்ற துறை பயிற்சி நிறுவகங்களுக்கு விருதளிக்கப்பட்ட நிதியுதவி பற்றிய விபரங்கள் அட்டவணை 5.1 இல் காட்டப்பட்டுள்ளது.

அட்டவணை 5.1 2017 ஆம் ஆண்டில் துறை ரீதியாக விருதளிக்கப்பட்ட நிதியுதவி

துறை	2017 ஆம் ஆண்டிற்காக ஒதுக்கப்பட்ட நிதித்தொகை (ரூபா மில்லியன்)		உண்மையாக நிதியுதவி விருதளிக்கப்பட்ட பாடநெறிகளின் எண்ணிக்கை	நிறுவகங்களின் எண்ணிக்கை	செலவிடப்பட்ட தொகை ரூபா மில்லியன்)
	ஆரம்பம்	திருத்தம்			
அரச, தனியார் துறை மற்றும் அரச சார்பற்ற துறை	2.00	2.8	06	03	2.7
மொத்தம்	**2.0**	**2.8**	**06**	**03**	**2.7**

நிதியுதவி விருதளிக்கப்பட்டமை தொடர்பான விபரங்கள் தனித்தனியே பின்வருமாறு விரிவாக விபரிக்கப்பட்டுள்ளன.

5.1.1 அரச துறையிலுள்ள தொழிற்பயிற்சி நிறுவகங்களுக்காக நிதியுதவி விருதளித்தல்

இவ்வேலைத்திட்டத்தின் குறிக்கோள் யாதெனில் ஆணைக்குழுவால் தயாரிக்கப்பட்ட தொழிற் கல்வி மற்றும் பயிற்சி (VET) திட்டங்கள் மற்றும் தொழிற்சந்தைத் தகவல் பகுப்பாய்வு ஆகியவற்றினூடாக கண்டறியப்பட்ட பயிற்சி வேலைத்திட்டங்களை அரச துறை பயிற்சி நிறுவகங்களில் செயற்படுத்துவதற்கு தேவையான உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கான நிதியுதவியினை விருதளிப்பதேயாகும். கண்டறியப்பட்ட பாடநெறிகள் தேசிய தேர்ச்சி தரங்களுக்கமைவாக தராதர அங்கீகாரம் செய்யப்பட்டு தேசிய தொழிற்திறன் தகுதிச் (NVQ) சான்றிதழ்களை வழங்குவதற்கான சந்தர்ப்பமும் இங்கு காணப்படுகின்றது. நிதியுதவி பெற்றுக்கொண்ட பெரும்பாலான பயிற்சி நிறுவகங்கள் தமது பாடநெறிகளின் தரத்தினை உயர்வாக பேணி வருகின்றன.

2017 ஆம் ஆண்டில் திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி அமைச்சின் கீழ் செயற்படும் தொழில்நுட்ப கல்வி மற்றும் பயிற்சி திணைக்களம் மற்றும் இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை ஆகியவற்றினால் நடாத்தப்படும் மூன்று மாத குறுகிய கால பாடநெறிகளின் பொருட்டு தராதர அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்வதற்கு அவசிய பயிற்சி உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கான நிதியுதவியினை வழங்குவதற்கு ஆணைக்குழுவானது தீர்மானித்தது. அதற்கிணங்க, அப் பாடநெறிகள் தொடர்பான விண்ணப்பங்கள் கோரப்பட்டதுடன் இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையின் மூன்று மத்திய நிலையங்கள் தொடர்பாக நிதியுதவிகளை விருதளிப்பதற்கு சிபார்சு செய்யப்பட்டது. இந் நிறுவகங்கள் மூலம் நடாத்தப்பட்டுவரும் தெரிவுசெய்யப்பட்ட பாடநெறிகளிற்கு அவசியமான உபகரணங்களை கொள்வனவு செய்வது தொடர்பான கூறுவிலை கோரல்கள் குறித்த காலப்பகுதியினுள் முன்வைக்கப்படாமையினால் நிதியுதவிகள் விருதளிக்கப்படவில்லை.

5.1.2 தனியார் மற்றும் அரச சார்பற்ற துறை பயிற்சி நிறுவகங்களுக்கு நிதியுதவியினை வழங்குதல்

2015 ஆம் ஆண்டில் தனியார் மற்றும் அரசசார்பற்ற துறை பயிற்சி நிறுவகங்களால் நடாத்தப்படும் பாடநெறிகளின் தரத்தையும் சார்புத்தன்மையும் மேலுயர்த்துவதன் நிமித்தம் நிதியுதவி வழங்குவதற்காக ரூபா 2.8 மில்லியன்கள் நிதித்தொகையானது (திருத்தஞ் செய்யப்பட்ட வருடாந்த செயலாக்கத் திட்டத்தின் பிரகாரம்) ஒதுக்கப்பட்டிருந்தது. அதற்கமைய, கிடைக்கப்பெற்ற 52 விண்ணப்பங்களுள் தேர்ந்தெடுக்கப்பட்ட 03 பயிற்சி நிறுவகங்கள் பௌதீக ரீதியாக மதிப்பீடு செய்யப்பட்டு அவற்றுள் தகுதியான 03 பயிற்சி நிறுவகங்கள் மாத்திரமே நிதியூதவி விருதளிப்பதற்காக தெரிவு செய்யப்பட்டன.

அதற்கிணங்க, 2015 ஆம் ஆண்டில் திருத்தப்பட்ட ஒதுக்கீட்டினை நிதியுதவியின் பொருட்டு 96 சதவீதமாக அதிகரிக்க முடிந்தது. தனியார் / அரச சார்பற்ற துறைசார் ஒவ்வொரு பயிற்சி நிறுவகங்களுக்கும் விருதளிக்கப்பட்ட நிதியுதவியானது கீழே தரப்பட்டுள்ள அட்டவணை 5.2 இல் காட்டப்பட்டுள்ளது.

அட்டவணை 5.2: தனியார் மற்றும் அரச சார்பற்ற துறை பயிற்சி நிறுவகங்களுக்கு விருதளிக்கப்பட்ட நிதியூதவி - 2017


2017 ஆம் ஆண்டில் நிதியுதவி விருதளிக்கப்பட்ட நிறுவகங்கள் பற்றிய விபரங்கள்

இல.	நிறுவகத்தின் பெயர்	கைத்தொழிற் துறை	பயிற்சிநெறி மற்றும் எதிர்பார்க்கும் NVQ மட்டம்	அனுமதிக்கப்பட்ட நிதித்தொகை (ரூபா)
1.	டொன் பொஸ்கோ தொழிற்பயிற்சி நிறுவகம் நொச்சியாகம	சக்கர எலைன்மன்ட்	3 ஆம் மட்டம்	237.650.00
		வெதுப்புநர் (பாண் மற்றும் பேஷ்ட்ரி)	3 ஆம் மட்டம்	1.026.760.00
		குழாய் பொருத்துநர்	3 ஆம் மட்டம்	240.478.00
		மர வேலை (கட்டுமானம்)	3 ஆம் மட்டம்	67.238.50
2.	டொன் பொஸ்கோ	பயிலுநர்கள் தொடர்பான தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம்	3 ஆம் மட்டம்	596.400.00
3.	டொன் பொஸ்கோ தொழிற்பயிற்சி நிறுவகம் மட்டியாகனய	பயிலுநர்கள் தொடர்பான தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம	3 ஆம் மட்டம்	518.000.00
அனுமதிக்கப்பட்ட மொத்த நிதி				**2.686.526.50**

அட்டவணை 5.3 : கைத்தொழிற் துறை ரீதியிலான நிதியுதவி விருதளிப்பு தொடர்பான பகுப்பாய்வு (தனியார் மற்றும் அரச சார்பற்ற நிறுவகங்கள்)

கைத்தொழிற் துறை	பாடநெறிகளின் எண்ணிக்கை	அனுமதிக்கப்பட்ட நிதித்தொகை (ரூபா)	சதவீதம் (%)
தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம்	02	1,114,400.00	41.5%
ஹோட்டல் மற்றும் சுற்றுலா	01	1,026,760.00	38.2%
கட்டுமானம்	02	307,716.50	11.5%
மோட்டார் வாகன தொழில்நுட்பம்	01	237,650.00	8.8%
மொத்தம்	**06**	**2,686,526.50**	**மொத்தம்**

வரைப்படம் 5.1: கைத்தொழிற்துறை ரீதியிலான நிதியுதவி விருதளிப்பு - தனியார் மற்றும் அரச சார்பற்ற நிறுவகங்கள்



2017 ஆம் ஆண்டில் ஒவ்வொரு துறை ரீதியாக விருதளிக்கப்பட்ட நிதித்தொகை பற்றிய விபரங்கள் அட்டவணை 5.3 இலும் அது தொடர்பான பகுப்பாய்வானது வரைபடம் 5.1 இலும் விபரிக்கப்பட்டுள்ளன.

5.1.3 பாடநெறிகளுக்காக நிதியுதவி விருதளிக்கப்பட்ட பயிற்சி நிறுவகங்களில் கண்காணிப்பு வேலைத்திட்டத்தை செயற்படுத்துதல்

மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவில் பதிவுசெய்யப்பட்டுள்ள அரச, தனியார் துறை பயிற்சி நிறுவகங்களுக்கு விருதளிக்கப்படும் நிதியுதவி முறையாக பயன்படுத்தப்பட்டுள்ளதா என்பதைக் கண்டறிவதற்காக இவ்வாணைக்குழு வருடந்தோறும் கண்காணிப்பு வேலைத்திட்டமொன்றை செயற்படுத்தி வருகின்றது.

இவ்வேலைத்திட்டத்தின் கீழ் 2014, 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் ஆணைக்குழுவினால் நிதியுதவி வழங்கப்பட்ட பயிற்சி நிறுவகங்களிற்கு சென்று இவ்வாணைக்குழு அவற்றினை மதிப்பீட்டிற்கு உட்படுத்தியதுடன், அந்தவகையில் நிதியுதவி விருதளிக்கப்பட்ட 16 பாடநெறிகள் தொடர்பாக ஆராய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

இக்கண்காணிப்பு வேலைத்திட்டத்தின் மூலம் கண்டறியப்பட்டதன் பிரகாரம் நிதியுதவி வழங்கப்பட்ட தனியார் துறை பயிற்சி நிறுவகங்களால் நடாத்தப்படும் 73% ஆன பாடநெறிகளிற்கு தராதர அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. மற்றைய பாடநெறிகளுக்கான தராதர அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கான அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டுக் கொண்டிருந்தமையினை காணக்கூடியதாயிருந்தது. நிதியுதவி பெற்றுக்கொண்ட அரச துறை பயிற்சி நிறுவகங்களில் நடாத்தப்படும் பாடநெறிகளில் 64% ஆன பாடநெறிகளிற்கான தராதர அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தமையினை காணக்கூடியதாக இருந்தது.

5.2 தொழிற் கல்வி மற்றும் பயிற்சித் திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் அவற்றை நாளதுவரையாக்கல்

திட்டமிடல் மற்றும் ஆராய்ச்சி பிரிவானது தொழிற் கல்வி மற்றும் பயிற்சி துறையிற்கான பயிற்சி தேவைப்பாடுகளை இனங்கண்டுகொள்வதற்கு தொழிற் கல்வி மற்றும் பயிற்சி (VET) திட்டங்களை தயாரித்து வருகின்றது. இவ்வேலைத்திட்டத்தின் கீழ் புதிய தொழிற்கல்வி மற்றும் பயிற்சி திட்டங்கள் தயாரிக்கப்பட்டுவருவதுடன் ஏற்கனவே தயாரிக்கப்பட்ட திட்டங்களும் நாளதுவரையாக்கப்பட்டும் வருகின்றன. 2017 ஆம் ஆண்டு நிறைவடையும் போது 21 தொழிற்கல்வி மற்றும் பயிற்சி திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் 15 திட்டங்கள் நாளதுவரையாக்கப்பட்டுள்ளன.

5.2.1 தொழிற் கல்வி மற்றும் பயிற்சித் திட்டங்களை நாளதுவரையாக்கல்

- தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பவியல் துறை

தொழிற் கல்வி மற்றும் பயிற்சித் திட்டங்களை நாளதுவரையாக்கல் வேலைத்திட்டத்தின் கீழ் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பவியல் துறைக்கான திட்டத்தை நாளதுவரையாக்குவத்றகான அலுவல்கள் 2015 ஆம் ஆண்டின் இறுதிக் காலாண்டில் ஆரம்பிக்கப்பட்டதோடு இவ் அறிக்கையினை தயாரிக்கும் பணிகள் இவ் வருடத்தில் நிறைவுபெற்றுள்ளது.

5.2.2 தொழிற் கல்வி மற்றும் பயிற்சித் திட்டங்களை மொழிபெயர்ப்பு செய்தல்

வடமத்திய மாகாணத்திற்காக தயாரிக்கப்பட்ட தொழிற்கல்வி மற்றும் பயிற்சி திட்டத்தினை சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய மொழிகளிற்கும் மற்றும் வயம்ப மாகாணத்திற்குரிய தொழிற்கல்வி மற்றும் பயிற்சி திட்டத்தினை தமிழ் மொழியிற்கும் மொழிபெயரப்பு செய்து ஆணைக்குழுவின் இணையத்தளத்தில் வெளியீடு செய்யப்பட்டுள்ளது. இதற்காக 2017 ஆம் ஆண்டில் ரூபா 0.218 மில்லியன் நிதித் தொகையானது செலவுசெய்யப்பட்டுள்ளது

5.2.3 தொழிற் கல்வி மற்றும் பயிற்சித் திட்டங்கள் தொடர்பான சாரம்சங்களை தயாரித்தல்

2017 ஆம் ஆண்டு நிறைவடையும் போது தென், சப்ரகமுவ, வயம்ப, கிழக்கு, வடக்கு, ஊவா, மத்திய மற்றும் வடமத்திய ஆகிய மாகாணங்களுக்கான மாகாண தொழிற் கல்வி மற்றும் பயிற்சி திட்டங்கள் தொடர்பான

விவரகுறிப்புக்களை தயாரிக்கும் செயற்பாடானது நிறைவுசெய்யப்பட்டுள்ளது. அதன்மூலம், கட்டுமான துறை மற்றும் விருந்தோம்பல் முகாமைத்துவ துறை ஆகியன தொடர்பாக மாகாண ரீதியான தொழிற்கல்வி மற்றும் பயிற்சி திட்டங்கள் தொடர்பான முக்கிய தகவல்களை சாரம்சமாக வெளியிட முடிந்துள்ளது.

5.3 தொழில்நுட்ப மற்றும் தொழிற் கல்வி மற்றும் பயிற்சித் துறையில் ஆராய்ச்சிக் கற்கைகளை செயற்படுத்தல்

திட்டமிடல் மற்றும் ஆராய்ச்சிப் பிரிவினால் மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவில் ஆராய்ச்சி சிற்றறை (Research Cell) ஆனது நடாத்தப்பட்டு வருகின்றது. 2005 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இச் சிற்றறை ஆனது இது வரையில் தொழில்நுட்ப மற்றும் தொழிற் துறைக்கு முக்கியமான பல ஆராய்ச்சி முடிவுகளை வெளிக்கொண்டு வருவதற்காக நிதிசார் மற்றும் தொழில்நுட்ப உதவிகளை வழங்குகின்றது. அத்துடன், நிறைவு செய்யப்பட்ட ஆராய்ச்சிக் கற்கைகள் தொடர்பான அறிக்கைகள் ஆணைக்குழு இணைய தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன.

2017 ஆம் ஆண்டில் ஆராய்ச்சிச் சிற்றறையால் பின்வரும் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

5.3.1 புதிய ஆராய்ச்சிக் கற்கைகள்

2017 ஆம் ஆண்டு காலப்பகுதியில், திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி அமைச்சின் கீழ் இயங்குகின்ற பயிற்சி வழங்கும் நிறுவகங்களிடமிருந்து ஆராய்ச்சி யோசனைகள் கோரப்பட்டன. இவ் ஆராய்ச்சிகளின் தரங்களினை பேணும் பொருட்டு ஆராய்ச்சி செயற்பாடுகளை வழிநடத்துதல் மற்றும் அவசிய ஆலோசனைகளை வழங்குதல் போன்றன மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் ஆராய்ச்சி சிற்றறை மற்றும் திறன்கள் அபிவிருத்தி திட்டத்தின் ஆலோசகர் ஆகியோரால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதற்கமைய, பல்வேறு நிறுவகங்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் 26 ஆராய்ச்சி யோசனைப் பத்திரங்கள் ஆராய்ச்சி சிற்றறையிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. அவ் யோசனைப் பத்திரங்கள் திறன்கள் அபிவிருத்தி திட்டத்தின் ஆலோசகரினால் மதிப்பீடு செய்யப்பட்டதன் பிற்பாடு துறைக்கு உகந்த, காலத்திற்கேற்ற எட்டு (08) ஆராய்ச்சி கற்கைகளுக்கான அனுமதி ஆணைக்குழுவிடம் இருந்து பெறப்பட்டுள்ளது. இதற்காக ரூபா 1.0 மில்லியன் நிதித்தொகையானது திறன்கள் அபிவிருத்தி திட்டத்தின் மூலம் செலவிடப்பட்டுள்ளது. ஆராய்ச்சிக் கற்கைள் ஒவ்வொன்றுக்கும் செலவு செய்வதற்காக ஒதுக்கப்பட்ட நிதித் தொகை தொடர்பான விபரங்கள் கீழே தரப்பட்டுள்ள அட்டவணை இல 5.5 இல் காட்டப்பட்டுள்ளது.

அட்டவணை 5.5: திறன்கள் அபிவிருத்தி திட்டத்தினால் நிதியுதவி அளிக்கப்பட்ட ஆராய்ச்சி கற்கைகள் 2017

இல	ஆராய்ச்சி தலைப்பு	ஆராய்ச்சிக் குழு	அனுமதிக்கப்பட்ட தொகை (ரூபா)	2017 ஆம் ஆண்டில் செலவிடப்பட்ட தொகை (ரூபா)	2018 ஆம் ஆண்டில் செலுத்த வேண்டிய தொகை (ரூபா)
1.	மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி துறையில் இடம்பெறும் கட்டுமானம் மற்றும் விருந்தோம்பல் முகாமைத்துவ துறைசார் பாடநெறிகளின் பொருட்டு குறைந்தளவான பெண்களின் பங்குபெறல் தொடர்பான கற்கை	வாழ்க்கைத் தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகம்	210,000.00	105,000.00	105,000.00

இல	ஆராய்ச்சி தலைப்பு	ஆராய்ச்சிக் குழு	அனுமதிக்கப்பட்ட தொகை (ரூபா)	2017 ஆம் ஆண்டில் செலவிடப்பட்ட தொகை (ரூபா)	2018 ஆம் ஆண்டில் செலுத்த வேண்டிய தொகை (ரூபா)
2.	இலங்கையில் கட்டுமான துறைசார் திறன்மிக்க தொழிலாளர்கள் தொடர்பான பற்றாக்குறைக்கான காரணங்கள் மற்றும் அவற்றிற்கான தீர்வுகளை காணுதல் என்பன தொடர்பான கற்கை	வாழ்க்கைத் தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகம்	200,000.00	100,000.00	100,000.00
3.	மேல் மாகாணத்தில் தற்கால தொழிலாளர் சந்தையில் தொழில்நுட்ப கல்வி மற்றும் பயிற்சி திணைக்களத்தின் தொலைக்காட்சி, வானெ-ாலி மற்றும் அவற்றுடன் தொடர்புடைய உபகரணங்களை திருத்துதல் பாடநெறியினை தொடரும் மாணவர்களின் கைத்தொழில்நிறுவக பயிற்சியின் பொருத்தப்பாடு தொடர்பான கற்கை	தொழில்நுட்ப கல்வி மற்றும் பயிற்சி திணைக்களம்	120,000.00	60,000.00	60,000.00
4.	இரத்தினபுரி மாவட்ட இளைஞரிடத்தில் தொழில்வாய்ப்பின்மை இனை குறைக்கும் பொருட்டு தொழில்நுட்ப கல்வியின் செயற்பாடுகள் தொடர்பான கற்கை	தொழில்நுட்ப கல்வி மற்றும் பயிற்சி திணைக்களம்	100,000.00	50,000.00	50,000.00
5.	தொழில்நுட்ப கல்வி மற்றும் பயிற்சி திணைக்களத்தின் பாடநெறிகளை பயிலும் மற்றும் பாடநெறிகளை பயின்றதன் பின்னர் தொழில்வாய்ப்புகளை பெற்றுக்கொள்ளல் என்பன தொடர்பான பின்னூட்டல் கற்கை (கண்டி, இரத்தினபுரி மற்றும் குருணாகல் ஆகிய மாவட்டங்களிலுள்ள தொழில்நுட்ப கல்வி மற்றும் பயிற்சி திணைக்களத்தின் மத்திய நிலையங்கள் மூலம் மேற்கொள்ளப்படும் பாட-நெறிகளின் பொருட்டு விசேட கவனம் செலுத்தப்பட்டு கற்கை மேற்கொள்ளப்படும்)	தொழில்நுட்ப கல்வி மற்றும் பயிற்சி திணைக்களம்	84,000.00	42,000.00	42,000.00

இல	ஆராய்ச்சி தலைப்பு	ஆராய்ச்சிக் குழு	அனுமதிக்கப்பட்ட தொகை (ரூபா)	2017 ஆம் ஆண்டில் செலவிடப்பட்ட தொகை (ரூபா)	2018 ஆம் ஆண்டில் செலுத்த வேண்டிய தொகை (ரூபா)
6.	இலங்கையில் தொழில்நுட்ப கல்வி மற்றும் பயிற்சி திணைக்களத்தின் தொழில்வாய்ப்பு எண்ணிக்கையினை அதிகரிக்கும் பொருட்டு தே. தொ. த மட்டம் 04 தொடர்பான கணிப்பீடுகள் பற்றிய கற்கை	தொழில்நுட்ப கல்வி மற்றும் பயிற்சி திணைக்களம்	80,000.00	40,000.00	40,000.00
7.	உலோக மற்றும் மென் உலோ-காக பொறியியற் துறையில் வாயு மற்றும் ஆர்க் வெல்டிங் கைவினைஞர்களின் முறை-யான தொழிற்கல்வியானது தொழிலாளர் சந்தைகளில் தொழில்வாய்ப்புகளை பெற்றுக்கொள்வதில் எவ்வாறு செல்வாக்கு செலுத்துகின்றது என்பது தொடர்பான ஆய்வு	தொழில்நுட்ப கல்வி மற்றும் பயிற்சி திணைக்களம்	120,000.00	60,000.00	60,000.00
8.	இலங்கையிலுள்ள தொழில்நுட்ப கல்வி மற்றும் தொழிற்பயிற்சி நிறுவகங்களின் சேவை-களின் தரம் தொடர்பான மாணவர்களின் கருத்து தொடர்பான கற்கை	மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு மற்றும் இலங்கை தொழிற்பயிற்சி அதி-காரசபை	120,000.00	60,000.00	60,000.00
மொத்தம்			**1.034.000.00**	**517.000.00**	**517.000.00**

2017 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட ஆராய்ச்சி கற்கைகளுக்காக ரூபா 0.517 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது. அதற்கமைய 2017 ஆம் ஆண்டிற்காக அனுமதிக்கப்பட்ட ஒதுக்கீட்டு நிதித்தொகையில் 50% செலவிடுவதற்கு முடிந்துள்ளது. மிகுதித் தொகை ஆராய்ச்சிக் கற்கைகள் நிறைவடைந்தவுடன் 2018 ஆம் ஆண்டில் செலுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

5.3.2 ஆராய்ச்சி மாநாடு மற்றும் ஆராய்ச்சி செயலமர்வு என்பவற்றினை நடாத்துதல்

5.3.2.1 ஆராய்ச்சி மாநாடுஸ

மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுயின் மூலம் 05 ஆவது ஆராய்ச்சி மாநாடானது 2017 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 10 ஆம் தியதியன்று நடாத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அதில் ஆராய்ச்சி சிற்றறை மூலம் 2016 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட 11 ஆராய்ச்சி கற்கைகளை வெளியிட்டுவைக்கும் நிகழ்வானது திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி அமைச்சின் பிரதி அமைச்சரின் தலைமையின் கீழும் மற்றும் சம்பந்தப்பட்ட நிறுவகங்களின் அதிகாரிகளின் பங்குபற்றல்களுடனும் இடம்பெற்றது.

5.3.2.2 ஆராய்ச்சி செயலமர்வு

தொழில்நுட்ப மற்றும் தொழிற்பயிற்சி துறைசார ஆராய்ச்சி செயற்பாடுகளை முறையாக மேற்கொள்ளும் நோக்கில் ஆராய்ச்சியாளர்களை பயிற்றுவிக்கும் மூன்று (03) செயலமர்வுகள் மேற்கொள்ளப்பட்டன. அதற்காக 2017 ஆம் ஆண்டில் ரூபா 128,965.00 நிதித்தொகையானது செலவுசெய்யப்பட்டுள்ளது.

6.0 பாடநெறிகளின் பதிவு, தராதர அங்கீகாரம் மற்றும் தர முகாமைத்துவ முறைமைகள் பிரிவு

1990 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி சட்டம் மற்றும் தொழிற்பயிற்சி நிறுவகங்களை பதிவுசெய்வதற்கான அபிவிருத்தி திட்டம் ஆகியவற்றுக்கு இணங்க (1995 ஆம் ஆண்டு செப்தெம்பர் மாதம் 05 ஆந் திகதிய) மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவானது அனைத்து தொழிற்பயிற்சி நிறுவகங்களின் பொருட்டும் பல்வேறுபட்ட தர உத்தரவாத முறைகளை பின்பற்றி வருகின்றது. அதற்கிணங்க,

1 தொழிற்பயிற்சி நிறுவகங்களை பதிவு செய்தல்

2 தேசிய தொழிற்தகைமை (NVQ) சான்றிதழ்களை விருதளிக்கும் பொருட்டு பயிற்சி பாடநெறிகளுக்கு தராதர அங்கீகாரம் அளித்தல்

3 தர முகாமைத்துவ முறைமையினை ஸ்தாபித்தல் மற்றும் சான்றளித்தல்

மேற்கூறப்பட்ட மூன்று (03) பணிகளை நிறைவேற்றுவதற்காக இப்பிரிவானது 09 பேர் கொண்ட பதவியணியொன்றினை கொண்டிருப்பதுடன் இப்பதவியணியில் பணிப்பாளர் ஒருவர் (01), பிரதிப் பணிப்பாளர் ஒருவர் (01), உதவிப் பணிப்பாளர்கள் மூவர் (03), அபிவிருத்தி உத்தியோகத்தர் ஒருவர் (01), நிகழ்ச்சித்திட்ட ஒருங்கிணைப்பு அலுவலர் ஒருவர் (01), முகாமைத்துவ உதவியாளர் ஒருவர் (01) மற்றும் அலுவலக உதவிப் பணியாளரொருவர் (01) உள்ளடங்கியுள்ளனர்.

6.1 தொழிற்பயிற்சி நிறுவகங்களை பதிவு செய்தல்

தொழிற்பயிற்சி வழங்கும் நிறுவகங்கள் பதிவுசெய்யப்படுதல் அத்தியவசியமான ஒன்றாகும் அத்துடன் நாட்டில் செயற்பட்டுவரும் அனைத்து தொழிற்பயிற்சி நிறுவகங்களும் இவ்வாணைக்குழுவில் பதிவு செய்யப்படுதல் சட்டரீதியாக அவசியமான ஒன்றாகும். (மேலே குறிப்பிடப்பட்டுள்ள சட்டமூலத்திற்கு அமைவாக) நிறுவகத்தை பதிவு செய்கையில் அந்நிறுவகத்தின் உள்கட்டமைப்பு வசதிகள், பயிற்சிக்கு தேவையான உபகரணங்கள், பயிற்றுவிப்பாளர்களின் தகைமைகள், பயிற்சி வழங்கல் மற்றும் கணிப்பீடுகளை மேற்கொள்ளும் விதம், பாடத்திட்டத்தின் அளவு ஆகிய பிரமாணங்கள் தொடர்பாக நிறுவகங்கள் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட்டு அதற்கிணங்க நிறுவகங்கள் இரண்டு (02) வருட காலப்பகுதிக்கு நிறுவகங்கள் ஆணைக்குழுவில் பதிவு செய்யப்படுகின்றன.

2017 ஆம் ஆண்டில் இவ்வாணைக்குழுவின் வருடாந்த செயலாக்கல் திட்டத்தின் பிரகாரம் பதிவினை மேற்கொள்வதற்காக 360 பயிற்சி நிறுவகங்களில் மதிப்பீட்டினை நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன் அவ்வாண்டில் 719 பயிற்சி நிறுவகங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு அவற்றில் 433 நிறுவகங்களுக்கான பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அட்டவணை (i) - நிறுவகங்களை பதிவுசெய்தல் (புதிய மற்றும் நாளாதுவரையாக்கல்)

2017	நிறுவகங்களின் எண்ணிக்கை
இலக்காக கொள்ளப்பட்ட நிறுவகங்களின் எண்ணிக்கை	360
பதிவுசெய்யப்பட்ட நிறுவகங்களின் எண்ணிக்கை	433


ஏனைய நிறுவகங்கள் நிபந்தனைகளை பூர்த்திசெய்வதில் குறைபாடுகள் காணப்பட்டமையினால் அவை தொடர்பான பதிவுகள் மேற்கொள்ளப்படவில்லை.

அட்டவணை (ii) - 2017 ஆம் ஆண்டில் பதிவு மேற்கொள்ளப்பட்ட நிறுவகங்கள் தொடர்பான தகவல்கள் அவற்றின் வகைகளின் அடிப்படையில் கீழே காட்டப்பட்டுள்ளன.

நிறுவக வகை	எண்ணிக்கை (புதிய)	எண்ணிக்கை (புதுப்பித்தல்)	மொத்தம்
அரச நிறுவகங்கள்	15	50	
நியதிச்சட்ட அமைப்புகள் அல்லது கூட்டுத்தாபனங்கள், சபைகள்	7	118	
அரச சார்பற்ற அமைப்புகள்	-	10	
தனியார் நிறுவகங்கள்	97	136	
மொத்தம்	**119**	**314**	**433**

அட்டவணை 6ைைரூ - 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2017 ஆம் ஆண்டில் புதிதாக பதிவு செய்யப்பட்ட நிறுவகங்களின் எண்ணிக்கை

நிறுவக வகை	2016	2017
அரச நிறுவகங்கள்	60	15
நியதிச்சட்ட அமைப்புகள் அல்லது கூட்டுத்தாபனங்கள், சபைகள்	13	7
தனியார் நிறுவகங்கள்	102	97
மொத்தம்	**193**	**119**



இதற்கு மேலதிகமாக, பதிவுகள் புதுப்பிக்கப்பட்ட நிறுவகங்களின் எண்ணிக்கை 314 ஆகும் என்பதோடு அவை தொடர்பான விபரங்கள் அட்டவணை 6ைைரூ இல் காட்டப்பட்டுள்ளன.

அட்டவணை (iv) -

2017	நிறுவகங்களின் எண்ணிக்கை
இலக்காக கொள்ளப்பட்ட நிறுவகங்களின் எண்ணிக்கை	400
பதிவுகள் புதுப்பிக்கப்பட்ட நிறுவகங்களின் எண்ணிக்கை	314

2017 ஆம் ஆண்டில் பதிவுகள் புதுப்பிக்கப்பட்ட நிறுவகங்களின் எண்ணிக்கைகள் தொடர்பான விபரங்கள் கீழே அட்டவணை 6ைைரூ இல் காட்டப்பட்டுள்ளன.

அட்டவணை (v) -

நிறுவகம்		புதுப்பிக்கப்பட்ட எண்ணிக்கை
1.	அரச நிறுவகங்கள்	50
2.	நியதிச்சட்ட அமைப்புகள் அல்லது கூட்டுத்தாபனங்கள், சபைகள்	118
3.	அரச சார்பற்ற அமைப்புகள்	10
4.	தனியார் நிறுவகங்கள்	136
		314

6.2 தேசிய தொழிற் திறன் தகுதி (NVQ) சான்றிதழ்களை விருதளிப்பதற்கு பாடநெறிகளுக்கு தராதர அங்கீகாரம் அளித்தல்

தேசிய தொழிற் திறன் தகுதிகள் (NVQ) சட்டகமானது 2004 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதுடன் பாடநெறிகளுக்கு தராதர அங்கீகாரங்களை அளிப்பதன் பிரதான நோக்கமாவது பாடநெறிகளின் தரங்களை மேம்படுத்துவதற்காகும். மேலும் பாடநெறிகளிற்கு தேசிய தொழிற் திறன் தகுதிகளை (NVQ) விருதளிப்பதற்காக நிறுவகங்கள் பதிவுசெய்யப்படுதல் அத்தியவசியமாகும். தராதர அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள பாடநெறிகளிற்கு மட்டும் தேசிய தொழிற் திறன் தகுதிகள் (NVQ) சான்றிதழ்களை விருதளிப்பதற்கான தகைமையாக காணப்படுவதுடன் தேசிய தேர்ச்சி நியமமத்திற்குரிய தேர்ச்சிகளை உள்ளடக்கிய பக்கேஜ் (Package) இற்கு ஏற்ப தயாரிக்கப்படும் பாடத்திட்டத்திற்கு இணங்க பயிற்சிகள் அளிக்கப்படல் வேண்டும்.

2017 ஆம் ஆண்டில் தராதர அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ள பாடநெறிகளின் எண்ணிக்கையானது கீழே தரப்பட்டுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

அட்டவணை ருஎரூ - 2017

2017	பாடநெறிகளின் எண்ணிக்கை
இலக்கிடப்பட்ட பாடநெறிகளின் எண்ணிக்கை	500
தராதர அங்கீகாரம் அளிக்கப்பட்ட பாடநெறிகளின் எண்ணிக்கை	573

இங்கு எதிர்பார்க்கப்பட்ட இலக்கினையும் விஞ்சிய முறையில் பாடநெறிகளுக்கான தராதர அங்கீகாரங்களை அளிப்பதற்கு ஆணைக்குழுவிற்கு முடிந்துள்ளது.

அரச துறை பயிற்சி நிறுவகங்களிற்கான பாடநெறிகளிற்கான தராதர அங்கீகாரம் அளிப்பானது 2285 வரையில் அதிகரித்துள்ளதுடன் தனியார் மற்றும் அரச சார்பற்ற துறை பயிற்சி நிறுவகங்களிற்கான தராதர அங்கீகார அளிப்பானது 947 வரையில் அதிகரித்துள்ளது.

அதன் பிரகாரம், 2017 ஆம் ஆண்டு முடிவடையும் போது 3232 பாடநெறிகளிற்கு தராதர அங்கீகாரங்கள் அளிக்கப்பட்டுள்ளதுடன் அதன் மூலம் அப் பாடநெறிகள் தேசிய தொழிற் திறன் தகுதிகளை (NVQ) விருதளிப்பதற்கான தகுதியினை பெற்றுள்ளன.

6.3 பதிவுசெய்யப்பட்ட தொழிற்பயிற்சி நிறுவகங்களினால் வழங்கப்பட்ட சான்றிதழ்களை சான்றுப்படுத்தும் செயன்முறை

தொழிற்பயிற்சி நிறுவகங்களினால் விருதளிக்கப்பட்டுள்ள சான்றிதழ்களின் சான்றளித்தலானது வெளிநாட்டு வேலைவாய்ப்புகளை எதிர்பார்த்துள்ளோருக்கு அவசியமாக காணப்படுவதுடன் இது தொடர்பாக வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சிற்கு இவ்வாறு சான்றளிக்கப்பட்ட 2300 இற்கும் மேற்பட்ட எண்ணிக்கையான ஆவணங்கள் வழங்கப்பட்டுள்ளன. இங்கு உரிய தொழிற்பயிற்சி நிறுவகத்தின் பதிவு மற்றும் அதன் விபரங்கள் இவ் ஆவணங்களில் குறிப்பிடப்படுகின்றன.

மேலும், அரச நிறுவகங்களில் ஆட்சேர்ப்பினை மேற்கொள்வதற்கு இவ்வாறு சான்றளிக்கப்பட்ட 327 சான்றிதழ்கள் 2017 ஆம் ஆண்டில் வெளியீடு செய்யப்பட்டுள்ளன.

6.4. தொழிற்பயிற்சி நிறுவகங்களில் தர முகாமைத்துவ முறைமையினை ஸ்தாபித்தல் செயன்முறை மற்றும் சான்றிதழ் வழங்குதல்

2017 ஆம் ஆண்டில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள 76 தொழிற்பயிற்சி நிறுவகங்கள் தொடர்பாக இரண்டு வெளிவாரி தர முகாமைத்துவ கணக்காய்வுகள் வீதம் மேற்கொண்டு தர முகாமைத்துவ முறைமையினை ஸ்தாபிப்பதன் பொருட்டு சான்றிதழ்கள் விருதளிக்கப்பட்டுள்ளன. இவ்வாறு விருதளிக்கப்பட்டுள்ள சான்றிதழ்கள் மூன்று வருடங்களிற்கு செல்லுபடியாகும்.

	தொழிற்பயிற்சி நிறுவகத்தின் பெயர்	விருதளிக்கப்பட்ட திகதி	காலாவதியாகும் திகதி
	இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை		
1	இலங்கை தொழிற்பயிற்சி நிறுவகம் - பண்டாரகம	1/19/2017	1/18/2020
2	இலங்கை தொழிற்பயிற்சி நிறுவகம் - பிபிலை	2/16/2017	2/15/2020
3	இலங்கை தொழிற்பயிற்சி நிறுவகம் - மொனராகலை	3/23/2017	3/22/2020
4	இலங்கை தொழிற்பயிற்சி நிறுவகம் - பாதுக்கை	3/23/2017	3/22/2020
5	இலங்கை தொழிற்பயிற்சி நிறுவகம் - கந்தளாய்	3/23/2017	3/22/2020
6	இலங்கை தொழிற்பயிற்சி நிறுவகம் - தம்புத்தேகம	4/25/2017	4/24/2020
7	இலங்கை தொழிற்பயிற்சி நிறுவகம் - திக்வெல்ல	4/25/2017	4/24/2020
8	இலங்கை தொழிற்பயிற்சி நிறுவகம் - ஊருபொக்க	4/25/2017	4/24/2020
9	இலங்கை தொழிற்பயிற்சி நிறுவகம் - ரகுணுகம	5/19/2017	5/18/2020
10	இலங்கை தொழிற்பயிற்சி நிறுவகம் - மொரவக்க	5/19/2017	5/18/2020
11	இலங்கை தொழிற்பயிற்சி நிறுவகம் அத்திமலை	5/19/2017	5/18/2020
12	இலங்கை தொழிற்பயிற்சி நிறுவகம் - மடுல்ல	5/19/2017	5/18/2020
13	இலங்கை தொழிற்பயிற்சி நிறுவகம் - ரன்முத்துகல	5/19/2017	5/18/2020
14	இலங்கை தொழிற்பயிற்சி நிறுவகம் - கடுகஸ்தோட்டை	5/19/2017	5/18/2020
15	இலங்கை தொழிற்பயிற்சி நிறுவகம் - வலான	5/19/2017	5/18/2020
16	இலங்கை தொழிற்பயிற்சி நிறுவகம் - கும்பல்கம	5/19/2017	5/18/2020
17	இலங்கை தொழிற்பயிற்சி நிறுவகம் - கம்பஹா	7/26/2017	7/25/2020
18	இலங்கை தொழிற்பயிற்சி நிறுவகம் - அகுரஸ்ஸ	7/26/2017	7/25/2020
19	இலங்கை தொழிற்பயிற்சி நிறுவகம் - களுத்துறை வடக்கு	7/26/2017	7/25/2020
20	இலங்கை தொழிற்பயிற்சி நிறுவகம் - கண்டி	8/24/2017	8/23/2020
21	இலங்கை தொழிற்பயிற்சி நிறுவகம் - கொன்னன்தர	8/24/2017	8/23/2020
22	இலங்கை தொழிற்பயிற்சி நிறுவகம் - பரமுல்ல	8/24/2017	8/23/2020

	தொழிற்பயிற்சி நிறுவகத்தின் பெயர்	விருதளிக்கப்பட்ட திகதி	காலாவதியா-கும் திகதி
23	இலங்கை தொழிற்பயிற்சி நிறுவகம் - வீரவில	10/24/2017	10/23/2020
24	இலங்கை தொழிற்பயிற்சி நிறுவகம் - ஹிக்கடுவ	10/24/2017	10/23/2020
25	இலங்கை தொழிற்பயிற்சி நிறுவகம் - திரப்பனை	11/21/2017	11/20/2020
26	மாவட்ட தொழிற்பயிற்சி நிறுவகம் - தங்காலை	7/26/2017	7/25/2020
27	மாவட்ட தொழிற்பயிற்சி நிறுவகம் - மகரஹம	8/24/2017	8/23/2020
	தொழில்நுட்ப கல்வி மற்றும் பயிற்சி திணைக்களம்		
1	தொழில்நுட்ப கல்லூரி - வவுனியா	4/25/2017	4/24/2020
2	தொழில்நுட்ப கல்லூரி - தெகியத்த கண்டி	4/25/2017	4/24/2020
3	தொழில்நுட்ப கல்லூரி - திருகோணமலை	7/26/2017	7/25/2020
4	தொழில்நுட்ப கல்லூரி - பொலன்னறுவ	8/24/2017	8/23/2020
5	தொழில்நுட்ப கல்லூரி - மொனராகலை	11/21/2017	11/20/2020
6	தொழில்நுட்ப கல்லூரி - மெதகம	11/21/2017	11/20/2020
7	இலங்கை - ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவகம் - இரத்மலான	2/16/2017	2/15/2020
	தேசிய இளைஞர் சேவைகள் மன்றம்		
1	தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் - தங்காலை	8/24/2017	8/23/2020
	விவசாய கல்லூரி		
1	இலங்கை விவசாய கல்லூரி - அனுராதபுரம்	4/25/2017	4/24/2020
	பல்கலைக்கழக கல்லூரி		
1	பல்கலைக்கழக கல்லூரி - யாழ்ப்பாணம்	1/19/2017	1/18/2020
2	பல்கலைக்கழக கல்லூரி - அனுராதபுரம்	7/26/2017	7/25/2020
	மகாவலி அபிவிருத்தி அதிகாரசபை		
1	மகாவலி அபிவிருத்தி அதிகாரசபை	5/19/2017	5/18/2020
	தனியார் தொழிற்பயிற்சி நிறுவகம்		
1	இலண்டன் ரெக் சிற்றி பல்கலைக்கழகம்	9/19/2017	9/18/2020
2	அப்பிரன்டிஸ் பயிற்சி நிறுவகம் - யட்டிவாவெல	10/24/2017	10/23/2020
3	சுனேத்ரா தலைமுடி அலங்கார மற்றும் அழகுக்கலை பயிற்சி அக்கடமி - கண்டி	1/19/2017	1/18/2020
4	சலூன் ரண்மலீ - பொரலஸ்கமுவ	1/19/2017	1/18/2020
5	லங்கா நிப்போன் பிஸ்ரெக் தனியார் நிறுவகம் - மஹரகம	1/19/2017	1/18/2020
6	ஜினசேன ஐ. ரீ. ஐ - ஜா - எல	1/19/2017	1/18/2020
7	பீட்டா கொம் தனியார் நிறுவகம் - கம்பஹா	1/19/2017	1/18/2020
8	நில அளவீட்டு வித்தியாலயம் - நாரஹேன்பிட்டி	1/19/2017	1/18/2020
9	ஹை ரெக் லங்கா - மாவத்தகம	1/19/2017	1/18/2020
10	இலங்கை தாதியர் கல்லூரி	3/23/2017	3/22/2020
11	பீட்டா கொம் - மீரிகம	3/23/2017	3/22/2020
12	செத் செவண தொழில் அபிவிருத்தி நிறுவகம்	3/23/2017	3/22/2020
13	சவுத் ஏஷியன் சர்வதேச உயர் கல்வி நிறுவகம் - நுகேகொட	4/25/2017	4/24/2020
14	யெஸ் அக்கடமி மற்றும் சலூன்	4/25/2017	4/24/2020
15	மகளீர் வித்தியாலயம் (ஐ. பீ. எஸ்)	4/25/2017	4/24/2020
16	சவுத் ஏஷியன் சர்வதேச உயர் கல்வி நிறுவகம் - கண்டி	4/25/2017	4/24/2020
17	சதேர்ன் லக்மா ஹோட்டல் பாடசாலை	4/25/2017	4/24/2020
18	டீம்ரொன் கலை மற்றும் அழகுக்கலை பாடசாலை	4/25/2017	4/24/2020

	தொழிற்பயிற்சி நிறுவகத்தின் பெயர்	விருதளிக்கப்பட்ட திகதி	காலாவதியா-கும் திகதி
19	பிரிட்டிஸ் பாடசாலை - கல்கிசை	5/19/2017	5/18/2020
20	சவுத் ஏியன் சர்வதேச உயர் கல்வி நிறுவகம் - இரத்தினபுரி	5/19/2017	5/18/2020
21	சவுத் ஏியன் சர்வதேச உயர் கல்வி நிறுவகம் - பண்டாரவளை	5/19/2017	5/18/2020
22	எம். டீ. பீ. பயிற்சி நிறுவகம்	5/19/2017	5/18/2020
23	எஸ். எம். ஐ தொழிற்பயிற்சி நிறுவகம்	5/19/2017	5/18/2020
24	ப்ளாஸ்ரிக் மற்றும் இறப்பர் நிறுவகம்	5/19/2017	5/18/2020
25	பிரிட்டிஸ் பாடசாலை - கொழும்பு 06	5/19/2017	5/18/2020
26	பிரிட்டிஸ் பாடசாலை - கண்டி	5/19/2017	5/18/2020
27	அறிவாற்றல் விசேட கல்வி அபிவிருத்தி மன்றம	5/19/2017	5/18/2020
28	லங்கா பிட்னஸ் மற்றும் போசனை நிறுவகம்	5/19/2017	5/18/2020
29	ரப்புன்ஷல் தனியார் அமைப்பு	5/19/2017	5/18/2020
30	வயம்ப தொழில்நுட்பவியல் வித்தியாலயம்	7/26/2017	7/25/2020
31	ரன்கல் லிவித் ஹெயார தாதி பயிற்சி பாடசாலை	7/26/2017	7/25/2020
32	ஷீலா பர்ணாந்து அக்கடமி	7/26/2017	7/25/2020
33	சவுத் ஏஷியன் சர்வதேச உயர் கல்வி நிறுவகம் - குருணாகல்	7/26/2017	7/25/2020
34	சவுத் ஏஷியன் சர்வதேச உயர் கல்வி நிறுவகம் - காலி	7/26/2017	7/25/2020
35	அகியோ ஸ்ரீ லக்ஷகன சோவா தொழிற்பயிற்சி நிறுவகம்	7/26/2017	7/25/2020
36	லைசியம் சர்வதேச பாடசாலை	8/24/2017	8/23/2020
37	தொழிற் கணனி பயிற்சி நிறுவகம்	8/24/2017	8/23/2020

அதற்கு மேலதிகமாக தர முகாமைத்துவ முறைமை தொடர்பாக விழிப்புணர்வினை ஏற்படுத்துவதற்கு 11 ஒருநாள் செயலமர்வுகள் நடாத்தப்பட்டுள்ளன. இது தொடர்பாக தொழிற்பயிற்சி நிறுவகங்களின் 400 வரையிலான அலுவலர்கள் பங்குபற்றியுள்ளனர்.

பதிவுசெய்தல் மற்றும் தராதர அங்கீகார செயலமர்வு

மேலும், ஆணைக்குழுவானது இரண்டு நாள் உள்ளக தர கணக்காய்வு செயலமர்வு ஒன்றினை நடாத்தியுள்ளது. இது தொடர்பாக, நிறுவகங்களின் 35 அலுவலர்கள் பங்குபற்றியுள்ளனர். இச் செயலமர்வுகளின் இறுதியில் எழுத்து பரீட்சையானது நடாத்தப்பட்டுள்ளது. மேலும், இதன் பொருட்டு 70% இற்கும் அதிகமான புள்ளிகளை பெற்றுக்கொள்ள வேண்டியுள்ளது. வெற்றிகரமாக பூர்த்திசெய்தவர்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்கள் அளிக்கப்பட்டுள்ளன.



QMS செயலமர்வு

2017 ஆம் ஆண்டில் 04 அலுவலர்கள் (Lead Auditors) இலங்கை கட்டளைகள் நிறுவகத்திலிருந்து தகைமைகளை பெற்றுக்கொண்டுள்ளனர். தற்போது தொழில்சார் கணக்காய்வாளர்களுக்கான தேவைகள் காணப்படுவதுடன் அதற்கிணங்க, QMS கணக்காய்வின் பொருட்டு 29 கணக்காய்வினை மேற்கொள்ளும் கணக்காய்வாளர்கள் காணப்படுகின்றனர். இதற்காக மேலும் அலுவலர்களை பயிற்றுவிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

இப் பிரிவின் செயற்பாட்டுடன் தொடர்புடையதாக மேற்கொள்ளப்படும் ஏனைய செயற்பாடுகள்

A) ஆணைக்குழு ISO 9001 (2015 இற்காக சான்றிதழினை நாளாதுவரையாக்கும் செயற்பாட்டில் வெற்றி கண்டுள்ளது.

B) தகைமைகளை சமன் செய்தல்

தேசிய தொழிற் திறன் தகைமை NVQ அல்லாத பாடநெறிகளை தேசிய தொழிற் திறன் தகைமை NVQ மட்டம் 5 மற்றும் 6 இற்கு சமன் செய்தல்

பயிற்சி நிறுவகங்களின் மூலம் விருதளிக்கப்படும் தேசிய தொழிற் தகைமை (NVQ) சட்டகத்தினுள் இதுவரையில் உள்வாங்கப்படாத தொழிற்பயிற்சி பாடநெறிகளின் தகைமைகளை சமன் செய்தல் அதாவது தேசிய தொழிற் தகைமை (NVQ) அல்லாத பாடநெறிகளின் பொருட்டு தேசிய தொழிற் தகைமை (NVQ) மட்டத்தினை சமன் செய்யும் செயற்பாடானது மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் பதிவு செய்தல், பாடநெறிகளுக்கான தராதர அங்கீகாரங்களை அளித்தல் மற்றும் தர முகாமைத்துவ முறைமைகள் பிரிவு மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதன் மூலம் தேசிய தொழிற் தகைமை (NVQ) மட்டம் 5 மற்றும் 6 தொடர்பாக தகைமையுடைய பயிற்சி பாடநெறிகள் மட்டும் இவ்வாறு சமன் செய்து தொழிற் தகைமை சட்டகத்தினை விரிவுபடுத்துதல் இதன் பிரதான நோக்கமாகும்.

மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் மூலம் வெளியீடு செய்யப்பட்டுள்ள சுற்றுநிருபமான NVQ Circular No 5/ 2016 இற்கு இணங்க தேசிய தொழிற் தகைமை (NVQ) அல்லாத பாடநெறிகளின் பொருட்டு தேசிய தொழிற் தகைமை (NVQ) மட்டத்தினை சமன் செய்யும் செயற்பாடானது மேற்கொள்ளப்படுகின்றது. இச் சுற்றுநிருபத்திற்கு இணங்க தேசிய தொழிற் தகைமை (NVQ) அல்லாத பாடநெறிகளின் பொருட்டு தேசிய தொழிற் தகைமை (NVQ) மட்டங்கள் சமன் செய்யப்பட்ட நிறுவகங்கள் மற்றும் அவற்றின் பாடநெறிகள் தொடர்பான விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

	நிறுவகத்தின் பெயர்	பாடநெறியின் பெயர்	NVQ மட்டம்
1	National Institute of Business Management - NIBM	வியாபார முகாமைத்துவம் தொடர்பான உயர் டிப்ளோமா	மட்டம் 6
2	International College of Business & Technology (ICBT)	கணனி மென்பொருள் தொடர்பான உயர் டிப்ளோமா	மட்டம் 6
3	The Association of Accounting Technicians of Sri Lanka (AAT)	நிதி மற்றும் கணக்கீடு	மட்டம் 6
4	Department of Technical Education & Training (DTET)	கணிய அளவீடு தொடர்பான தேசிய சான்றிதழ் டிப்ளோமா முழு நேரம்	மட்டம் 6

C) 2017 ஆம் ஆண்டில் மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவானது நிறுவகங்களை பதிவுசெய்தல் மற்றும் பாடநெறிகளுக்கான தராதர அங்கீகாரங்களை அளித்தல் தொடர்பாக பெற்றுக்கொண்ட வருமானங்கள் பின்வருமாறு.

அட்டவணை (viii) -

பதிவு கட்டண வருமானம்	- ரூபா	669,000
தராதர அங்கீகார கட்டண வருமானம்	- ரூபா	1,146,000
மாணவர் அறிக்கை புத்தக விற்பனை டுளுவரனநவெ சுநஉழசன டிழழமளரூ	- ரூபா	2,666,405
தர முகாமைத்துவ சான்றிதழ் (QMS) விருதளித்தல்	- ரூபா	1,081,000
தகைமைகளை சமன் செய்தல்	- ரூபா	150,000
மொத்த வருமானம்	**- ரூபா**	**5,712,405**

இந் நிதியானது திறைசேரியிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

7.0 தேசிய தேர்ச்சி தரங்கள், பாடத்திட்டங்கள் மற்றும் தேசிய தொழிற் திறன் தகைமைகள் பிரிவு

7.1 தேசிய தொழிற் திறன் தகுதி சட்டகத்தினை நடைமுறைப்படுத்தும் பொருட்டு தொழிற்துறைகளுக்கு ஏற்புடைய தேசிய தேர்ச்சி நியமங்கள் மற்றும் தேசிய பாடத்திட்டங்கள் என்பவற்றினை தயாரித்தல் பிரதான தேவைப்பாடாகும். அதற்கு இணங்க, 2017 ஆம் ஆண்டில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள தேசிய தேர்ச்சி நியமங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டு அவை செல்லுபடியாக்கப்பட்டுள்ளன.

7.1.1 கைத்தொழிற்துறைசார் திறன்கள் சபைகள் மூலம் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளுக்கு அமைவாக பாடத்திட்டங்களுடன் கூடியதாக தயாரிக்கப்பட்ட புதிய தேர்ச்சி நியமங்கள் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப

- கைவினைஞர் - 4 ஆம் மட்டம்
- ரைல் பதிப்பவர் - 3 ஆம் மட்டம்
- மின்னியலாளர் (வீட்டு) - 3 ஆம் மட்டம்
- ஹோட்டல் வீட்டுப்பணி - 4 ஆம் மட்டம்
- தொழில்சார் சமையற்கலை - 4 ஆம் மட்டம்
- உணவக மற்றும் உணவக விடுதி சேவை - 4 ஆம் மட்டம்
- விருந்தோம்பல் முகாமைத்துவம் - 4 ஆம் மட்டம்
- சலவையகம் நடத்துதல் - 4 ஆம் மட்டம்
- வெதுப்புநர் (பாண் மற்றும் (பேஷ்ட்ரி) - 4 ஆம் மட்டம்
- கம்பி வளைப்பவர் - 3 ஆம் மட்டம்
- கனிஷ்ட மென்பொருள் தயாரிப்பவர் - 4 ஆம் மட்டம்
- ஆலோசனை - 4 ஆம் மட்டம்
- சமூக பாதுகாப்பு - 4 ஆம் மட்டம்
- பாதுகாப்பு மத்திய நிலைய முகாமைத்துவம் (சாதாரண பாதுகாப்பு) - 5 ஆம் மட்டம்

7.1.2 தயாரிக்கப்பட்ட புதிய தேர்ச்சி நியமங்கள்

- வான் பறத்தல் (தரைக் கட்டுப்பாட்டு பிரதிநிதி) - 3 ஆம் மட்டம்
- பரசூட் பொதிசெய்பவர் - 3 ஆம் மட்டம்

7.2. கீழே தரப்பட்டுள்ள தேசிய தேர்ச்சி நியமங்கள் மற்றும் பாடத்திட்டங்கள் நாளாதுவரையாக்கப்பட்டு மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் மூலம் அவற்றினை நடைமுறைப்படுத்தும் பொருட்டு செல்லுபடியாக்கப்பட்டுள்ளன.

7.2.1 நாளாதுவரையாக்கப்பட்ட தேர்ச்சி நியமங்கள

- ஆடை தைப்பவர் - 4 ஆம் மட்டம்
- இலத்திரனியல் உபகரண தொழில்நுடாவியலாளர் - 4 ஆம் மட்டம்
- மின்னியல் தொழில்நுட்பவியலாளர் - 4 ஆம் மட்டம்

7.2.2 நாளதுவரையாக்கப்பட்டுள்ள பாடத்திட்டங்கள்

- பெண்களின் ஆடை தைப்பவர் - 4 ஆம் மட்டம்
- ஆடை தைப்பவர் - 3 ஆம் மட்டம்
- ஆண்களின் ஆடை தைப்பவர் - 4 ஆம் மட்டம்
- இலத்திரனியல் உபகரண தொழில்நுட்பவியலாளர் - 3 ஆம் மட்டம்
- இலத்திரனியல் உபகரண தொழில்நுட்பவியலாளர் - 4 ஆம் மட்டம்
- மின்னியல் தொழில்நுட்பவியலாளர் நுகைத்தொழிற்துறைரு - 4 ஆம் மட்டம்
- மின்னியல் தொழில்நுட்பவியலாளர் நுகட்டிடம்ரு - 3 ஆம் மட்டம்

7.3. சிங்கள மொழியிற்கு மொழிபெயர்ப்பு செய்யப்பட்டுள்ள தேசிய தேர்ச்சி நியமங்கள் மற்றும் பாடத்திட்டங்கள்

7.3.1 பாடத்திட்டங்கள் உள்ளடங்கலாக கீழே தரப்பட்டுள்ள தேசிய தேர்ச்சி நியமங்கள் சிங்கள மொழியிற்கு மொழிபெயர்ப்பு செய்யப்பட்டுள்ளன.

- பராமரிப்பு சேவை வழங்குநர்
- மதுபானசாலை வேலையாளர்
- வெதுப்புநர்
- வழங்கல் உதவியாளர்
- முதியோர் பராமரிப்பு
- வரவேற்பு உதவியாளர்
- காய்ச்சி இணைக்கும் தொழில்நுட்பவியலாளர் (கைகளால் மேற்கொள்ளல் உலோகம் மற்றும் வில்)
- சலவையகம் நடாத்துதல்
- உணவக மற்றும் தங்குமிட சேவைகள்
- ஹோட்டல் வீட்டு முகாமைத்துவம்
- விருந்தோம்பல் முகாமைத்துவம்
- தொழில்சார் சமையற்கலை வல்லுநர்
- சமூக பாதுகாப்பு
- ஆலோசனை

7.3.2 சிங்கள மொழியிற்கு மொழிபெயர்ப்பு செய்யப்பட்டுள்ள தேசிய தேர்ச்சி நியமங்கள்

- இரத்தினக்கல் வெட்டும் கைவினைஞர்
- உதவி கள அலுவலர் - தேயிலை
- கட்டிட சேவை தொழில்நுட்பவியலாளர்
- வியாபார உதவியாளர்
- வெல்டிங் கைவினைஞர்
- வழங்கல் உதவியாளர்
- பட வரைஞர்

7.3.3 சிங்கள மொழியிற்கு மொழிபெயர்ப்பு செய்யப்பட்டுள்ள பாடத்திட்டங்கள்

- சிகையலங்கார கைவினைஞர்

7.4 கீழே தரப்பட்டுள்ள தேசிய தேர்ச்சி நியமங்கள் மற்றும் பாடத்திட்டங்கள் தமிழ் மொழியிற்கு மொழிபெயர்ப்பு செய்யப்பட்டுள்ள

7.4.1 தமிழ் மொழியிற்கு மொழிபெயர்ப்பு செய்யப்பட்ட பாடத்திட்டங்கள் அடங்கலான தேசிய தேர்ச்சி நியமங்கள்

- உதவி சமையற்கரர்
- மதுபான நிலைய சேவையாளர்
- வெதுப்புநர்
- கட்டுமான கைவினைஞர் - கொங்கிரீட்
- கட்டுமான கைவினைஞர் - தளம்
- வழங்கல் உதவியாளர்
- வாகன உடல் திருத்துதல்
- டீசல் இயந்திர தொழில்நுட்பவியலாளர்
- சமூக பாதுகாப்பு
- ஆலோசனை
- பராமரிப்பு மத்தியநிலைய முகாமைத்துவம்
- ஆடை தைப்பவர்
- உணவக மற்றும் தங்குமிட சேவை
- ஹோட்டல் வீட்டு முகாமைத்துவம்
- விருந்தோம்பல் முகாமையாளர்
- தொழில்சார் சமையல் முறை
- சலவையகம் நடாத்துதல்

7.4.2 தமிழ் மொழியிற்கு மொழிபெயர்ப்பு செய்யப்பட்டுள்ள தேசிய தேர்ச்சி நியமங்கள்

- பாற்பண்ணை உதவியாளர்
- கணிய அளவையியல் உதவியாளர்
- கட்டிட சேவை தொழில்நுட்பவியலாளர்
- பராமரிப்பு வழங்குநர்
- மருத்துவ உதவியாளர்
- தோற்பொருள் தயாரிப்பு கைவினைஞர்
- வியாபார உதவியாளர்
- காய்ச்சி இணைப்பவர்
- மோட்டார் சைக்கிள் தொழில்நுட்பவியலாளர்
- வாயு தொழில்நுட்பவியலாளர்

7.4.3 தமிழ் மொழியிற்கு மொழிபெயர்ப்பு செய்யப்பட்டுள்ள பாடத்திட்டங்கள்

- அலுமினிய சட்டகம் புனைபவர் (இறுதி இரண்டு மொடியுல்கள்)

7.5 கீழே தரப்பட்டுள்ள பாடத்திட்டங்கள் ஆங்கில மொழியிற்கு மொழிபெயர்ப்பு செய்யப்பட்டுள்ளன.

- கட்டுமான கள மேற்பார்வையாளர்
- இயந்திர பொறிவலர

7.6 தேசிய தொழிற்திறன் தகுதி அல்லாத பாடநெறிகளை தேசிய தொழிற்திறன் தகுதி மட்டங்களிற்கு சமன் செய்தல்

7.6.1 தேசிய தொழிற்திறன் தகுதிகள் அல்லாத பாடநெறிகளை பயின்ற விண்ணப்பதாரிகளிற்கு தேசிய தொழிற்திறன் தகுதிகளிற்கு சமமான சான்றிதழ்களை விருதளிப்பதற்காக தொழில்சார் மீளாய்வு பரீட்சையானது மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் அதன் மூலம் சித்தியடைந்தவர்களுக்கு தேசிய தொழிற்திறன் தகுதிகளிற்கு சமன் செய்யப்பட்ட சான்றிதழ்கள் விநியோகிக்கப்பட்டன.

பாடநெறியின் பெயர்	தேசிய தொழிற்திறன் தகுதி மட்டம்	மேற்கொள்ளப்பட்ட தொழில்சார் மீளாய்வுகளின் எண்ணிக்கை	பங்குபற்றியவர்களின் எண்ணிக்கை	சமன் செய்யப்பட்ட சான்றிதழ்கள் வழங்கப்பட்டவர்களின் எண்ணிக்கை
தேசிய தொழில்நுட்பவியல் சான்றிதழ் (சிவில் பொறியியல்)	5 ஆவது மட்டம்	09	35	19
தேசிய தொழில்நுட்பவியல் சான்றிதழ் (மின்னியல் மற்றும் இலத்திரனியல் பொறியியல்)	5 ஆவது மட்டம்	02	14	10
தேசிய தொழில்நுட்பவியல் சான்றிதழ் (கணிய அளவையியல்)	5 ஆவது மட்டம்	01	08	02
கைத்தொழிற்துறை தொழில்நுட்பவியல் தேசிய சான்றிதழ் (சிவில் பொறியியல்)	5 ஆவது மட்டம்	09	37	29

பாடநெறியின் பெயர்	தேசிய தொழிற் திறன் தகைமை மட்டம்	விருதளிக்கப்பட்ட சமன் செய்யப்பட்ட சான்றிதழ்களின் எண்ணிக்கை
தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியல் தேசிய டிப்ளோமா	5 ஆவது மட்டம்	33
தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி தேசிய டிப்ளோமா	5 ஆவது மட்டம்	02
பொறியியல் தொழில்நுட்பவியல் தொடர்பான தேசிய டிப்ளோமா	5 ஆவது மட்டம்	01
	6 ஆவது மட்டம்	08

பாடநெறியின் பெயர்	தேசிய தொழிற் திறன் தகைமை மட்டம்	விருதளிக்கப்பட்ட சமன் செய்யப்பட்ட சான்றிதழ்களின் எண்ணிக்கை
பொறியியல் விஞ்ஞானம் தேசிய டிப்ளோமா கணிய அளவையியல் தேசிய டிப்ளோமா	6 ஆவது மட்டம்	18

மேலும் கீழே தரப்பட்டுள்ள சான்றிதழ்களின் நிமித்தம் தேசிய தொழிற் திறன் தகைமைகளை சமன் செய்தல் சான்றிதழ்களை வழங்கும் செயற்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

7.6.2 அனுபவம் மிக்க தொழில்நுட்ப சான்றிதழ்களை பெற்றுக்கொண்டுள்ள 460 பேர்களுக்கு அரச முகாமைத்துவ சுற்றுநிருப ஏற்பாடுகளிற்கு இணங்க கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளன.

7.7 தேசிய தேர்ச்சி நியமங்கள் மற்றும் பாடத்திட்டங்களின் பிரதிகளை தயாரித்தல்

தாயரிக்கப்பட்டுள்ள தேசிய தேர்ச்சி நியமங்கள் மற்றும் அவை தொடர்பான ஆவணங்கள் அடங்கிய மென்பொருள் இறுவட்டு விற்பனையானது இப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 2017 ஆம் ஆண்டில் இவ்வாறான 939 இறுவட்டுகள் விற்பனை செய்யப்பட்டுள்ளதுடன் அதன் மூலம் ‘ரூபா 469,500.00 வருமானம் பெறப்பட்டுமுள்ளது.

7.8 நிறுவகங்களுக்கு இடையிலான தேசிய தொழிற் தகைமை செயற்படுத்தல் குழு கூட்டங்களை நடாத்துதல்

தேசிய தொழிற்திறன் தகுதி முறைமையினை நடைமுறைப்படுத்தும் போது ஏற்படும் பிரச்சினைகளை இனங்கண்டு அவற்றிற்கு உரிய தீர்வுகளை எடுக்கும் பொருட்டு கலந்துரையாடி புதிய தீர்மானங்களை மேற்கொள்ளும் நோக்கத்தில் தேசிய தொழிற்திறன் தகுதிகள் முறைமையினை நடைமுறைப்படுத்தும் அரச மற்றும் தனியார் நிறுவகங்களின் சிரேஃட அலுவலர்களை உள்ளடக்கிய குழுவானது ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. 2017 ஆம் ஆண்டில் அக் குழுவின் 10 கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன.

8. தர உத்தரவாதம் மற்றும் கணிப்பீட்டு ஒழுங்கமைப்பு பிரிவு

8.1 அறிமுகம்

எமது ஆணைக்குழு மூலம் 2016 ஆம் ஆண்டு யூலை மாதம் தேசிய தொழிற் திறன் தகைமைகள் பிரிவு மற்றும் தேசிய தொழிற் திறன் தகைமைகள் (NVQ) சான்றிதழ்கள் பிரிவு ஆகியன ஒன்றிணைக்கப்பட்டு தர உத்தரவாதம் மற்றும் கணிப்பீட்டு ஒழுங்கமைப்பு பிரிவானது ஸ்தாபிக்கப்பட்டது. அதற்காக, துறைசார் திறன்கள் அபிவிருத்தி நிதியமானது நிதி பங்களிப்பினை வழங்கியுள்ளது.

அதற்கிணங்க, எமது பிரிவில் பணிப்பாளர் ஒருவர் (01), பிரதி பணிப்பாளர் ஒருவர் (01), உதவி பணிப்பாளர்கள் நால்வர் (04), நிகழ்ச்சித்திட்ட ஒருங்கிணைப்பு அலுவலர் இருவர் (02), அபிவிருத்தி உத்தியோகத்தர் ஒருவர் (01), முகாமைத்துவ உதவியாளர்கள் மூவர் (03) மற்றும் கணனி பிரயோக உதவியாளர்கள் மூவர் (03) கடமையாற்றுவதுடன் அதற்கிணங்க, எமது பிரிவின் மூலம் பின்வரும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

8.2 தேசிய தொழிற் திறன் தகுதிகள் (NVQ) முறைமையினை நடைமுறைப்படுத்துதல் மற்றும் ஒழுங்குபடுத்துதல்

8.2.1 கணிப்பீட்டாளர்கள் தொடர்பான தரவு தளத்தினை பேணுதல்

8.2.2.1 அவசியமான தேர்ச்சிசார் கணிப்பீட்டாளர்கள் தேவைப்பாட்டை எதிர்வுகூறுதல்

தயாரிக்கப்பட்டுள்ள தேசிய தேர்ச்சித் தரங்களின் எண்ணிக்கை மற்றும் 2017 ஆம் ஆண்டு நிறைவடையும் போது தரவுத் தளத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ள தேர்ச்சிசார் கணிப்பீட்டாளர்களின் எண்ணிக்கை, தேர்ச்சிசார் கணிப்பீட்டாளர்களின் பூகோள ரீதியான வதிவிடம் ஆகிய விடயங்கள் கருத்திற்கொள்ளப்பட்டு தேவைப்படும் கணிப்பீட்டாளர்களின் எண்ணிக்கை தொடர்பான எதிர்வுகூறல் அறிக்கையானது தயாரிக்கப்பட்டுள்ளது.

8.2.2.2 தேர்ச்சிசார் கணிப்பீட்டாளர்களாக பயிற்சி அளிப்பதற்கு தகுந்த நபர்களை தெரிவுசெய்வதற்கான நேர்முகத்தேர்வினை நடாத்தல்

தேர்ச்சிசார் கணிப்பீட்டாளர்களாக நியமனம் வழங்குவதற்காக தேர்வுநாடிகள் தனிப்பட்ட ரீதியில் விண்ணப்பிக்க வேண்டியுள்ளதுடன் இதற்கென விசேடமாகத் தயாரிக்கப்பட்டுள்ள விண்ணப்ப படிவத்தினை பூர்த்திசெய்து அனுப்புதல் வேண்டும். இங்கு, விண்ணப்பதாரர்களை நேர்முகத்தேர்வுக்கு அழைப்பதற்கு நியமிக்கப்பட்ட காலப்பகுதியொன்று காணப்படாததுடன் கிடைக்கப்பெற்ற விண்ணப்ப படிவங்களின் அடிப்படையில் தகுதியானவர்களை தேர்ந்தெடுத்தல் நேர்முகத்தேர்வு சபை மூலம் மேற்கொள்ளப்படும். உரிய தொழிற்துறை தொடர்பான விசேட நிபுணத்துவமுடைய நபர்கள் இந் நேர்முகத்தேர்வு சபையிற்கு நியமிக்கப்படுவதுடன் 2017 ஆம் ஆண்டில் இவ்வாறான நேர்முகத்தேர்வுகளை 08 நாட்கள் நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன் தேவை மற்றும் அவசியத்தின் பொருட்டு மீளாய்வாண்டில் இவ்வாறான நேர்முகத்தேர்வுகள் 22 நாட்கள் நடாத்தப்பட்டுள்ளன.

8.2.2. தேர்ச்சிசார் கணிப்பீட்டாளர்களிற்கு பயிற்சி அளித்தல் வேலைத்திட்டம் மற்றும் அதற்கான வசதிகளை வழங்குதல்

நேர்முகத் தேர்வின் மூலம் தெரிவு செய்யப்பட்டவர்களிற்கான பதின்மூன்று (13) பயிற்சி அளித்தல் வேலைத் திட்டங்கள் கீழே காட்டப்பட்டுள்ளவாறு நடாத்தப்பட்டுள்ளன.

பங்குபற்றியவர்களின்	எண்ணிக்கை
● 85 ஆவது அணி	26
● 86 ஆவது அணி	32
● 87 ஆவது அணி	30
● 88 ஆவது அணி	20
● 89ஆவது அணி	39
● 90 ஆவது அணி	35
● 91 ஆவது அணி	41
● 92 ஆவது அணி	20
● 93 ஆவது அணி	23
● 94 ஆவது அணி	19
● 95 ஆவது அணி	39
● 96 ஆவது அணி	35
கணிப்பீட்டாளர் தரவுத் தளத்தில் சேர்க்கப்பட்டவர்களின் எண்ணிக்கை	**268**

8.2.3. கணிப்பீட்டாளர்களுக்கு அனுமதிப்பத்திரம் வழங்கல்

உரிய எடுத்துமூல பரீட்சையில் சித்தியடைவோர் நேர்முகத்தேர்விற்காக நேர்முகத்தேர்வு சபையிடம் வரவழைக்கப்படுவர். நேர்முகத்தேர்வு சபையின் சிபார்சிற்கு இணங்க குறிப்பிட்ட கணிப்பீட்டாளரிற்கு அனுமதிப்பத்திரத்தினை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. அதற்கான எழுத்து மூல பரீட்சையானது 2018 ஆம் ஆண்டில் நடாத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. காலாவதியான அனுமதிப்பத்திரங்களை புதுப்பிப்பதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

8.2.4 தேர்ச்சிசார் கணிப்பீடுகள் இடம்பெறுதல் பற்றிய தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்

இவ்விடயம் தொடர்பாக கீழே தரப்படுள்ள மூன்று (03) விடயங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- தனியர் துறைசார் பயிற்சி நிலையங்களில் தேர்ச்சிசார் கணிப்பீடுகளை நடாத்துவதற்கான அனுமதியினை வழங்கல்
- அரச துறைசார் பயிற்சி நிலையங்களில் / நிறுவகங்களில் தேர்ச்சிசார் கணிப்பீடுகளை நடாத்துவதற்கான அனுமதியினை வழங்கல்
- முன்னேற்ற மீளாய்வு கூட்டங்களை நடாத்துதல்

8.2.5 தனியர் துறைசார் பயிற்சி நிலையங்களில் தேர்ச்சிசார் கணிப்பீடுகளை நடாத்துவதற்கான அனுமதியினை வழங்கல்

மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவில் பதிவுசெய்யப்பட்டுள்ள தனியார் துறை பயிற்சி நிறுவகங்கள் / நிலையங்களில் பாடநெறி தராதர அங்கீகாரம் மேற்கொள்ளப்பட்ட பாடநெறிகள் நடாத்தப்பட்டு அவை முடிவுறும் போது அப்பாடநெறிகளை பின்பற்றிய மாணவர்களை கணிப்பீட்டிற்கு உட்படுத்தி அதில் தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு தேசிய தொழிற்திறன் தகுதிகள் (NVQ) விருதளிக்கப்படுகின்றன.

இங்கு, உரிய நிபந்தனைகள் பரீட்சிக்கப்பட்டு அவை பூர்த்தியாகும் சந்தர்ப்பத்தில் மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் பேணப்பட்டுவரும் கணிப்பீட்டாளர் தரவுத் தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ள கணிப்பீட்டாளர்கள் நியமனம் செய்யப்பட்டு அவர்களைக் கொண்டு கணிப்பீடானது மேற்கொள்ளப்படுகின்றது. இவ்வாறு, பல்வேறுவகையான பயிற்சி நிலையங்கள் / நிறுவகங்கள் மூலம் 2017 ஆம் ஆண்டில் கணிப்பீட்டினை மேற்கொள்வதற்காக கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களின் எண்ணிக்கையானது 839 ஆகும். 2017 ஆம் ஆண்டிற்கான இலக்கானது 550 ஆகும் என்பதுடன் அவ் இலக்கினை விஞ்சிய இவ்விண்ணப்பங்களின் எண்ணிக்கைக்கு தனியார் துறை நிறுவகங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள தேசிய தொழிற்திறன் தகுதிகள் (NVQ) முறைமையானது அதிகூடுதலாக மக்கள் மத்தியில் செல்வாக்கினை பெற்றுள்ளமை இதற்கு காரணமாகும் என அனுமானிக்க முடிகின்றது. தேசிய தொழிற் திறன் தகுதி மட்டம் 03 கா. பொ. த (சா / த) இற்கும் மற்றும் தேசிய தொழிற் திறன் மட்டம் 04 கா. பொ. த (உ / த) இற்கும் சமன் செய்யப்பட்டுள்ளமையும் இதற்கு காரணமாக விளங்குகின்றது.

8.2.6. அரச துறைசார் பயிற்சி நிலையங்களில் / நிறுவகங்களில் தேர்ச்சிசார் கணிப்பீடுகளை நடாத்துவதற்கான அனுமதியினை வழங்கல்

அரச துறைக்குரிய பயிற்சி நிறுவகங்களில் / நிலையங்களில் கணிப்பீட்டு நடவடிக்கைகள் தொடர்பாக கணிப்பீடுகளை நடாத்துவதற்கான அனுமதியினை வழங்கும் செயற்பாட்டானது மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் தர உத்தரவாதம் மற்றும் கணிப்பீட்டு ஒழுங்கமைப்பு அலகின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இம் மீளாய்வாண்டின் போது திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழிற் பயிற்சி அமைச்சின் கீழ் செயற்பட்டுவருகின்ற நிறுவகங்களில் இருந்தும் மற்றும் இவ் அமைச்சிற்கு புறம்பான அரச துறை பயிற்சி நிலையங்கள் / நிறுவகங்களில் இருந்தும் கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களின் அடிப்படையில் 2597 அனுமதிகள் வழங்கப்பட்டுள்ளது. இந்நிறுவகங்கள் தொடர்பான விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழிற் பயிற்சி அமைச்சின் கீழ் செயற்படுகின்ற நிறுவகங்கள் / பயிற்சி மத்திய நிலையங்கள்

- தொழில்நுட்பக்கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம்
- இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை
- தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற்பயிற்சி அதிகாரசபை
- சமுத்திர பல்கலைக்கழகம்
- இலங்கை - ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவகம்

திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழிற் பயிற்சி அமைச்சின் கீழ் அல்லாத அரச நிறுவகங்கள்

- தேசிய இளைஞர் சேவைகள் மன்றம்
- இலங்கை இளைஞர் படை
- இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம்
- விவசாய திணைக்களம்
- சமூக சேவை திணைக்களம்
- இலங்கை வான்படை
- இலங்கை கடற்படை

எவ்வாறாயினும், அரச துறை நிறுவகங்களில் / பயிற்சி மத்திய நிலையங்களில் தேசிய தொழிற் திறன் தராதரங்களை (NVQ) விருதளிப்பதற்கான கணிப்பீடுகளிற்காக குறிப்பிட்ட வருடத்திற்கான எண்ணிக்கையிலும் பார்க்க மிகக் கூடுதலான எண்ணிக்கையான கோரிக்கைகள் எமக்கு கிடைக்கப்பெறுவது அவதானிக்கப்பட்டுள்ளதுடன் இவை எமது இலக்கிடப்பட்ட எண்ணிக்கையிலும் பார்க்க அதிகமாகவும் காணப்படுகின்றது. அந்த வகையில், மீளாய்வு வருடத்தில் 2500 எண்ணிக்கையான அனுமதி அளித்தல்கள் இலக்காக நிர்ணயிக்கப்பட்டிருந்ததுடன் அவ்வாண்டினுள் உண்மையில் அவ்வாறு அளிக்கப்பட்ட கோரிக்கைகளின் எண்ணிக்கையானது 2597 ஆகும். இதற்கு கீழே தரப்பட்டுள்ள விடயங்கள் காரணங்களாக அமையலாம் என அனுமானிக்கப்பட்டுள்ளது.

இவ்வறு ஏற்படுவதற்கு கீழே தரப்பட்டுள்ள விடயங்கள் காரணமாக அமையலாம்

- வெளிநாட்டு வேலைவாய்ப்புகளிற்காக செல்வோருக்கு தேசிய தொழிற் திறன் தராதர (NVQ) சான்றிதழ்கள் கட்டாயமாக்கப்பட்டுள்ளமை
- அரச நிர்வாக அமைச்சின் மூலம் அமைச்சு / திணைக்களங்களிற்கு நபர்களை ஆட்சேர்ப்பு செய்யும் போதும் மற்றும் பதவி உயர்வுகளை வழங்கும் போதும் தேசிய தொழிற் தராதரங்கள் முறைமையினை பின்பற்றுமாறு உரிய நிறுவகங்களுக்கு அரச நிர்வாக பிரிவினால் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளமை
- தேசிய தொழிற் தராதரங்கள் முறைமையானது படிப்படியாக சமூகத்தின் மத்தியில் பிரபல்யம் பெறுகின்றமை
- தேசிய தொழிற் திறன் தகுதி மட்டம் 03 கா. பொ. த (சா / த) இற்கும் மற்றும் தேசிய தொழிற் திறன் மட்டம் 04 கா. பொ. த (உ / த) இற்கும் சமன் செய்யப்பட்டுள்ளமையும் இதற்கு காரணமாக விளங்குகின்றது.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள தேர்ச்சி அடிப்படையிலான பயிற்சி பாடநெறியினை பின்பற்றியவர்களுக்கு தேசிய தொழிற் திறன் தராதரங்களை (NVQ) விருதளிப்பதற்கு மேலதிகமாக வேறொரு முறையின் மூலமும் இத் தேசிய தொழிற் திறன் தராதரங்கள் (NVQ) விருதளிக்கப்படுகின்றன. இம்முறை மூலம் கைத்தொழிற் துறைசார் தொழில்கள் தொடர்பான அனுபவத்தினை உடைய நபர்களுக்கு இத் தேசிய தொழிற் திறன் தராதரங்களிற்காக (NVQ) விண்ணப்பிக்க கூடியதாக உள்ளதுடன் இம்முறையானது முன்னைய அனுபவத்தினை அங்கீகரித்தல் (RPL) முறை என்று அழைக்கப்படுகின்றது.

இம்முறை மூலம் தேசிய தொழிற் தராதரங்களை விருதளிப்பதற்கான அதிகாரம் கீழே தரப்பட்டுள்ள மூன்று அரச துறை நிறுவகங்களிடமும் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அவ்வாறான மூன்று நிறுவகங்களும் பின்வருமாறு

- தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற்பயிற்சி அதிகாரசபை
- இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை
- தொழில்நுட்பக்கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம்

8.2.7. முன்னைய அனுபவத்தினை அங்கீகரித்தல் முறைமை தொடர்பான முன்னேற்ற மீளாய்வு கூட்டங்களை நடாத்துதல்

மீளாய்வு கூட்டங்கள் இடையிடையே நடாத்தப்பட்டன. அவ்வாறு செயற்படுத்தல் குழு கூட்டங்களிலும் மற்றும் பரீட்சை குழு கூட்டங்களிலும் தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை மற்றும் தொழிற்பயிற்சி அதிகாரசபை ஆகியவற்றுடன் முன்னைய அனுபவத்தினை அங்கீகரித்தல் முறைமை தொடர்பான பிரச்சினைகள் மற்றும் சவால்கள் பற்றி அதிகாரசபை அதிகாரிகளுடன் கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டதுடன் அதற்கு மேலதிகமாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் அதிகரிகளுடன் தொடர்ச்சியான கூட்டங்கள் நடாத்தப்பட்டன. இப் பணியகமானது “வீட்டுப் பணிப் பெண்” மற்றும் “பராமரிப்பு உதவியாளர்” ஆகிய பதவிகளுக்காக வெளிநாடுகளிற்கு செல்வோருக்கான விசேட பயிற்சி பாடநெறிகளை நாடு பூராவும் அமைந்துள்ள அப் பணியகத்தின் பயிற்சி மத்திய நிலையங்க ஊடாக நடாத்திவருகின்றது. அப் பாடநெறிகள் பூர்தியடையூம் போது கணிப்பீடுகள் நடாத்தப்பட்டு பயிற்சிநெறியினை பூர்த்தி செய்தவர்களுக்கு தேசிய தொழிற் திறன் தராதர (NVQ) சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன.

8.3 தேர்ச்சிசார் கணிப்பீடுகளில் சீர்த்தன்மையினை (Consistency) பேணுவதற்காக செயலமர்வுகளை நடாத்துதல

8.3.1. தேர்ச்சிசார் கணிப்பீடுகளில் சீர்த்தன்மையினை பேணுவதற்காகவும் மற்றும் கணிப்பீட்டாளர்களிற்கு அவசியமான அறிவினை நாளாதுவரையாக்குவதற்குமான செயலமர்வுகளை நடாத்துதல்

மேலே குறிப்பிடப்பட்டுள்ள குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்ளும் நோக்குடன் ஐந்து (05) செயலமர்வுகளை மீளாய்வாண்டினுள் நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. அத்துடன், இத் தேர்ச்சி அடிப்படையிலான கணிப்பீட்டு முறைகள் 2005 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் அவற்றுடன் தொடர்பான கணிப்பீட்டாளர்களிற்கு பயிற்சி அளித்தல் செயற்பாடுகளும் ஆவ்வாண்டிலேயே ஆரம்பிக்கப்பட்டன. இச் செயலமர்வுகளில் கணிப்பீட்டாளர்களின் கணிப்பீடு தொடர்பான மற்றும் துறைசார் அறிவு நாளாதுவரையாக்கப்பட்டுள்ளது.

8.3.2. அரச மற்றும் தனியார் துறை பயிற்சி நிலையங்களில் நடாத்தப்படுகின்ற தேர்ச்சி அடிப்படையிலான கணிப்பீட்டு செயற்பாடுகளை மேற்பார்வை செய்தல்

மீளாய்வாண்டின் போது கீழே காட்டப்பட்டுள்ள அரச மற்றும் தனியார் துறையினை சார்ந்த பயிற்சி நிறுவகங்களில் இடம்பெற்ற 97 தேர்ச்சி அடிப்படையிலான கணிப்பீட்டு செயற்பாடுகள் எமது பிரிவின் மூலம் மேற்பார்வை செய்யப்பட்டுள்ளன. அவ்வாறான மேற்பார்வை செயற்பாடுகளின் பின்னர் NVQ சுற்றுநிருபம் 2017 / 01 இற்கு இணங்கவும் மற்றும் உயர் முகாமைத்துவ ஆலோசனையிற்கு இணங்கவும் கணிப்பீட்டு அலுவலர்களின் கணிப்பீட்டு செயன்முறைகளிற்கு முரணாக கணிப்பீடுகள் இடம்பெற்ற சந்தர்ப்பங்களில் உரிய தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

8.4 முறைப்பாடுகளை விசாரணை செய்தல்

மீளாய்வாண்டில் தேர்ச்சிசார் கணிப்பீடுகள் தொடர்பாக கிடைக்கப்பெற்ற எழுத்துமூல முறைப்பாடுகளை விசாரிக்கும் பொருட்டு சட்ட அலுவலரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

8.5. பொது எழுத்துமூல பரீட்சையினை நடாத்துதல்

8.5.1. தேசிய தொழிற் திறன் மட்டம் 3 மற்றும் 4 விருதளிப்பினை மேற்கொள்வதற்குரிய அழகுக் கலைஞர், சிகை அலங்காரக் கைவினைஞர், முன்பள்ளி ஆசிரியர்,

பட வரைஞர், மின்னியலாளர், மோட்டார் வாகன தொழில்நுட்பவியலாளர் மற்றும் குளிரூட்டி மற்றும் வளிச்சீராக்கி தொழில்நுட்பவியலாளர் ஆகிய துறைசார் பொது எழுத்து மூல பரீட்சைகள் நடாத்தப்பட்டுள்ளன.

துறை	ஜனவரி	யூலை
அழகுக்கலை	1743	2432
சிகையலங்காரம்	1617	2003
முன்பள்ளி ஆசிரியர்	-	130
பட வரைஞர்	-	255
மின்னியலாளர்	-	2018 ஜனவரி மாதத்தில் நடாத்தப்பட்டது
மோட்டார் வாகன தொழில்நுட்பவியலாளர்	-	
குளிரூட்டி மற்றும் வளிச்சீராக்கி தொழில்நுட்பவியலாளர்	-	

மேற்கூறப்பட்டுள்ள பாடநெறிகளுக்குரிய எழுத்து மூல பரீட்சைகள் (தேசிய தொழிற் திறன் மட்டம் 3 மற்றும் 4) மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் 2017 ஆம் ஆணடு ஜனவரி மற்றும் யூலை ஆகிய மாதங்களில் நடாத்தப்பட்டுள்ளன.

8.5.2. தேசிய தொழிற்திறன் தகுதிகள் மட்டம் 5 மற்றும் 6 தொடர்பான எழுத்து மூல பரீட்சையினை நடாத்துதல்

மீளாய்வாண்டின் போது விண்ணப்பங்கள் கோரப்பட்ட ICT, Quantity Surveying, Construction Technology, Cosmetology, Agriculture Production Technology, Mecatronic Technology, Ref & AC Technology ஆகிய தேசிய தொழிற் திறன் மட்டம் 5 மற்றும் 6 பாடநெறிகளுக்குரிய பொது எழுத்து மூல பரீட்சையானது 2017 ஆம் ஆண்டில் நிறுவகங்களின் கோரிக்கைகளின் அடிப்படையில் நடாத்தப்பட்டுள்ளன.

8.6 கணிப்பீட்டாளர்களுக்கான கொடுப்பனவுகளை மேற்கொள்ளல்

எமது அமைச்சின் கீழ் செயற்பட்டுவருகின்ற கீழே தரப்பட்டுள்ள நிறுவகங்களில் நடாத்தப்பட்ட கணிப்பீடுகளில் பங்குபற்றிய கணிப்பீட்டாளர்களுக்கான கொடுப்பனவுகள் மற்றும் போக்குவரத்து செலவினங்கள் தொடர்பான கொடுப்பனவுகள் தொடர்பான நடவடிக்கைகள் எமது ஆணைக்குழுவின் கணிப்பீட்டு அலகின் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

1. தொழில்நுட்பக்கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம் (தேர்ச்சி அடிப்படையிலான பாடநெறிகள் தொடர்பாக)
2. இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை (தேர்ச்சி அடிப்படையிலான பாடநெறிகள் தொடர்பாக)
3. தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற்பயிற்சி அதிகாரசபை (தேர்ச்சி அடிப்படையிலான பாடநெறிகள் தொடர்பாக)

இந்த தலைப்பின் கீழ் கணிப்பீட்டு அலுவலர்கள் 4987 பேருக்கான கொடுப்பனவுகள் தொடர்பான உறுதிச் சீட்டுகள் கணிப்பீட்டு அலகின் மூலம் சான்றுபடுத்தப்பட்டு அவை கணக்கு பிரிவிடம் கையளிக்கப்பட்டுள்ளதுடன் அவ் உறுதிச் சீட்டுகளின் மொத்த பெறுமதி ‘ரூபா 2,350,000 ஆகும்.

8.7. தேசிய தொழிற் திறன் தகுதி (NVQ) சான்றிதழ்களை அச்சிட்டு வழங்குதல்

8.7.1. தேசிய தொழிற் திறன் தகுதி (NVQ) சான்றிதழ்களை அச்சிட்டு வழங்குதல்

2017 ஆம் ஆண்டில் மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு 65,212 சான்றிதழ்களை அச்சிட்டு வழங்கியுள்ளது. அவற்றின் விபரம் கீழே காட்டப்பட்டுள்ளது.

அட்டவணை 8.7.1 தேசிய தொழிற் திறன் தகுதிகள் (NVQ) சான்றிதழாளர்கள் மற்றும் அச்சடிக்கப்பட்ட சான்றிதழ்களின் எண்ணிக்கை 2017 (நிறுவக ரீதியாக)

நிறுவகம்	சான்றிதழாளர்களின் எண்ணிக்கை			சான்றிதழ்களின் எண்ணிக்கை		
	திறன்கள் அடிப்படையிலான கணிப்பீட்டின் மூலமான சான்றிதழாளர்கள்	முன்னைய அனுபவத்தின் அடிப்படையின் மூலமான கணிப்பீட்டின் மூலமான சான்றிதழாளர்கள்	மொத்த சான்றிதழாளர்களின் எண்ணிக்கை	திறன்கள் அடிப்படையிலான கணிப்பீட்டின் மூலமான சான்றிதழாளர்கள்	முன்னைய அனுபவத்தின அடிப்படையின் மூலமான கணிப்பீட்டின் மூலமான சான்றிதழாளர்கள்	மொத்த சான்றிதழ்களின் எண்ணிக்கை
தொழில்நுட்ப கல்வி மற்றும் பயிற்சி திணைக்களம்	5314	1	5315	6103	1	6104
தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை	2290 733	4908	7926	2487 832	5479	8798
இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை	18698	1348	20030	22093	1797	23890
தேசிய இளைஞர் சேவைகள் மன்றம	1091	-	1091	1219	-	1219
தனியார் துறை	22922	-	22922	25201	-	25201
மொத்தம்	**50315 733**	**6257**	**57305**	**57103 832**	**7277**	**65212**

மூலம்: மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு தரவுத் தளம்

அட்டவணை 8.7.2 2017 ஆம் ஆண்டின் பொருட்டு 2016 ஆம் ஆண்டில் விருதளிக்கப்பட்ட சான்றிதழ்களின் எண்ணிக்கை 65,212 ஆகும். அவை தேசிய தொழிற் திறன் தகுதிகள் (NVQ) மட்டம் 01 தொடக்கம் 06 வரை பின்வருமாறு நிறுவக ரீதியாக வழங்கப்பட்டுள்ளன.

நிறுவகம்	Level 1	Level 2	Level 3	Level 4	Level 5	Level 6	மொத்த சான்றிதழ்களின் எண்ணிக்கை
தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை	4	1057	4593	3144	0	0	8798
தொழில்நுட்ப கல்வி மற்றும் பயிற்சி திணைக்களம்	52	476	2640	2347	558	31	6104
தேசிய இளைஞர் சேவைகள் மன்றம்	0	211	486	522	0	0	1219
இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை	372	2182	14129	6876	331	0	23890
தனியார் துறை	10919	1070	10166	2477	299	270	25201
மொத்தம்	**11347**	**4996**	**32014**	**15366**	**1188**	**301**	**65212**

மூலம்: மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு தரவுத் தளம்

2017 ஆம் ஆண்டில் பயிற்சி நிறுவகங்கள் மூலம் வழங்கப்பட்ட தேசிய தொழிற் திறன் தகுதி (ஏஞ) சான்றிதழ்கள் பாலின (ஆண் மற்றும் பெண்) அடிப்படையில் அட்டவணை 8.7.3 இல் தரப்பட்டுள்ளது.

அட்டவணை 8.7.3: 2017 ஆம் ஆண்டில் பாலின ரீதியாக (ஆண் மற்றும் பெண்) அச்சடிக்கப்பட்ட தேசிய தொழிற் திறன் தகுதி (NVQ) சான்றிதழ்களின் எண்ணிக்கை

நிறுவகம்	ஆண்	பெண்	மொத்தம்	வட்டாரீத
தொழில்நுட்ப கல்வி மற்றும் பயிற்சி திணைக்களம்	4504	6104	1600	6104
தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை	5955	8798	2843	8798
இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை	15294	23890	8596	23890
தேசிய இளைஞர் சேவைகள் மன்றம	451	1219	768	1219
தனியார் துறை	13226	25201	11975	25201
மொத்தம்	**39430**	**65212**	**25782**	**65212**

மூலம்: மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு தரவுத் தளம்

இதற்கு மேலதிகமாக மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு மூலம் 2017 ஆம் ஆண்டில் 1095 சான்றிதழ்கள் மீள அச்சடிக்கப்பட்டுள்ளது. அவற்றின் விபரங்கள் கீழே அட்டவணை 8.7.4 இல் தரப்பட்டுள்ளது.

அட்டவணை 8.7.4: மீள அச்சடிக்கப்பட்ட சான்றிதழ்கள் தொடர்பான விபரங்கள் 2017

சான்றிதழ்களின் வகை	சான்றிதழ்களின் எண்ணிக்கை
அச்சுப் பிழை காரணமாக மீண்டும் அச்சடிக்கப்பட்ட சான்றிதழ்கள்	1095
சான்றிதழ் தொலைந்து போனதால் நகல் சான்றிதழ் அச்சடிப்பு	61
மொத்தம்	**1156**

மூலம்: மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு தரவுத் தளம்

கீழே தரப்பட்டுள்ள அட்டவணை 8.7.5 இல் 2017 ஆம் ஆண்டில் அச்சடிக்கப்பட்டு வழங்கப்பட்ட தேசிய தொழிற் திறன் தகுதி (NVQ) சான்றிதழ்களின் எண்ணிக்கைகள் மற்றும் முன்னைய 2016 ஆம் ஆண்டில் அச்சடிக்கப்பட்டு வழங்கப்பட்ட தேசிய தொழிற் திறன் தகுதி (NVQ) சான்றிதழ்களின் எண்ணிக்கைகள் என்பவற்றுக்கு இடையிலான ஒப்பீடு

அட்டவணை 8.7.5 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் அச்சடிக்கப்பட்டு வழங்கப்பட்ட தேசிய தொழிற் திறன் தகுதி (NVQ) சான்றிதழ்களின் எண்ணிக்கைகள் இடையிலான ஒப்பீடு (சான்றிதழ் அளிப்பு வழிமுறை ரீதியான தேர்ச்சிசார் பயிற்சி (CBT) மற்றும் முன்னைய அனுபவத்தினை அங்கீகரித்தல் முறைமை RPL))

சான்றிதழ்களின் வகை	2016	2017	அதிகரிப்பு (சான்றிதழ்களின் எண்ணிக்கை)	அதிகரிப்பு சதவீதம் ஸ
தேர்ச்சிசார் பயிற்சி முறை	37 987	57103	19116	50.3
முன்னைய அனுபவத்தினை அங்கீகரித்தல்	9030	7277	(1753)	-19.4


மூலம்: மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு தரவுத் தளம்

2006 ஆம் ஆண்டு தொடக்கம் அச்சடிக்கப்பட்ட சான்றிதழ்களின் தொகை தொடர்பான விபரங்கள் அட்டவணை 7.14 இல் தரப்பட்டுள்ளது.

அட்டவணை 8.7.6 : 2006 ஆம் ஆண்டிலிருந்து 2017 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் மொத்தமாக அச்சடிக்கப்பட்ட சான்றிதழ்களின் எண்ணிக்கை

ஆண்டு	சான்றிதழ்களின் எண்ணிக்கை
2006	259
2007	1,629
2008	8,915
2009	11,249
2010	13,256
2011	16,572
2012	18,111
2013	22,855
2014	28,546
2015	44,148
2016	47,017
2017	65,212
மொத்தம்	**277,769**

மூலம்: மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு தரவுத் தளம்



மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் தேசிய தொழிற் திறன் தகுதி (NVQ) சட்டகமானது ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து 2017 ஆம் ஆண்டு முடிவடையும் போது வழங்கப்பட்ட சான்றிதழ்களின் எண்ணிக்கையானது 277,769 ஆகும்.

9.0 கைத்தொழிற்துறைசார் தொடர்புகள் பிரிவு

9.1 பின்னணி

கைத்தொழிற்துறைசார் நிறுவகங்களுக்கு அவசிய திறன்களை கொண்ட நபர்களை உருவாக்குவதே தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி துறையின் நோக்கமாகும். தொடர்ச்சியாக மாற்றமடைந்துவரும் கைத்தொழிற்துறைசார் நிறுவகங்களுக்கு ஏற்றதாக தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி துறையில் மாற்றங்களை கொண்டுவருதல் எந்தவொரு நாட்டினதும் பொருளாதார நிலை மாற்றங்களில் செல்வாக்கு செலுத்துகின்றது. ஏனைய நாடுகளுடன் ஒப்பீட்டு நோக்குகையில் கைத்தொழிற்துறை மாற்றங்களுக்கு ஏற்புடையதாக தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி துறையினை ஸ்தாபிப்பது கைத்தொழிற்துறையின் பொறுப்பாகும்.

அதற்கிணங்க, 2016 ஆம் ஆண்டில் மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவில் கைத்தொழிற்துறைசார் தொடர்புகள் என்ற பெயரில் தனியான ஒரு பிரிவானது ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் நேரடியாக கைத்தொழிற்துறையிற்கு ஒப்பானதாக தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி துறையானது தற்போது ஓர் குறிப்பிடத்தக்க மட்டத்திற்கு மேம்படுத்தப்பட்டுள்ளது.

அதற்கிணங்க, கைத்தொழிற்துறைசார் தொடர்புகள் பிரிவின் மூலம் மூன்று துறைசார் திறன்கள் சபைகளை மிகவும் செயற்பாடு மிக்க நிலைமையிற்கு கொண்டுவர முடிந்துள்ளதுடன் அவற்றின் மூலம் மிகவும் செயற்திறன் மிக்க சேவைகளை வழங்கமுடிந்துள்ளது.

அவ்வாறே, சுற்றுலா கைத்தொழிற்துறைசார் திறன்கள் சபையினை செயற்பாட்டு மட்டத்திற்கு கொ ண்டுவருவதற்கு பல தடவைகள் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் தொடர்ச்சியான ஏற்பட்ட பல்வேறு பிரச்சினைகளின் காரணமாக அத் திறன்கள் சபையினை செயற்பாட்டு மட்டத்திற்கு கொண்டுவர முடியவில்லை.

9.2 கைத்தொழிற்துறைசார் தொடர்புகள் பிரிவின் நோக்கங்கள்

கைத்தொழிற்துறைசார் நிறுவகங்களுக்கு ஏற்புடைய மனிதவளத்தினை வழங்கும் பொருட்டு தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி துறையினை மாற்றியமைப்பதே கைத்தொழிற்துறைசார் தொடர்புகள் பிரிவின் பிரதான நோக்கமாக கூறிக்கொள்ளமுடியும். இந் நோக்கத்தினை நிறைவேற்றிக் கொள்வதற்காக கீழே தரப்பட்டுள்ள செயற்பாடுகள் கைத்தொழிற்துறைசார் உறவுகள் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.

- தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி துறைசார் பயிற்சி அளிப்பு தொடர்பாக பயன்படுத்தப்பட்டுவரும் தேசிய தேர்ச்சி நியமங்கள் மற்றும் பயிற்சி பாடத்திட்டங்கள் என்பவற்றினை அபிவிருத்தி செய்வதற்காக கைத்தொழிற்துறையின் பங்களிப்பினை வழங்குதல்.

- கைத்தொழிற்துறையில் ஏற்படும் தொழிநுட்ப மாற்றங்கள் மற்றும் புதிய போக்குகள் தொடர்பாக தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி துறைசார் பயிற்சி வழங்கல்களில் ஈடுபட்டுவரும் கல்விசார் அலுவலர்களை தெரியப்படுத்துதல் மற்றும் அவை தொடர்பான பயிற்சிகளை அவசியமாயின் வழங்குதல்.

- தற்போது வழங்கப்பட்டுவரும் தொழிற்பயிற்சிகள் மற்றும் கைத்தொழிற்துறைசார் கேள்விகள் ஆகியவற்றுக்கு இடையில் திறன்சார் இடைவெளிகள் காணப்படுகின்றனவா என்பதனை ஆராய்தல் மற்றும் அவ்வாறான நிலைமையொன்று காணப்படுமாயின் அவற்றினை விலக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல்.

- தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி துறைசார் பயிற்சியினை பெற்றுவரும் பயிலுநர்களின் பொருட்டு கைத்தொழிற்துறை பற்றிய பயிற்சி வழங்கலை ஒருங்கிணைத்தல் மற்றும் அது தொடர்பாக ஒத்துழைப்பினை வழங்குதல்.

- தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி துறைசார் பயிற்சிகளை நிறைவு செய்த பயிலுநர்களிற்கு கைத்தொழிற்துறைசார் நிறுவகங்களில் காணப்படும் தொழில்வாய்ப்பு சந்தர்ப்பங்கள் தொடர்பாக தெரியப்படுத்துதலினை மேற்கொள்வதன் மூலம் அவர்களிற்கு தொழில்வாய்ப்புகளை கண்டறிந்து கொள்வதற்கு உதவுதல்.

- முறைசார் பயிற்சிகளை பெற்றுக்கொள்ளாத கைத்தொழிற்துறை நிறுவகங்களில் சேவையில் ஈடுபட்டுள்ள கைவினைஞர்களுக்கு தகைமை சான்றிதழ்களை விருதளிப்பது தொடர்பாக அவர்களிற்கு தெரியப்படுத்துதல் மற்றும் தொழிற் பாதையில் மேல்நோக்கி செல்லல் தொடர்பாக அவர்களை தயார்படுத்தல்.

- கைத்தொழிற்துறை மற்றும் அவற்றில் காணப்படும் தொழில்வாய்ப்புகள் தொடர்பாக சமூகத்தில் சிறந்த நிலைமையினை ஏற்படுத்தல்

- பாடசாலைகளிலிருந்து இடைவிலகிய மாணவ மாணவியரிடையில் துறைசார் பயிற்சிகள் தொடர்பாக விழிப்புணர்வினை ஏற்படுத்துவதன் மூலம் அவர்களிடத்தில் தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி தொடர்பான கவர்ச்சியினை ஏற்படுத்தல்

9.3 செயற்பாடுகள்

மேலே கூறப்பட்டுள்ள நோக்கங்களை ஈடுசெய்யும் முகமாக கீழே குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகளை கைத்தொழிற்துறைசார் தொடர்புகள் பிரிவானது 2017 ஆம் ஆண்டில் நிறைவேற்றியுள்ளது.

9.3.1 தேசிய தேர்ச்சி நியமங்கள் மற்றும் பாடத்திட்டங்கள் என்பவற்றினை புதிதாக அபிவிருத்தி செய்தல் மற்றும் அவற்றினை நாளதுவரையாக்குதல் என்பவற்றினை மேற்கொள்ளும் பொருட்டு துறைசார் திறன்கள் சபையிற்கு முற்பண வழங்கலினை மேற்கொள்ளல்

9.3.2 துறைசார் திறன்கள் சபைகள் மூலம் தொழிற்பயிற்சி நிறுவகங்களில் தொழிற்பயிற்சியினை பயிலும் பயிலுநர்களுக்கு கைத்தொழிற்துறைசார் பயிற்சிகளை வழங்குவதற்கு அவசிய நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

9.3.3 துறைசார் திறன்கள் சபைகளுடன் இணைந்து கைத்தொழிற்துறை நிறுவகங்களிடத்திலிருந்து தொழிலாளர் சந்தை தகவல் தொடர்பான தரவுகளை பெற்று அவை தொடர்பாக அறிக்கையினை தயாரிப்பதற்கு ஏதுவாக எமது ஆணைக்குழுவின் தகவல் மற்றும் முறைமைகள் பிரிவுடன் ஒருமித்து நடவடிக்கை மேற்கொள்ளல்.

9.3.4 பயிலுநர்களின் தொழில்வாய்ப்புகளின் பொருட்டு வசதிகளை ஏற்படுத்துவதற்கு மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் இணையத்தளத்தில் தரவு தொகுதியினை பேணுதல்.

9.3.5 மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி துறைசார் பயிற்றுநர்களை துறைசார் திறன்கள் சபைகளுடன் ஒருங்கிணைத்து அவர்களுக்கான பயிற்சிகளை மேற்கொள்ளல்.

9.3.6 துறைசார் திறன்கள் சபைகளின் அலுவலகங்களை செயற்திறன் மிக்க முறையில் நடாத்தி செல்லும் பொருட்டு அவசிய நிதி முற்பணங்களை வழங்கல்

9.3.7 துறைசார் திறன்கள் சபைகள் மிகவும் செயற்திறன் மிக்க முறையில் செயற்படுவதற்கு அவசிய நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

9.3.8 மாவட்ட தொழில் வழிகாட்டல் மத்திய நிலையம் மற்றும் துறைசார் திறன்கள் சபைகள் என்பன இணைந்து மாகாண மட்டத்தில் பாடசாலை மாணவர்களின் பொருட்டு செயலமர்வுகளை நடாத்துதல்

9.3.9 மாவட்ட தொழில் வழிகாட்டல் மத்திய நிலையம் மற்றும் அவற்றின் செயற்திறன் என்பன தொடர்பாக கணிப்பீட்டு குழு ஒன்றின் மூலம் மேற்பார்வை மற்றும் கணிப்பீட்டு செயற்பாடுகளை மேற்கொள்ளல்.

9.3.10 கைத்தொழிற்துறைசார் தொடர்புகள் பிரிவின் பங்களிப்புடன் தொழில் வழிகாட்டல் செயற்பாடுகளை ஊக்குவிக்கும் வேலைத்திட்டங்களை நடாத்துதல்

9.11 Touch your Future 2017 திறன்கள் போட்டியினை நடாத்துதல்

9.3.1 தேசிய தேர்ச்சி நியமங்கள் மற்றும் பாடத்திட்டங்கள் என்பவற்றினை அபிவிருத்தி செய்தல் மற்றும் நாளாதுவரையாக்கல் என்பவற்றினை மேற்கொள்ளும் பொருட்டு துறைசார் திறன்கள் சபையிற்கு முற்பண வழங்கலினை மேற்கொள்ளல் (B, 13).

★ **கட்டுமான துறைசார் திறன்கள் சபையின் மூலம் தேசிய தொழிற் திறன் மட்டம் 3 இற்கான ஏழு (07) குறுகிய கால பாடநெறிகளுக்கான தேசிய தேர்ச்சி நியமங்கள் / பாடத்திட்டங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளன.**

- Construction Craftsman (Mason)
- Construction Craftsman (Concreating)
- Tile Installer
- Bar Bender
- Plumber
- Wood Craftsman (Building)
- Painter (Building)

- **இருபத்துஇரண்டு (22) தேசிய தேர்ச்சி நியமங்கள் மற்றும் அவற்றுக்குரிய கணிப்பீட்டு வளங்கள் என்பன நாளாதுவரையாக்கப்பட்டுள்ளன.**

1. Bar Bender
2. Construction Site Supervisor
3. Construction Craftsman (Masonry)
4. Draftsperson
5. Industrial Plumber
6. Plumber
7. Wood Craftsman (Building)
8. Crane Operator
9. Building Service Technician
10. Construction Equipment Mechanic
11. Construction Equipment Operator
12. Multi Skilled Construction Craftsman
13. Road Construction Craftsman
14. Road Construction Site Equipment Operator
15. Scaffolder
16. Tile Installer
17. Painter (Building)
18. Laboratory Assistant for Construction Sector.
19. Survey Field Assistant

20. Assistant Quantity Surveyor
21. Elevator Technician
22. Occupational Safety and Health Officer

★ **தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப துறைசார் திறன்கள் சபையின் மூலம் தேசிய தொழிற் திறன் மட்டம் 3 இற்கான ஒரு தேசிய தேர்ச்சி நியமம் / பாடத்திட்டம் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது. (F 12)**

- ICT for Biginners தேசிய தொழிற் தகைமை மட்டம் 03 இன் பொருட்டு தயாரிக்கப்பட்டுள்ளது.

தேசிய தொழிற் தகைமை மட்டம் 04 இற்கான 03 பாடத்திட்டங்கள் கீழே தரப்பட்டுள்ளவாறு தயாரிக்கப்பட்டுள்ளன.ஐவு ளுரீழசவ

- IT Support
- Associate Software Developer
- Associate Creative Designer

★ **உற்பத்தி மற்றும் இலகு பொறியியல் துறைசார் திறன்கள் சபையின் மூலம் எட்டு (08) தேசிய தேர்ச்சி நியமங்கள் / பாடத்திட்டங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது (F 12)**

1. Tractor Operator
2. Harvest Operator
3. Electrician
4. Maintanance Technician
5. Dry Rubber Machine Operator
6. Hydrolic and Pneumatic Technician
7. Technician Pharmaceutical
8. Manufacturing Maintanance Technician

மூன்று (03) தேசிய தேர்ச்சி நியமங்கள் / பாடத்திட்டங்கள் நாளாதுவரையாக்கப்பட்டுள்ளன.

1. Electrician
2. Welder
3. Plastic Processing Machine Operator

9.3.2 துறைசார் திறன்கள் சபைகள் மூலம் தொழிற்பயிற்சி நிறுவகங்களில் தொழிற்பயிற்சியினை பயிலும் பயிலுநர்களுக்கு கைத்தொழிற்துறைசார் பயிற்சிகளை வழங்குவதற்கு அவசிய நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

மூன்று (03) துறைசார் திறன்கள் சபைகளும் இணைந்து தொழிற்பயிற்சி நிறுவகங்களின் பயிலுநர்களை கைத்தொழிற்துறைசார் நிறுவக பயிற்சிகளிற்கு ஈடுபடுத்தல் என்பது தொடர்பாக அனைத்து அலுவலர்களையும் ஒன்றிணைத்து முறையான வேலைத்திட்டமொன்றினை தயாரிக்கும் பொருட்டு ஒன்பது (09) மாகாணங்களிலும் செயலமர்வுகளை நடாத்தி இது தொடர்பாக தற்போது காணப்படும் நிலைமைகள் தொடர்பாக அனைத்து தரவுகளையும் சேகரித்து ஆய்வினை மேற்கொண்டு அதன் சிபார்சுகளை செயலமர்வுகளை நடாத்துவதன் மூலம் உரிய நிறுவக தலைவர்களுக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. இங்கு, கைத்தொழிற்துறைசார் நிறுவக பயிற்சியினை

மிகவும் பயனுள்ள முறையில் செயற்திறன் மிக்கதாக மாற்றியமைப்பதற்கு மாகாண கைத்தொழில் ஒன்றியம் (RIF - Regional Industry Form) என்ற அமைப்பு அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

9.3.3 துறைசார் திறன்கள் சபைகளுடன் இணைந்து கைத்தொழிற்துறை நிறுவகங்களிடத்திலிருந்து தொழிலாளர் சந்தை தகவல் தொடர்பான தரவுகளை பெற்று அவை தொடர்பாக அறிக்கையினை தயாரிப்பதற்கு ஏதுவாக எமது ஆணைக்குழுவின் தகவல் மற்றும் முறைமைகள் பிரிவுடன் ஒருமித்து நடவடிக்கை மேற்கொள்ளல்.

தற்போது செயற்பாட்டிலுள்ள துறைசார் திறன்கள் சபைகள் மூன்றினதும் இணையத்தளங்களை தயாரிக்கும் செயற்பாடானது முனைப்பாக இடம்பெற்றுவருவதுடன் ஒவ்வொரு திறன்கள் சபைகளும் சம்பந்தப்பட்ட தொழிலாளர் சந்தை தகவல்களை தத்தமது இணையத்தளங்களில் பதிவேற்றம் செய்வதுடன் அவ் இணையத்தளங்கள் மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் இணையத்தளத்துடன் தொடர்புபடுத்தும் (டமை) செயற்பாடானது தகவல் மற்றும் முறைமைகள் பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படும்.

9.3.4 பயிலுநர்களின் தொழில்வாய்ப்புகளின் பொருட்டு வசதிகளை ஏற்படுத்துவதற்கு மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் இணையத்தளத்தில் தரவு தொகுதியினை பேணுதல்.

துறைசார் திறன்கள் சபைகளின் இணையத்தளங்களில் இது தொடர்பான தரவுகளை பதிவேற்றம் செய்வதற்கு அவசியமான வசதிகள் காணப்படுவதனால் அவ் இணையத்தளங்களில் தரவுகள் நாளாதுவரையாக்கம் செய்யப்பட்டதன் பின்னர் இவ் இணையத்தளங்கள் தொழிற்படும் நிலையினை அடைந்த பின்னர் மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் இணையத்தளத்துடன் தொடர்புபடுத்தப்படும்.

9.3.5 மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி துறைசார் பயிற்றுநர்களை துறைசார் திறன்கள் சபைகளுடன் ஒருங்கிணைத்து அவர்களுக்கான பயிற்சிகளை மேற்கொள்ளல்.

- ★ கட்டுமான துறைசார் திறன்கள் சபை மூலம் அபிவிருத்தி செய்யப்பட்ட குறுகியகால பாடநெறிகள் தொடர்பாக பயிற்றுநர்களுக்கு செய்முறைகளுடன் கூடியதாக பாடநெறிகள் தொடர்பான இரண்டு பயிற்சி அமர்வுகள் கொத்தலாவல பாதுகாப்பு வித்தியாலயத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- ★ தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப துறைசார் திறன்கள் சபை மூலம் பயிற்றுநர்களுக்கு பாடநெறிகள் தொடர்பான இரண்டு செயலமர்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- ★ உற்பத்தி மற்றும் இலகு பொறியியல் துறைசார் திறன்கள் சபை மூலம் அபிவிருத்தி செய்யப்பட்ட குறுகியகால பாடநெறிகள் தொடர்பாக பயிற்றுநர்களுக்கு மூன்று பாடநெறிகள் தொடர்பான பயிற்சி அமர்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- ★ காய்ச்சி இணைத்தல் மற்றும் அலுமினிய சட்டகம் புனைதல் ஆகிய பாடநெறிகள் தொடர்பாக தேர்வுசெய்யப்பட்ட பயிற்றுநர்களுக்கு செய்முறைகளுடன் கூடியதாக இரண்டு செயலமர்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

9.3.6 துறைசார் திறன்கள் சபைகளின் அலுவலகங்களை செயற்திறன் மிக்க முறையில் நடாத்தி செல்லும் பொருட்டு அவசிய நிதி முற்பணங்களை வழங்கல்

ஒவ்வொரு துறைசார் திறன்கள் சபைகளின் செயற்பாடுகள் தொடர்பாகவும் ரூபா ஆறு (06) மில்லியன்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் காலாண்டிற்கு ஒரு தடவை இந் நிதியானது வழங்கப்படுகின்றது. இங்கு செலவினம் தொடர்பான நிதி தொகைகள் உள்ளடங்கலான அறிக்கையானது கைத்தொழிற்துறைசார் தொடர்புகள் பிரிவின் மூலம் தயாரிக்கப்படுவதுடன் இந் நிதியானது செலவு செய்யப்படுவது தொடர்பான செயற்பாடுகளை நெறிப்படுத்துவது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

9.3.7 துறைசார் திறன்கள் சபைகள் மிகவும் செயற்திறன் மிக்க முறையில் செயற்படுவதற்கு அவசிய நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

கட்டுமான துறைசார் திறன்கள் சபையின் ஆறு (06) பணிப்பாளர் சபை கூட்டங்களையும் மற்றும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப துறைசார் திறன்கள் சபையின் பன்னிரெண்டு (12) பணிப்பாளர் சபை கூட்டங்களையும் மற்றும் உற்பத்தி மற்றும் இலகு பொறியியல் துறைசார் திறன்கள் சபையின் பன்னிரெண்டு (12) பணிப்பாளர் சபை கூட்டங்களையும் நடாத்துவதற்குரிய நிதி ஏற்பாடானது வழங்கப்படுகின்றது. அவ்வாறே, பொதுவாக துறைசார் திறன்கள் சபைகளில் காணப்படும் பிரச்சினைகள் தொடர்பாக கலந்துரையாடுவதற்கும் மற்றும் எதிர்கால வேலைத்திட்டங்களை தயாரிப்பதற்கும் ஏதுவாக மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவானது துறைசார் திறன்கள் சபைகளின் தலைவர்களுடன் பதினொரு (11) கூட்டங்களை 2017 ஆம் ஆண்டில் நடாத்தியுள்ளது.

9.3.8 மாவட்ட தொழில் வழிகாட்டல் மத்திய நிலையம் மற்றும் துறைசார் திறன்கள் சபைகள் என்பன இணைந்து மாகாண மட்டத்தில் பாடசாலை மாணவர்களின் பொருட்டு செயலமர்வுகளை நடாத்துதல்

கேகாலை, ஹம்பாந்தோட்டை மற்றும் மாத்தளை ஆகிய மாவட்டங்களிலுள்ள பாடசாலைகளில் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளதுடன் அது தொடர்பாக துறைசார் திறன்கள் சபைகள் மற்றும் மாவட்ட தொழில் வழிகாட்டல் அலுவலர்கள் மிகவும் வினைத்திறனான முறையில் பங்களிப்பினை மேற்கொண்டுள்ளனர்.

9.3.9 மாவட்ட தொழில் வழிகாட்டல் மத்திய நிலையம் மற்றும் அவற்றின் செயற்திறன் என்பன தொடர்பாக கணிப்பீட்டு குழு ஒன்றின் மூலம் மேற்பார்வை மற்றும் கணிப்பீட்டு செயற்பாடுகளை மேற்கொள்ளல்.

தற்போது செயற்பாட்டிலுள்ள மாவட்ட தொழில் வழிகாட்டல் மத்திய நிலையங்கள் மற்றும் அவற்றினால் மேற்கொள்ளப்பட்டுவரும் செயற்பாடுகள் என்பன தொடர்பான தரவுகளை பெற்றுக்கொள்ளும் பொருட்டு மேற்பார்வை செய்தல் மற்றும் கணிப்பீட்டு செயற்பாடுகளை மேற்கொள்ளல் என்பன கைத்தொழிற்துறைசார் தொடர்புகள் பிரிவின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அதற்கிணங்க, கீழே தரப்பட்டுள்ள மத்திய நிலையங்கள் மேற்பார்வை மற்றும் கணிப்பீடு என்பவற்றுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

1. அனுராதபுரம் தொழில்நுட்பவியல் கல்லூரி
2. வவுனியா தொழில்நுட்ப கல்லூரி
3. யாழ்ப்பாணம் தொழில்நுட்பவியல் கல்லூரி
4. கிளிநொச்சி இலங்கை ஜேமன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவகம்
5. ஹொரண மாவட்ட தொழிற்பயிற்சி அதிகாரசபை
6. பேராதனை மாவட்ட தொழிற்பயிற்சி அதிகாரசபை
7. கண்டி தொழில்நுட்பவியல் கல்லூரி
8. இரத்தினபுரி தொழில்நுட்பவியல் கல்லூரி
9. மட்டக்களப்பு தொழில்நுட்ப கல்லூரி
10. பதுளை தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற்பயிற்சி அதிகாரசபை
11. வாரியப்பொல தொழில்நுட்ப கல்லூரி
12. மாத்தறை தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற்பயிற்சி அதிகாரசபை
13. மாத்தறை தொழில்நுட்ப கல்லூரி

9.3.10 கைத்தொழிற்துறைசார் தொடர்புகள் பிரிவின் பங்களிப்புடன் தொழில் வழிகாட்டல் செயற்பாடுகளை ஊக்குவிக்கும் வேலைத்திட்டங்களை நடாத்துதல்

தொழில் வழிகாட்டல் மற்றும் தேசிய தொழிற் திறன் தகுதிகள் என்பன தொடர்பாக முறைசாரா கல்வித்துறை போதனாசிரியர்களுக்கு தெரியப்படுத்தும் எட்டு (08) செயலமர்வுகள் கைத்தொழிற்துறைசார் தொடர்புகள் பிரிவின் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அவ்வாறே, பாடசாலை மாணவர்களுக்கு விழிப்புணர்வினை ஏற்படுத்தும் இரண்டு (02) செயலமர்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

9.3.11 Touch your Future 2017 திறன்கள் போட்டியினை நடாத்துதல்

இலங்கையிலுள்ள இளைஞர்களின் ஆற்றல் / திறன்களை மேம்படுத்தும் நோக்கில் இத் திறன்கள் போட்டியானது மூன்றாவது முறையாக 2017 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டது. மூன்று சுற்றுக்களை கொண்ட இப் போட்டியில் ஒவ்வொரு துறைகள் தொடர்பாகவும் திறமைகளை வெளிப்படுத்திய 33 பேர் இறுதி வெற்றியாளர்களாக தேர்வு செய்யப்பட்டனர். அதற்கிணங்க, பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் என்பன 2017 ஆம் ஆண்டு யூலை மாதம் 15 ஆம் திகதியன்று சுகததாச விளையாட்டு அரங்கில் இடம் பெற்ற நிகழ்வின் போது அதிமேன்மை தங்கிய ஜனாதிபதி மைத்திரிபால ஸ்ரீசேன அவர்களினால் வழங்கிவைக்கப்பட்டன.

9.3.12 விசேட செயற்பாடுகள் / இளைஞர் கிராமம் வேலைத்திட்டத்தினை நடைமுறைப்படுத்தல்

2017 ஆம் ஆண்டில் திருகோணமலை மாவட்டத்தில் இடம்பெற்ற இளைஞர் கிராமம் நிகழ்ச்சித்திட்டமானது கைத்தொழிற்துறைசார் தொடர்புகள் பிரிவினால் ஒருங்கிணைப்பு செய்யப்பட்டதுடன் அதில் பங்குபற்றிய இளைஞர்களிற்கு விழிப்புணர்வினை ஏற்படுத்தும் செயலமர்வுகள் மேற்கொள்ளப்பட்டதுடன் கண்காட்சி கூடமொன்று நிறுவப்பட்டு உரிய தகவல்கள் பொதுமக்களிற்கு வழங்கப்பட்டது.

★ கட்டுமான துறைசார் திறன்கள் சபை மூலம் முன்வைக்கப்பட்ட தேர்வுசெய்யப்பட்ட கட்டுமான துறைசார் பாடநெறிகள் தொடர்பாக வரைபடங்களுடன் கூடிய கலைச்சொற் களஞ்சியத்தினை அபிவிருத்தி செய்வதற்குரிய அனுமதியானது வழங்கப்பட்டது. முதலாவதாக குழாய் பொருத்துதல் பாடநெறிக்குரிய கலைச்சொற் களஞ்சியத்தின் வரைவினை தயாரிக்கும் பணிகள் இடம்பெற்றுவருகின்றன.

★ கட்டுமான கைத்தொழிற்துறைசார் திறன்கள் சபை மற்றும் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பவியல் கைத்தொழிற்துறைசார் திறன்கள் சபை ஆகியவற்றினால் திறன் இடைவெளிகள் தொடர்பான கணிப்பீடானது நிறைவுசெய்யப்பட்டுள்ளன.

- கட்டுமானம்
- தகவல் தொழில்நுட்பம்

இத் திறன் இடைவெளிகள் தொடர்பான அறிக்கைகளிற்கு இணங்க பயிற்சி திட்டங்களை தயாரிப்பதற்கான பங்களிப்பினை வழங்குதல்

★ துறைசார் திறன்கள் சபைகளின் பணிப்பாளர் கூட்டங்களில் பங்குபற்றல்

- திரு. மஞ்சுள விதானபத்திரண, பதில் பணிப்பாளர் (கைத்தொழிற்துறைசார் தொடர்புகள் பிரிவு) அவர்கள் கட்டுமாக துறைசார் திறன்கள் சபை மற்றும் உற்பத்தி மற்றும் இலகுபொறியியல் கைத்தொழிற்துறைசார் திறன்கள் சபை ஆகியவற்றின் பணிப்பாளர் சபை கூட்டங்களில் பங்குபற்றி வருகின்றார். ஆரம்பத்தில் குழாய் பொருத்துதல் தொடர்பான விடயத்திற்குரிய கலைச்சொற் களஞ்சியத்தினை தயாரிக்கும் செயற்பாடானது இடம்பெற்று வருகின்றது.

- திருமதி. கே. ஏ. டீ. ஹஷந்தி லக்மினி, உதவி பணிப்பாளர் (கைத்தொழிற்துறைசார் தொடர்புகள் பிரிவு) அவர்கள் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பவியல் துறைசார் திறன்கள் சபை மற்றும் சுற்றுலா கைத்தொழிற்துறைசார் திறன்கள் சபை ஆகியவற்றின் பணிப்பாளர் சபை கூட்டங்களில் பங்குபற்றி வருகின்றார்.

★ TVET Guide வெளியீடு தொடர்பாக கடிதங்களை வழங்குதல்

மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் தகவல் மற்றும் முறைமைகள் பிரிவினால் வெளியீடு செய்யப்படும் வுஏநுவு புரனைந என்ற பெயரிலான வெளியீட்டின் பொருட்டு கைத்தொழிற்துறைசார் தொடர்புகள் பிரிவு மற்றும் துறைசார் திறன்கள் சபைகள் என்பன தொழில் வழிகாட்டல் தொடர்பான சில கடிதங்களை அனுப்பி வைத்துள்ளன.

★ கணிப்பீட்டு செய்முறை தொடர்பாக பங்களிப்பினை வழங்குதல்

திறன்கள் அபிவிருத்தி அலுவலர்கள் / அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான பயிற்சியானது தொழில்நுட்ப தொழில்வல்லுநர்களுக்கான பயிற்சி நிறுவகத்தில் இடம்பெற்றதுடன் அப் பயிற்சி நிறைவில் அவ் உத்தியோகத்தர்கள் தொடர்பான கணிப்பீட்டு செய்முறை இடம்பெற்றுதுடன் அக் கணிப்பீட்டு குழுவில் பிரதிநிதியாக கைத்தொழிற்துறைசார் தொடர்புகள் பிரிவின் அலுவலர்கள் இடம்பெற்றிருந்தனர்.

★ மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்திற்கு பங்குபற்றல்

கைத்தொழிற்துறைசார் தொடர்புகள் பிரிவின் அலுவலர்கள் கைத்தொழிற்துறை நிறுவக பிரதிநிதிகளின் சேவையிற்கு மதிப்பளித்தல் மற்றும் எஞ்சிய கைத்தொழில் நிறுவக பயிற்சி தொடர்பாக மாணவர்களை ஈடுபடுத்துதல் போன்ற விடயங்களை ஆராய்வது தொடர்பாக தங்கொட்டுவ இல் இடம்பெற்ற மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் பங்குபற்றி விருந்தினர் உரையினை மேற்கொண்டதுடன் அங்கு கலந்துரையாடப்பட்ட செய்முறை பிரச்சினைகளுக்கு தீர்வுகளும் அளித்தனர்.

★ கண்காட்சி தொடர்பாக பங்குபற்றல்

பொதுமக்கள் மற்றும் மாணவர்களிற்கு விழிப்புணர்வினை ஏற்படுத்தும் பொருட்டு ஒழுங்கு செய்யப்பட்ட கண்காட்சிக்கு பங்களிப்பினை வழங்கியதுடன் அங்கு கைத்தொழிற்துறைசார் திறன்கள் சபைகள் தொடர்பான தகவல்களை உள்ளடக்கிய துண்டுப்பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன.

10.0 தகவல் முறைமைகள் பிரிவு

மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் தகவல் முறைமைகள் பிரிவினால் பல்வேறுபட்ட தரவுகள் சேகரிக்கப்பட்டு தேவைக்கேற்ற வகையில் ஒழுங்குபடுத்தி அத்தகவல்களை உரியவர்களுக்கு வழங்கும் பணியானது செவ்வனே நிறைவேற்றப்பட்டு வருகின்றது. இப் பணியை நிறைவேற்றுவதற்காக தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தினை பயன்படுத்துவதுடன், அதனூடாக தகவல்களை மிக சுலபமாக பெற்றுக்கொள்வதற்கும் மற்றும் பயன்படுத்துவதற்கும் முடிகின்றது. தகவல்களை ஒட்டு மொத்தமாக கணனியில் பதிவேற்றம் செய்வதன் மூலம் நிறுவகத்தின் அபிவிருத்தியை எட்டுவதற்கு இயலும். மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் தகவல் முறைமைகள் பிரிவானது அத்தியாவசிய தகவல் சேவைகளை முறையாக வழங்குவதன் பொருட்டு நவீன தொழில்நுட்பத்தினை பயன்படுத்தி அத்தகவல்களை நிறுவகத்தின் முன்னேற்றத்திற்காக வெற்றிகரமாக பயன்படுத்திக் கொள்ளக்கூடிய முறையில் வழங்கிவருவதுடன் நிறுவகத்தின் வளர்ச்சிக்காக எடுக்கப்படும் மூலோபாயங்கள் மற்றும் உரிய திட்டமிடல்கள் என்பனபவற்றுக்காக நாளாந்தம் துரிதமாக அதிகரித்து வரும் தகவல்களை தரவுத் தளத்தின் ஊடாக வழங்கியும் வருகின்றது.

10.1 தகவல் முறைமைகள் பிரிவின் பிரதான நோக்கங்கள்

மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் செயற்பாடுகளை ஒழுங்காக்குவதற்கும் சுலபமாக்குவதற்கும் அவசியமான பல்வேறுபட்ட கணனி தகவல் முறைமைகளை வடிவமைத்தல், அபிவிருத்தி செய்தல் மற்றும் பராமரித்தல் என்பன இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது. தகவல் முறைமைகள் பிரிவானது பணிப்பாளர், தொழிற் சந்தை பகுப்பாய்வாளர் (பதில்), புள்ளிவிபரவியலாளர், பிரதி பணிப்பாளர் மற்றும் நூலகர், பிரதி பணிப்பாளர் (பதில்), உதவி பணிப்பாளர்கள் இரண்டு (02) பேர், அபிவிருத்தி உத்தியோகத்தர் ஒருவர் (01), நிகழ்ச்சித்திட்ட ஒருங்கிணைப்பு அலுவலர் மற்றும் கணனி வரைகலை வடிவமைப்பாளர் மற்றும் கணனி வன்பாகத் தொழில்நுட்பவியலாளர் ஆகியோரைக் கொண்ட பதவியணியொன்றை 2017 ஆம் ஆண்டில் கொண்டிருந்தது.

10.2 தகவல் முறைமைகள் பிரிவின் பிரதான செயற்பாடுகள் மற்றும் வேலைத்திட்டங்கள் கீழே தரப்படுகின்றன.

- தேவைக்கேற்ப தொழிற்சந்தை தகவல்களை பகுப்பாய்வு செய்து வழங்கல்
- எதிர்வரும் வருடத்திற்கான தொழில்நுட்ப மற்றும் தொழிற் கல்வி மற்றும் பயிற்சி வழிகாட்டியினை (TVET Guide) வெளியீடு செய்தல் மற்றும் தேவையான தகவல் முறைமையொன்றினை பேணுதல்
- ருஹேஏழுஊ பிராந்திய மத்திய நிலையத்தினை நடாத்திச் செல்லுதல் மற்றும் அதன் பணிகளையும் வேலைத்திட்டங்களையும் தொடர்ச்சியாக செயற்படுத்துதல்
- தொழிற் சந்தை தகவல் முறைமை மற்றும் இணையத் தள பக்கத்தினை அபிவிருத்தி செய்தல் மற்றும் பராமரித்தல்
- தொழிற் சந்தை தகவல் வெளியீட்டினை தயாரித்தல் மற்றும் வெளியிடுதல்
- மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் தொழிற்சந்தை தகவல் தொடர்பான பருவ வெளியீட்டினை (News Letter) தயாரித்தல் மற்றும் பிரசுரித்தல்
- மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் கீழ் இயங்கும் ஏனைய பிரிவுகளின் செயற்பாடுகளை வெற்றிகரமாக கொண்டு செல்வதற்காக கணனி முறைமையினை நிர்மாணித்தல் மற்றும் அதனை பேணுதல்
- மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ள மற்றும் பதிவுசெய்யப்பட வேண்டியுள்ள நிறுவகங்களுக்கான வசதிகளை ஏற்படுத்துவதற்கு அவசியமான கணனி மென்பொருளினை பேணுதல் மற்றும் அவ் வேலையினை வெற்றிகரமாக நடாத்திச் செல்வதற்கு அவசியமான தகவல்களை அந் நிறுவகங்களுக்கு வழங்குதல்

- எமது நிறுவகத்தினால் மேற்கொள்ளப்பட்டுவரும் சேவைகள் தொடர்பான தகவல்களை பொதுமக்களுக்கு வழங்குவதற்கு ஏதுவாக இணையத் தளத்தினை அபிவிருத்தி செய்தல், பேணுதல் மற்றும் இணையத்தளத்தினை நாளாதுவரையாக்குதல்.
- தேசிய தொழிற் திறன் தகுதிகள் (NVQ) சான்றிதழ்களை அச்சிடுவதற்கு தேவையான கணனி மென்பொருட்களை பேணுதல், தேவையான தரவுகளை பதிவேற்றம் செய்வதற்காக ஏனைய பதிவுசெய்யப்பட்ட பயிற்சி நிறுவகங்களுக்கு ஆலோசனைகள் வழங்கல் மற்றும் அத்தரவுகளை முகாமைத்துவம் செய்தல்
- திறன்கள் துறை அபிவிருத்தி திட்ட (SSDP) வேலைத்திட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டுவரும் முகாமைத்துவ தகவல் முறைமை (MIS) தொடர்பாக ஓர் இணைப்பாளராக செயற்பட்டு மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவிற்கு அவசியமான தகவல்களை வழங்குதல்
- மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவிலுள்ள ஒவ்வொரு பிரிவிற்கும் அவசியமான கணனி இயந்திரங்கள் மற்றும் அதனோடு சம்பந்தப்பட்ட உபகரணங்களை கொள்வனவு செய்வது தொடர்பாக உள்ள தேவைகளை அடையாளம் காணல் மற்றும் அதற்கு தேவையான விபரக் குறிப்பினை வழங்குதல் மற்றும் தேவையான தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்கல்
- இவ்வாணைக்குழுவில் கணனி வலையமைப்பினை ஒழுங்குசெய்தல், இணையத்தளம் மற்றும் மின்னஞ்சல் வசதிகளை ஏற்படுத்தல், இவற்றுக்கு அவசியமான சேவர்களை (Servers) ஒழுங்கான முறையில் பராமரித்தல் மற்றும் அவற்றுக்கான வன்பொருட்கள் மற்றும் மென்பொருட்கள் ஆகியவற்றினை நாளாதுவரையாக்கல்
- மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவில் கடமையாற்றும் அலுவலர்களுக்கு நூலக வசதிகள் மற்றும் அதனுடன் தொடர்பான தகவல் சேவைகளை திட்டமிடல் மற்றும் நூலகத்தினை நடாத்திச் செல்லுதல்
- தேவைக்கேற்ப உரிய தொழிற் சந்தைத் தரவுகளை பகுப்பாய்வு செய்து வழங்குதல் போன்ற அலுவல்களை இப்பிரிவு மேற்கொள்கின்றது.
- மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் செயற்பாடுகளிற்கு அவசிய கணனி வரைபடங்களை வரைதல்

இப்பிரிவின் பிரதான தகவல் முறைமைகளானது தொழிற் சந்தை தகவல் முறைமை, தேசிய தொழிற்திறன் தகைமை அளிப்பு முறைமை மற்றும் திட்டமிடல் மற்றும் ஆராய்ச்சி முறைமை மற்றும் பயிற்சி நிறுவகங்களை பதிவு செய்தல் மற்றும் பாடநெறிகளிற்கு தராதர அங்கீகாரம் அளித்தல் தகவல் முறைமை ஆகியன தகவல் முறைமை என்ற முறைமைகளை உள்ளடக்கியுள்ளது. 2017 ஆம் ஆண்டில் தகவல் முறைமைகள் பிரிவிற்கு பின்வரும் பிரதான நடவடிக்கைகளை மேற்கொள்ளக்கூடியதாக இருந்தது.

10.3 தொழிற்சந்தை தகவல் முறைமையை அபிவிருத்தி செய்தல் மற்றும் பராமரித்தல்

இலங்கையின் நடப்பு தொழிற் கேள்விகள் / கிராக்கிகள் மற்றும் ஏனைய தொழிற் சந்தை தகவல்களை வழங்குதல் ஆகியவற்றைக் குறிக்கோளாகக் கொண்டு தொழிற் சந்தை தகவல் முறைமையொன்று மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

தரவு ஆய்வு மற்றும் பகுப்பாய்வு ஆகியவற்றின் மூலம் பெற்றுக்கொள்ளப்படும் தகவல்களை தொழிற் சந்தைத் துறைசார் கொள்கை வகுப்பாளர்கள், தொழில் வழிகாட்டுநர்கள், தொழில்சார் வேலைவாய்ப்பு நிறுவகங்கள், பயிற்றுவிப்பாளர்கள், தொழில் தருநர்கள் மற்றும் தொழில் தேடுநர்கள் ஆகியோரிற்கு பயனுறும் விதமாக பிரசுர வடிவில் வெளியிடப்பட்டு வருகின்றது.

இத் தொழிற்சந்தை தகவல்களை மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவால் வெளியீடு செய்யப்படும் தொழிற்சந்தை தகவல்களை பருவ வெளியீடுகள் (LMI Bulletin) மூலமும் மற்றும் ஆணைக்குழுவின் இணைய தளத்தின் பக்கம் (TVEC website: www.tvec.gov.lk) மூலமும் பெற்றுக்கொள்ள முடியும்.

10.4 தொழிற்சந்தை தகவல் பருவெளியீட்டை தொகுத்தல் மற்றும் பிரசுரித்தல்

2017 ஆம் ஆண்டில் இரண்டு (02) தொழிற்சந்தை பருவவெளியீடுகளை பிரசுரிப்பதற்கு இப் பிரிவுக்கு இயலுமாயிருந்தது. இப்பிரசுரங்களின் மூலம் 2016 ஆம் ஆண்டின் இறுதி அரையாண்டிற்கான மற்றும் 2017 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டிற்கான இலங்கையின் தொழிற்சந்தையில் நிலவிய நிலைவரங்கள் மிகவும் துல்லியமாக பகுப்பாய்வு செய்யப்பட்டு முன்வைக்கப்பட்டுள்ளது. தொழிற்சந்தைத் தகவல் பருவ வெளியீடு பின்வரும் ஐந்து (05) பாகங்களை கொண்டுள்ளது.

1. தொழிலுக்காக நிலவுகின்ற கேள்விகள்
2. தொழில் வாய்ப்புகள்
3. தொழில் வாய்ப்பின்மைகள்
4. தொழிற் சந்தை வழங்கல்கள் அல்லது பல்வேறுபட்ட தொழில்கள் தொடர்பாக நிலவும் தொழிலாளர்களின் வழங்கல்கள்
5. தொழிற் சந்தை தொடர்பாக நிலவும் கேள்விகள் மற்றும் ஆராய்ச்சித் தகவல்கள்

2017 ஆம் ஆண்டில் தொழிற்சந்தை தகவல் பிரசுரத்தின் தரத்தை விருத்தி செய்வதற்கு பற்பல செயற்பாடுகளை இப்பிரிவு மேற்கொண்டது.

அதற்கு இணங்க, தொழிற் சந்தைத் தகவல் பிரசுரத்தினை ஒரு புதிய பரிணாமத்துடன் அதாவது தொழிற் சந்தை தொடர்பாக நடாத்தப்பட்ட ஆராய்ச்சிகள், தொழிற் படை தொடர்பான தகவல்கள், தொழிற் சந்தையின் போக்குகள் என்பன தொடர்பான விசேடமான ஆர்வமுடையோருக்கு மிகவும் பயனுள்ளதாக அமையும் வண்ணம் அவை தொடர்பான தகவல்களை இப்பிரசுரத்தில் வெளியீடு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தொழிற்சந்தை தகவல் பிரசுரத்தில் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு ரீதியில் தொழில்களுக்கான கேள்விகள், உள்ளூர் மற்றும் வெளிநாட்டு ரீதியிலான புதினப் பத்திரிகை விளம்பரங்களை அடிப்படையாகக் கொண்டு பல்வேறுபட்ட கைத்தொழிற் துறைசார் வேலைவாய்ப்புக்கள், தொழிலுக்கு அமர்த்துதல்கள், கல்வித் தகைமைகள், பால் (ஆண் / பெண்), அனுபவம் ஆகியவற்றின் அடிப்படையில் தொழில்கள் தொடர்பான அனைத்து தகவல்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2006 ஆம் ஆண்டு தொடக்கம் 2015 ஆம் ஆண்டு வரையான ஒவ்வொரு வருடத்திலும் சிலுமின மற்றும் சண்டே ஒப்சேர்வர் பத்திரிகைகளிலும் மற்றும் அரச வர்த்தமானி அறிவித்தல்களிலும் வெளியிடப்பட்டுள்ள விளம்பரங்கள் ஆய்வு செய்யப்பட்டு அவ் விளம்பரங்களின் எண்ணிக்கை தொடர்பான விபரங்கள் அட்டவணை 8.1 இல் காட்டப்பட்டுள்ளன.

அட்டவணை 8.1 - வெளியிடப்பட்டுள்ள தொழில் வெற்றிடங்கள் தொடர்பான விளம்பரங்களின் எண்ணிக்கைகள்


ஆண்டு	நிலவிய தொழில் வெற்றிட விளம்பரங்களிள் எண்ணிக்கை
2006	104,839
2007	113,060
2008	116,157
2009	82,167
2010	124,741
2011	108,193
2012	136,994

ஆண்டு	நிலவிய தொழில் வெற்றிட விளம்பரங்களிள் எண்ணிக்கை
2013	107.698
2014	91.430
2015	81.369
2016	74.248

- குறிப்பு: அரச வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட வேலைவாய்ப்புக்கள் இங்கு உள்ளடக்கப்பட்டுள்ளன.



2006 ஆம் ஆண்டு தொடக்கம் 2015 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் தொழில்கள் தொடர்பாக நிலவிய கேள்விகள் பற்றிய விளம்பரங்கள் கீழே தரப்பட்டுள்ள நேர்கோட்டு வரைபில் காட்டப்பட்டுள்ளது.



புதினப் பத்திரிகை விளம்பரங்கள் மூலம் வெளியீடு செய்யப்பட்டுள்ள தொழில் வெற்றிடங்கள் தொடர்பான தகவல்களை மேலும் பயனுள்ளதாக்குவதற்கு மின்னஞ்சல் மற்றும் இணையத்தள தகவல்களும் கருத்திற்கொள்ளப்பட்டுள்ளன.

10.5 தொழிற் சந்தைத் தகவலகள் தொடர்பான இணையப் பக்கம்

வினைத்திறனானதும் உற்பத்தித் திறன் மிக்கதானதுமான தொழிற் சந்தைத் தகவல் சேவையினை நாளதுவரையாக்கி பாவனையாளர்களுக்கு வழங்குவதை குறிக்கோளாகக் கொண்டு இவ் இணையத் தளமானது 2017 ஆம் ஆண்டில் நாளாதுவரையாக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றது. 2017 ஆம் ஆண்டில் இத்தகவல்கள் இடைத்தொடர்புடைய வரைபுகளாகவும் மற்றும் அட்டவணைகளாகவும் (Interactive Graphs and Table) மேலும் முன்னேற்றம் செய்யப்பட்டுள்ளன. இதனூடாக:

- நடப்பு தொழிற் சந்தைத் தகவல்கள் தொடர்பான பகுப்பாய்வு
- பயிற்சிப் பாடநெறிகள் தொடர்பான தகவல்களை இணைய தளத்தில் பார்வையிடக் கூடியதாக உள்ளமை
- கடந்தகால தொழிற்சந்தைத் தகவல் வெளியீடுகள் தொடர்பான தகவல்கள்
- தொழிற்சந்தைத் தகவல்கள் தொடர்பான எண்ணக்கருக்கள் மற்றும் வரைவிலக்கணங்கள்
- பயனுள்ள இணையத் தளங்களினுள் உட்பிரவேசித்தல்
- சுய விபரத் தொகுப்புடன் கூடிய விண்ணப்ப படிவத்தினை தயாரிப்பதற்கான உதவி வழிமுறைகள்
- தொழில் வெற்றிடங்கள் தொடர்பான தகவல்களை பெற்றுக்கொள்ள முடிகின்றமை
- தொழில்நுட்ப மற்றும் அதனுடன் தொடர்புடைய தொழிற் துறைகளிடையில் அதிகூடுதலான கேள்விகள் நிலவுகின்ற பத்து (10) தொழிற் துறைசார் தகவல்களையும் மற்றும் அவ்வாறான முக்கிய விடயங்களையும் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.
- வருடாந்த தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி வழகாட்டியில் (TVET Guide) உள்ள பாடநெறிகளின் விபரம்
- இப்பிரவானது, தொழிற் சந்தை தகவல்கள் தொடர்பான எண்ணக்கருக்கள், வரைவிலக்கணங்கள், சொற்களஞ்சியம், கலைச்சொற்கள் ஆகியனவற்றினையும் மற்றும் தொழிற் சந்தை தொழில்வாய்ப்பு விளம்பரங்களிற்கு மேலதிகமான சேவையாக தொழிலாளர்களால் முன்வைக்கப்படுகின்ற பல்வேறுபட்ட தகவல்களை நாளாதுவரையாக்கம் செய்து இவ் இணையத்தளப் பக்கத்தில் தரவேற்றம் செய்கின்றது.

தொழிற்சந்தை தகவல் இணைய பக்கத்தின் வடிவம் கீழே தரப்பட்டுள்ளது




10.6 இணையத் தளம், மின்னஞ்சல் மற்றும் உள்ளிணைய வசதிகள்

மின்னஞ்சலைப் பயன்படுத்துதல் தொடர்பான அரச சுற்றறிக்கையின் பிரகாரம் அலுவலக தகவல்களை பரிமாறிக்கொள்கையில் வினைத்திறனை அதிகரித்தல், செலவைக் குறைத்தல் மற்றும் நேரத்தை சிக்கனப்படுத்தல் ஆகியவற்றிற்காக தடங்கலற்ற இணையத் தள மற்றும் மின்னஞ்சல் வசதிகளை பதவியணியில் உள்ள அனைவரும் பயன்படுத்துவதற்கு ஏதுவாக வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளது. அதனூடாக, ஆணைக்குழுவின் ஊழியர்கள் தொடர்பாடல் வினைத்திறனை அதிகரித்துக் கொள்வதன் பொருட்டும் மற்றும் புதிய அறிவினை பெற்றுக்கொள்வதற்காகவும் இவ் இணையத் தளத்தின்னூடாக வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளது. பணியாளர்களுக்கிடையே தகவல்களை பகிர்ந்துகொள்வதற்காக உள்ளிணையமென்றும் இப்பிரிவினால் பராமரிக்கப்பட்டு வருகின்றது.

இப் புதிய தொடர்பாடல் முறையிலுள்ள நெகிழ்வுத்தன்மை மற்றும் அதன் மூலமாக தகவல்களை பெற்றுக்கொள்வதற்காக உள்ள வசதிகள் போன்றவற்றின் காரணமாக அது பயனாளர்களின் கவனத்தை ஈர்த்துள்ளது.

மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் ஊழியர்களிடையே வினைத்திறனான முறையில் தகவல் தொடர்பாடலை மேற்கொள்வதற்கான கூடுதலான வாய்ப்புகளை ஏற்படுத்தும் பொருட்டு மின்னஞ்சல் (E-mail) மற்றும் இணையத் தள வசதிகள் 2017 ஆம் ஆணடில் மேம்படுத்தப்பட்டுள்ளன.

10.7 மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் இணைய தளத்தை மேம்படுத்துதல் மற்றும் பேணுதல்



தேசிய தொழிற் திறன் தகுதி (NVQ) பெறுபேறுகளை அந்தந்த நிறுவகங்களுக்கு கிடைக்கக்கூடியவாறாக வசதிகளை ஏற்படுத்தல் மற்றும் கணிப்பீட்டு முடிவுகள் தொடர்பாக அந்தந்த நிறுவகங்கள் உரிய தகவல்களை பெற்றுக்கொள்வதற்கான வசதிகளை வழங்குதல் தொடர்பான தரவுகளை பதிவேற்றம் செய்வதற்காக 2015 ஆம் ஆண்டில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த வசதிகள் 2017 ஆம் ஆண்டு மேலும் முன்னேற்றம் செய்யப்பட்டுள்ளது.

ஆணைக்குழுவின் பிரதான இணைய தளத்தில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள இணைய பக்கங்களுள் உட்பிரவேசிக்கக்கூடிய சந்தர்ப்பங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன:

- தொழிற் சந்தைத் தகவல் (LMI)
- தேசிய தொழிற் திறன் தகுதிகள் (NVQ)
- பாடநெறி பதிவு, தராதர அங்கீகாரம் (Registration & Accreditation)
- திட்டமிடல் மற்றும் ஆராய்ச்சி (Planning & Research)
- உள்ளிணையம் (Intranet)
- ஆணைக்குழுவின் ஆராய்ச்சி சிற்றறை
- செய்திகளும் சம்பவங்களும்
- தகவல் முறைமைகள்
- தொழில்நுட்ப கல்வி மற்றும் தொழிற் கல்வி மற்றும் பயிற்சி துறை வழிகாட்டி
- தேசிய தொழிற் திறன் தகுதிகள் விருதளிப்பு முறை
- விண்ணப்பங்கள் மற்றும் தகவல்களை தரவிறக்கம் செய்தல்
- உள்ளக இணைய வலையமைப்பு

2017 ஆம் ஆண்டில் கீழ்க் காணப்படும் இணைய பக்கங்கள் மேலும் அபிவிருத்தி செய்யப்பட்டு அவை இணைய தளத்துடன் இணைப்பு செய்யப்பட்டுள்ளன.

10.8 பதிவு மற்றும் தராதர அங்கீகாரம் தொடர்பான இணைய பக்கம்

இவ் இணைய பக்கத்தின் மூலம் நிறுவகங்களை பதிவு செய்தல் மற்றும் பாடநெறி தராதர அங்கீகாரம் பற்றிய சகல தகவல்களையும் பெற்றுக்கொள்ள முடியும். மேலும், இவ் இணையத்தள பக்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள நிறுவகங்கள் மற்றும் ஆணைக்குழு மூலம் தராதர அங்கீகாரம் அளிக்கப்பட்ட பாடநெறிகள் தொடர்பான தகவல்கள், தர முகாமைத்துவ முறைமை பற்றிய தகவல்கள், பதிவு செய்வதற்கான விண்ணப்ப படிவம், பதிவுகளை புதுப்பிப்பதற்கான விண்ணப்ப படிவம், பாடநெறிகளுக்கு தராதர அங்கீகாரம் அளிப்பதற்கான விண்ணப்ப படிவம் என்பன உள்ளடக்கப்பட்டுள்ளன. 2015 ஆம் ஆண்டு தொடக்கம் பாடநெறிகளைப் பதிவு செய்தல் மற்றும் நிறுவகங்களை பதிவு செய்தல் என்பன தொடர்பில் முடெநெ முறையினூடாக விண்ணப்பிப்பதற்கும் மற்றும் கட்டணம் செலுத்துவதற்குமான வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இச் செயன்முறையானது 2017 ஆம் ஆண்டில் மேலும் மேம்படுத்தப்பட்டுள்ளது.

இவ் இணைய பக்கத்தின் வடிவம் கீழே தரப்பட்டுள்ளது.




10.9 பயிற்சி நிறுவகம்

பதிவு மற்றும் தராதர அங்கீகாரம் பற்றிய தகவல்களை இணைய பக்கத்தில் பெறக்கூடிய வசதி

இவ் வசதியினூடாக நாட்டிலுள்ள பதிவு செய்யப்பட்டுள்ள தொழிற் பயிற்சி நிறுவகங்கள் மற்றும் தராதர அங்கீகாரம் மேற்கொள்ளப்பட்ட பாடநெறிகள் பற்றிய விபரங்களை இணையத் தளத்தின் ஊடாக பார்வையிட முடிவதுடன் அதன் மூலம் எவரேனும் ஒருவரிற்கு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள முறைகளுக்கு அமைவாக தகவல்களை தேடிக்கொள்ள முடியும்.

1. மாகாண மற்றும் துறைகளுக்கு அமைவாக நிறுவகங்கள் தொடர்பான விபரங்கள்
2. மாகாண மற்றும் உரித்துடைமைகளுக்கு அமைவாக நிறுவகங்கள் தொடர்பான விபரங்கள்
3. நிறுவகத்தின் பெயரோ அல்லது பெயரின் ஒரு பகுதி மூலம் நிறுவகங்கள் தொடர்பான விபரங்கள்
4. பாடநெறியின் பெயர் மற்றும் மாவட்டதிற்கமைய நிறுவகங்கள் தொடர்பான விபரங்கள்
பயிற்சி நிறுவனங்களின் பதிவு	323,450	521,810	444,240
மதிப்பீட்டுக் கட்டணம்	16,340	463,844	111,001
மென் திறன்கள்	42,450	1,957,951	
08 ஆம் மாடி அபிவிருத்தி	8,454,616	1,315,075	
ஆராய்ச்சி	726,015	968,035	
துறை சபைகள்	11,641,174	14,201,077	
ஆங்கில நிகழ்ச்சித்திட்டம்	1,598,318	232,254	
	37,224,883	**34,255,793**	**27,030,236**
16.1. தொழிற்பாட்டிலுள்ள கடன்பட்டோர்			
ATC கணினி நிறுவகம்			
சகுரா கணினி நிறுவகம்	167,895	167,895	167,895
பலவித கடன்பட்டோர்	136,800	136,800	117,300
	304,695	**304,695**	**285,195**

	2017 (Rs)	2016 (Rs)	2015 (Rs)
16.2. அளிக்கப்பட்ட பதவியணிக் கடன் திருப்பிப்பெறக் கூடிய முற்பணம்			
பதவியணிக்கு அளிக்கப்பட்ட ஆணைக்குழுக் கடன்	1,012,319	1,332,488	1,565,151
இடர்பாட்டுக் கடன்	6,731,598	6,184,465	5,548,283
சுனாமி விசேட கடன்	39,000	39,000	39,000
பண்டிகை முற்பணம்	694,800	11,050	11,550
விசேட முற்பணம்	67,522	10,722	7,522
சுனாமி விசேட கடன் (II)	373,410		
	8,918,649	**7,577,725**	**7,171,506**
17.1. பதவியணி அலுவலர்கள் மற்றும் ஏனையவர்களுக்கு வழங்கப்பட்ட முற்பணம்			
அலுவலர்களுக்கான முற்பணம்	2,340,132	488,527	481,287
செயற்திட்ட முற்பணம் - தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பவியல் துறைச் சபை	1,395,342		
செயற்திட்ட முற்பணம் - உற்பத்தி மற்றும் பொறியியல் துறைச் சபை	4,491,870		
செயற்திட்ட முற்பணம் - நிர்மாண துறைச் சபை	270,980		
செயற்திட்ட முற்பணம் - சுற்றுலா துறைச் சபை	25		
	8,498,349	**488,527**	**481,287**
17.2. வெளி நிறுவகங்களிடமிருந்து பெற வேண்டியவை			
ஏனையவை			
இளைஞர் அலுவல்கள் அமைச்சு		1,147,005	1,156,104
SSDD		1,841,761	1,524,665
		2,988,766	**2,680,769**
17.3. முற்கூட்டிய செலுத்துகை			
பணக் கடப்பு காப்புறுதி	11,556	11,556	11,169
சேவை உடன்படிக்கைகள்		62,536	
	11,556	**74,092**	**11,169**
17.4. திரும்பிப்பெறக் கூடிய ஏஞ சான்றிதழ் அச்சடிப்புச் செலவு			
NAITA	78,931	78,931	210,983
VTA			38,180
NYSC	16,800	16,800	16,800
DTET	254,988	254,988	159,639
CGTTI	74,750	74,750	74,750
NGO, அரச மற்றும் தனியார் நிறுவகங்கள்	291,264	291,264	
	716,733	**716,733**	**500,352**

	2017 (Rs)	2016 (Rs)	2015 (Rs)
22.1. கடன்கொடுத்தோர்			
தொழிற்பாட்டிலுள்ள கடன்கொடுத்தோர்	455,130	7,175,841	1,683,702
கடன்கொடுத்தோர் - பதவியணி			
ஏனைய கடன்கொடுத்தோர்			
	455,130	**7,175,841**	**1,683,702**
23.1. திறைசேரிக்கு செலுத்த வேண்டியவை			
கழிக்கப்பட்ட உரிமத்தொகை	1,587,308	600,087	151,566
சம்பளமற்ற கழிப்பு			-
	1,587,308	**600,087**	**151,566**
23.2. உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு செலுத்த வேண்டியவை			
கழிக்கப்பட்ட பிடிப்பு வரி	43,700	10,700	50,900
கழிக்கப்பட்ட முத்திரைக் கட்டணங்கள்	34,628	36,600	9,000
கழிக்கப்பட்ட PAYE வரி		951	69,351
	78,328	**48,251**	**129,251**
23.3. மீளசெலுத்தத்தக்க செயற்திட்ட மானியங்கள்			
RUEDA திருப்பிச்செலுத்தத்தக்க மானியங்கள்	48,923	48,923	48,923
ILO திருப்பிச்செலுத்தத்தக்க மானியங்கள்	3,103,402	3,103,402	3,103,402
குறுகிய கால திருப்பிச்செலுத்தத்தக்க மானியங்கள் (வெளியூர்)	1,703,950	1,612,631	471,531
TEDP திருப்பிச்செலுத்தத்தக்க மானியங்கள்	3,492	3,492	3,492
இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சு			42,107
	4,859,767	**4,768,448**	**3,669,455**
23.4. செலுத்த வேண்டிய ஆளுக்குரிய ஊதியங்கள்			
மேலதிக மற்றும் விடுமுறைக் கொடுப்பனவு	20,683	13,217	7,229
ஊழியர் நம்பிக்கை நிதியம்		122,258	-
ஊழியர் சேமலாப நிதியம்		815,055	-
	20,683	**950,530**	**-**

மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு
2017 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான நிதி நிலைமைக் கூற்றிற்கான அட்டவணை

அட்டவணை 01 - பணிக்கொடை ஏற்பாடு

NAME	Em-ploy-ee No	Appoint-ment Date	No of Years	Salary (Rs.)	Gratuity Provision (Rs.)
பிரேமசந்திர W.P.M.P.	2	2001.07.15	16	83,970.00	671,760
கீர்த்தி W.G.S.A.	5	2001.02.01	16	33,282.00	266,256
ஜீவன்த N.W.G.N.	6	2001.02.01	16	37,155.00	297,240
சிரிசேன K.	9	2001.02.05	16	30,262.00	242,096
த சில்வா R.N.P.	10	2001.03.01	16	33,282.00	266,256
மஞ்சுளா D.B.R	11	2001.03.01	16	37,155.00	297,240
உதயகாந்தி Y.P.S.	12	2001.02.01	16	37,155.00	297,240
அசங்க ரங்கன M.N	15	2001.09.03	16	27,322.00	218,576
ஹெகொடஆராச்சி G.K..	20	2001.11.01	16	33,696.00	269,568
எதிரிசூரிய M.L.N.S.	22	2001.11.02	16	63,471.00	507,768
இந்திக்க சம்பத் H.B.	24	2001.11.16	16	37,676.00	301,408
அமரசேகர P. S.	25	2001.11.15	16	29,641.00	237,128
தினேஷ B.K.S.	26	2001.11.16	16	29,641.00	237,128
அஜித் குசும் P.P.	28	2001.12.03	16	60,833.00	486,664
அநுர வீரக்கேன் W.M.T.	31	2002.07.01	15	60,833.00	456,248
விஜேசேகர S.	40	2005.04.20	12	29,020.00	174,120
குமார W.V.P.C.J.	41	2005.05.16	12	27,220.00	163,320
பெரேரா V.	43	2005.06.15	12	78,716.00	472,296
திருநாவுக்கரR S.	46	2005.01.04	12	55,557.00	333,342
குணதிலக்க P.M.C.P.	47	2005.01.18	12	48,292.00	289,752
விதான கங்கானம்கே D.H.	48	2005.01.03	12	53,247.00	319,482
கனேபொல G.A.M.U.	49	2005.01.02	12	51,265.00	307,590
தர்மசேன U.A.P.	51	2005.01.03	12	46,352.00	278,112
த சில்வா M.D.C.	56	2005.10.06	12	31,212.00	187,272
சமரவீர R.J.	57	2005.11.21	12	56,876.00	341,256
பந்துல P.	58	2006.02.20	11	29,020.00	159,610
அமரசிங்க A.S.	60	2006.05.16	11	66,109.00	363,600
குமார G.G.S.	62	2006.07.14	11	26,922.00	148,071
S.U.K.ரூபசிங்க	65	2007.02.02	10	67,740.00	338,700
M.விதாணபத்திரன	66	2007.02.02	10	55,557.00	277,785
J.A.D.J.ஜயலத்	68	2007.08.01	10	77,148.00	385,740
P.P.P. நாணயக்கார	70	2007.10.15	10	55,557.00	277,785
W.A.W.C.பிரேமரத்ன	71	2007.11.01	10	66,172.00	330,860
W.J.L.A.தமயந்தி	72	2007.12.12	10	53,247.00	266,235
G.D.K.V.S. மங்கள	73	2008.02.01	9	27,406.00	123,327
R.G.A.T. குமார	74	2008.11.03	9	28,690.00	129,105

NAME	Em-ploy-ee No	Appoint-ment Date	No of Years	Salary (Rs.)	Gratuity Provision (Rs.)
கொண்டு செல்லப்பட்ட C/F					**10,719,935.00**
கொண்டு வரப்பட்ட B/F					**10,719,935**
N.D.விஜேசேகர	75	2008.11.03	9	30,072.00	135,324
S.S.கல்பகே	76	2008.11.03	9	27,241.00	122,585
G.C.J. த சில்வா	78	2009.09.01	8	28,483.00	113,932
K.T. அமரசிங்க	80	2009.11.30	8	29,104.00	116,416
D.M.S.J. சிறிபால	81	2009.11.30	8	28,897.00	115,588
விந்தியா ஹண்சனி	83	2011.04.05	6	28,069.00	84,207
K.S. சமீர	84	2011.08.01	6	27,034.00	81,102
G.C.S.M. நாணயக்கார	85	2011.08.01	6	27,034.00	81,102
B.S.J.விபுல்ஸி	86	2012.01.02	5	38,947.00	97,368
H.M.A.D.K.Nஹரத்	87	2012.01.02	6	47,301.00	141,903
D.N.I.D. த சில்வா	90	2012.01.02	5	44,454.00	111,135
சன்தி மேனகா	91	2012.03.01	5	27,862.00	69,655
A.P.இந்திராணி	92	2012.03.01	5	24,858.00	62,145
I.G. கல்ப உதார	93	2012.07.10	4	38,947.00	77,894
P. K த்துகுமாரன	94	2012.11.03	5	37,155.00	92,888
H.G.K.N.பண்டார	97	2013.02.01	4	48,292.00	96,584
C.H.W.தர்'னிக்கா	98	2013.03.01	4	27,862.00	55,724
P.G.S.சத்துரங்கனி	99	2013.06.06	4	27,862.00	55,724
K.D.L.P.கருணாதாச	101	2013.07.15	4	44,454.00	88,908
T.A.W.மது'ானி	103	2013.07.15	4	30,654.00	61,308
K.W.A.அநுருத்திகா	104	2013.07.15	4	29,518.00	59,036
N.L.S. தயாரத்ன	105	2013.09.02	4	25,546.00	51,092
B.G.N. கமல்பிரிய	106	2013.09.10	4	26,476.00	52,952
G.J. உடவத்த	107	2014.01.16	3	37,155.00	55,733
E.W.S.M. தயாரத்ன	108	2014.01.20	3	30,961.00	46,442
H.R.M.U. விஜேபண்டார	109	2014.01.27	3	44,454.00	66,681
R. மாதன்	110	2014.01.27	3	47,301.00	70,952
N.T.K. தெல்பசித்ர	111	2017.01.30	3	29,104.00	43,656
E.A.K த சில்வா	112	2014.02.10	3	42,474.00	63,711
C.C.K. சமரவிக்ரம	116	2014.08.01	3	30,347.00	45,521
B.C. ஹன்தபஹன்கொட	117	2014.09.15	3	45,403.00	68,105
H.L.K.S. குமார	118	2014.09.22	3	26,290.00	39,435
P.D.S. காரியவசம்	119	2014.10.01	3	53,247.00	79,871
A.H.N. சந்தமாலி	122	2015.06.03	2	30,040.00	30,040
H.A.D. தர்சிகா	123	2015.06.04	2	30,347.00	30,347
கொண்டு செல்லப்பட்ட C/F					**13,384,997**
கொண்டு வரப்பட்ட B/F					**13,384,997**

NAME	Em-ploy-ee No	Appoint-ment Date	No of Years	Salary (Rs.)	Gratuity Provision (Rs.)
L.K. கொஹொம்பன்	125	2015.06.06	2	30,040.00	30,040
N.H.S.தர்ஷன	126	2015.06.07	2	30,040.00	30,040
S.B.கருணாநாயக்க	128	2015.06.08	2	28,897.00	28,897
B.L.K.P.சன்தீபனி	129	2015.06.09	2	27,034.00	27,034
I.M.G.H.லக்மால்	131	2015.07.08	2	24,858.00	24,858
H.M.V.N.Nஹரத்	132	2015.07.22	2	28,897.00	28,897
P.W.S.பரிஷினி	136	2016.09.01	1	44,454.00	22,227
N.ராஜபக்ஷ	137	2016.09.01	1	44,454.00	22,227
W.G.S.குமார	138	2016.09.01	1	44,454.00	22,227
E.C.U.Fனதுங்க	139	2016.09.01	1	44,454.00	22,227
W.M.W.B.விஜெசிங்க	140	2016.09.01	1	44,454.00	22,227
K.A.D.H.லக்மினி	141	2016.09.01	1	44,454.00	22,227
S.N.B.W.M.W.மன்திரிபால	142	2016.09.01	1	44,454.00	22,227
					13,710,352

*** சம்பளம் = திசெம்பர் மாத அடிப்படைச் சம்பளஞ்வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு**

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

මගේ අංකය / எனது இல. / My No. } විවිවයි/ඊ/විවිඊසි/1/17/19 මඔබේ අංකය / உமது இல. / Your No. } දිනය / திகதி / Date } 2019 මැයි 23 දින

අධ්‍යක්ෂ ජනරාල්,
තෘතීයික හා වෘත්තීය අධ්‍යාපන කොමිෂන් සභාව

තෘතීයික හා වෘත්තීය අධ්‍යාපන කොමිෂන් සභාවේ 2017 දෙසැම්බර් 31 දිනෙන් අවසන් වර්ෂය සඳහා වූ මූල්‍ය ප්‍රකාශන පිළිබඳව 1971 අංක 38 දරන මුදල් පනතේ 14(2)(සී) වගන්තිය ප්‍රකාර විගණකාධිපති වාර්තාව

මාගේ සමාංක හා 2019 පෙබරවාරි 08 දිනැති ලිපියට යොමුවේ.

02. ඉහත සඳහන් ලිපිය සමඟ එවන ලද මාගේ වාර්තාවේ දෙමළ අනුවාදය මේ සමඟ එවා ඇත.

Chairman, Director General, Deputy Director General
13 JUN 2019
TVEC

ආර්.එම්.ජේ.රත්නායක
නියෝජ්‍ය විගණකාධිපති
විගණකාධිපති වෙනුවට.

පිටපත් 1. ලේකම්, ජාතික ප්‍රතිපත්ති, ආර්ථික කටයුතු, නැවත පදිංචි කිරීම් හා පුනරුත්ථාපන, උතුරු පළාත් සංවර්ධන, වෘත්තීය පුහුණු හා නිපුණතා සංවර්ධන හා යෞවන කටයුතු අමාත්‍යාංශය.

2. ලේකම්, මුදල් අමාත්‍යාංශය

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34 +94 11 2 88 72 23 ag@auditorgeneral.gov.lk www.auditorgeneral.gov.lk

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

මගේ අංකය / எனது இல. / My No. } වீரீவை/ஈ/ரீவீஈசீ/1/17/19

ඔබේ අංකය / உமது இல. / Your No. }

දිනය / திகதி / Date } 2019 பெப்ரவரி 08

பணிப்பாளர் நாயகம்,
மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழு

மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழுவின் 2017 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழுவின் 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான விரிவான வருமானக்கூற்று, உரிமை மூலதன மாற்றக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களினதும் பொழிப்புகளை உள்ளடக்கிய 2017 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1999 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி (திருத்த) அதிகாரச்சட்டத்தின் 10(ஈ)(2) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka

+94 11 2 88 70 28 - 34 +94 11 2 88 72 23 ag@auditorgeneral.gov.lk www.naosl.gov.lk

1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க மேற்கொள்ளப்படும் கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்கள் மீதான அபிப்பிராயத்தை வழங்குவது எனது பொறுப்பாகும்.

1.4 அபிப்பிராய மறுப்பிற்கான அடிப்படை

இவ்றிக்கையின் 2.2 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களின் பெறுபேறாக நிதி நிலமைக்கூற்றிலும் விரிவான வருமானக் கூற்றிலும் உரிமை மூலதன மாற்றக் கூற்றிலும் காசுப் பாய்ச்சல் கூற்றிலும் அறிக்கையிடப்பட்ட அல்லது அறிக்கையிடப்படாத விடயங்களும் மூலாதாரங்களுக்குரிய எந்தவொரு சீராக்கல்களுக்குமான அவசியம் இருந்ததா என்பதை என்னால் தீர்மானிக்க முடியாது போனது.

2. நிதிக்கூற்றுக்கள்

2.1 அபிப்பிராய மறுப்பு

இவ்வறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களின் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையை வழங்குவதற்கு போதுமான மற்றும் உசிதமான கணக்காய்வுச் சான்றை என்னால் பெற முடியாதுள்ளது. அதன் காரணமாக, இந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக நான் அபிப்பிராயத்தைத் தெரிவிக்கவில்லை.

2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 02

(i) செயற்பாட்டு நடவடிக்கைகளால் உருவாகிய காசுப்பாய்ச்சலைக் கணிப்பிடும்போது ஆண்டிற்கான செயற்பாட்டு இலாபத்தில் உள்ளடங்கியிராததும் உரிமை மூலதன மாற்றக் கூற்றில் சீராக்கல்

செய்யப்பட்டிருந்ததுமான முன்னைய ஆண்டிற்கான சீராக்கல்கள் மற்றும் ஆரம்ப மீதி வேறுபாடாகிய ரூபா 1,352,722 செயற்பாட்டு இலாபத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டுக் காட்டப்பட்டிருந்ததுடன், ரூபா 3,764,893 அதிக / குறைவான நிதியேற்பாடு சீராக்கல் ஆகக் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ii) மீளாய்வாண்டின் பிற்போட்ட வருமானமாக ரூபா 10,287,724 விரிவான வருமானக் கூற்றில் காட்டப்பட்டிருந்தபோதும், செயற்பாட்டு நடவடிக்கைகளின் மூலம் உருவாகிய காசுப் பாய்ச்சலைக் கணிப்பிடும்போது ரூபா 312,225 மாத்திரமே இலாபத்தில் சீராக்கல் செய்யப்பட்டிருந்தது.

(iii) நிலையான சொத்துக் கொள்வனவிற்குத் திறைசேரி வழங்கிய மூலதன மானியம் ரூபா 9,627,424 ஆகும். இது நிதிசார் நடவடிக்கைகளின் கீழ் காசுப் பிரவாக வருகையாகக் காட்டப்படவில்லை.

(ஆ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07

(i) நியமத்தின் 14 ஆம் பந்தியின் பிரகாரம் சொத்து ஒன்றினது மற்றும் இணைந்த எதிர்கால நலன் அல்லது சேவைகளின் சாத்தியக்கூறு நிறுவனத்தை வந்தடையும் நிலை உள்ளவிடத்து அதனைச் சொத்தாக கணக்கிடலாமெனினும், அதற்கு மாறாக எட்டாவது மாடி அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக 2016, 2017 ஆம் ஆண்டுகளில் செலவிடப்பட்ட முறையே ரூபா 1,315,075 மற்றும் ரூபா 8,454,616 என்பன மீண்டுவரும் செலவினமாக விரிவான வருமானக் கூற்றில் காட்டப்பட்டிருந்தன. அதற்கமைய, 2016 ஆம் ஆண்டினது பற்றாக்குறை ரூபா 1,315,075 அதிகரித்துக் கணிப்பிடப்பட்டிருந்ததுடன், 2017 ஆம் ஆண்டின்து மிகை ரூபா 8,454,616 குறைவாகக் கணிப்பிடப்பட்டுமிருந்தது.

(ii) நிதிப் பிரிவின் அலுவலகத்தை இரு கூறுகளாகப் பிரிக்கும் (Partition) செலவினமாகிய ரூபா 194,500 மூலதனமாக்கப்படாது கட்டிடப் புனரமைப்புச் செலவாக விரிவான வருமானக் கூற்றில் காட்டப்பட்டிருந்தது.

2.2.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

நிதிக் கூற்றுக்களுக்கான 5.2 ஆம் இலக்கக் குறிப்பின் பிரகாரம் சொத்துக்களுக்குரிய மூலதன மானியப் பெறுவனவுகள் பிற்போட்ட வருமானமாக இனங்காணப்படுவதாக குறிப்பிடப்பட்டபோதும், ஆண்டின்போது நிலையான சொத்துக் கொள்வனவிற்குப் பெறப்பட்ட மூலதன மானியமாகிய ரூபா 9,627,424 ஆகியபோதும், அது ரூபா 9,975,499 ஆகக் கணக்கிலிடப்பட்டிருந்தது.

2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆணைக்குழு பயன்படுத்திய "திபஸ்" கணக்கீட்டு பெக்கேஜ் 2017 மே 09 தொடக்கம் செயலற்றுப் போனமையால் புதிய கணக்கீட்டு பெக்கேஜ் பயன்படுத்தப்பட்டு மீளாய்வாண்டினது நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தன. அதன்போது பழைய பெக்கேஜின் மூலம் 2017 மார்ச் 31 இல் முடிவுற்ற 03 மாதங்களுக்குப் பெறப்பட்ட பரீட்சை மீதியினது மீதியானது 2017 ஏப்ரல் 01 இல் உள்ளவாறு ஆரம்ப மீதியாக புதிய பெக்கேஜில் உள்ளடக்கப்பட்டுப் பெறப்பட்ட 2017 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான பரீட்சை மீதியுடன் 2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தன. எனினும், 2017 ஆம் ஆண்டின் முதல் 03 மாதங்களது மீதி, 2017 ஏப்ரல் 01 இல் உள்ளவாறு முன்கொண்டுவரப்படும்போது பின்வரும் வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன. இத் தவறான கணக்கீடு 2017 ஏப்ரல் 01 ஆந் திகதியின் பின்னர் நாட்குறிப்பின் மூலம் திருத்தஞ் செய்யப்பட்டிராமையால் அதன் மூலம் நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடத்தக்க தாக்கம் ஏற்பட்டிராது எனக் கணக்காய்வில் புறக்கணிக்க முடியாதிருந்தது.

(i) முதல் 03 மாதங்களது 52 பேரேட்டுக் கணக்குகளது இறுதி வரவு மீதிகள் மற்றும் 31 பேரேட்டுக் கணக்குகளது இறுதி செலவு மீதிகள் 2017 ஏப்ரல் 01 இல் உள்ளவாறான அப்பேரேட்டுக் கணக்குகளின் ஆரம்ப வரவு மற்றும் செலவு மீதிகள் என்பவற்றுக்கிடையே முறையே ரூபா 5,443,442 மற்றும் ரூபா 1,893,230 வேறுபாடுகள் நிலவியமை.

(ii) முதல் 03 மாத கால பரீட்சை மீதியில் உள்ளடங்கிய 67 வரவு மீதிக்கான ரூபா 11,960,433 மற்றும் ரூபா 7,920,373 கூட்டுத் தொகையுடைய 25 செலவு மீதிகள் என்பன 2017 ஏப்ரல் 01 இல் உள்ளவாறான பரீட்சை மீதியில் உள்ளடக்கப்படவில்லை.

(iii) முதல் 03 மாத கால பரீட்சை மீதியில் உள்ளடங்காத ரூபா 14,718,451 கூட்டுத் தொகையுடைய 15 வரவு மீதிகள் மற்றும் ரூபா 3,434,717 கூட்டுத் தொகையுடைய 10 செலவு மீதிகள் என்பன 2017 ஏப்ரல் 01 இல் உள்ளவாறு பரீட்சை மீதியில் உள்ளடக்கப்பட்டமை.

(ஆ) சீராக்கல் கணக்கிற்கான மாற்றம் (Transfer for Adjustment Account) எனும் பெயரிலான தொங்கல் கணக்கு ஒன்றில் 17 சந்தர்ப்பங்களில் இனங்காணப்படாத ரூபா 1,086,305 பெறுவனவுகளும் 71 சந்தர்ப்பங்களில் இனங்காணப்படாத ரூபா 4,279,131 கொடுப்பனவுகளும் பதிவு செய்யப்பட்டு அக்கணக்கு மீதியாகிய ரூபா 3,192,826 வரவு மீதி வருமானக் கூற்றில் ஒப்பந்தச் சேவைகளின் கீழ் செலவினமாகக் காட்டப்பட்டிருந்தது. இப் பெறுவனவுகளுக்கும் கொடுப்பனவுகளுக்குமுரிய பெறுவனவும் பற்றுச்சீட்டு, விலைப்பட்டியல், உறுதிச் சான்றுகள் போன்ற சான்றுகளும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாததால் கொடுக்கல் வாங்கல்களைத் தெரிவுச் செவ்வைக்குள்ளாக்கியபோது புலனாகிய பின்வரும் விடயங்களின் காரணமாக கொடுக்கல் வாங்கல்கள் தவறின்றி கணக்கிலிடப்பட்டுள்ளதைக் கணக்காய்வில் உறுதி செய்ய முடியவில்லை.

(i) கொடுப்பனவு உறுதிச் சான்றுகள் 240113 தொடக்கம் 240119 வரையிலானவற்றினது செலவினங்களின் கூட்டுத் தொகை ரூபா 78,990 ஆகியபோதும், அவற்றிற்குரிய காசோலைகள் வங்கிக் கூற்றிலும் காசேட்டிலும் ரூபா 92,500 ஆகக் கொடுப்பனவைக் காட்டியமையால் ஏற்பட்ட ரூபா 13,510 செலவின வித்தியாசத்தை இனங்காணாது மேற்படி தொங்கல் கணக்கில் வரவு வைத்தமை.

(ii) பற்றுச்சீட்டு இலக்கம் 259919 என்பதன் மூலம் பெறப்பட்ட ரூபா 159,950 திறைசேரி மானியக் காசேட்டில் இருமுறை குறித்துக் கொள்ளப்பட்டிருந்ததுடன் தவறுதலாக மேற்படி மாற்றக் கணக்கில் செலவு வைக்கப்பட்டமை.

(iii) நானாவித கடன் கொடுத்தோர் மற்றும் செலவினங்களுக்கு 05 காசோலைகள் மூலம் ரூபா 273,854 கொடுப்பனவு செய்யப்பட்டு காசேட்டிலும் திறைசேரி மானியத்திற்கான செயற்திட்டக் காசேட்டிலும் கொடுப்பனவாகக் குறிப்பிடப்பட்டு மாற்றக் கணக்கில் வரவு வைக்கப்பட்டமை.

இ) 2016 ஆம் ஆண்டின் கடன் கொடுத்தோர் மற்றும் நிலையான சொத்துக்களாக கணக்குகளில் உள்ளடக்கப்பட்ட ரூபா 312,500 பெறுமதியுடைய கணனிகளும் துணைப்பாகங்களும் கணக்காய்வுச் சந்தர்ப்பமான 2018 ஒக்டோபரிலும் ஆணைக்குழுவை வந்தடையவில்லை. அதன் காரணமாக, நிலையான சொத்துக்களும் கடன் கொடுத்தோரும் அதேயளவு அதிகரித்திருந்ததுடன், நிறுவனத்தில் இல்லாத சொத்தொன்றிற்கு ரூபா 103,125 ஆண்டிற்கான தேய்மானமாக நிதியேற்பாடு செய்யப்பட்டதன் மூலம் ஆண்டிற்கான மிகை பற்றாக்குறையானதுடன் தேய்மான நிதியேற்பாடு அதிகரித்துமிருந்தது.

ஈ) கணக்காய்வின் போதிலான கணிப்பீட்டின்படி, மீளாய்வாண்டிற்கான பணிக்கொடைச் செலவினம் ரூபா 3,122,471 ஆகியபோதும், நிதிக் கூற்றுக்களில் அதனை ரூபா 1,752,096 ஆகக் காட்டியமையால் மீளாய்வாண்டினது மிகை மற்றும் பணிக் கொடைக்கான நிதியேற்பாடுக் கணக்கு மீதி என்பன முறையே ரூபா 1,370,375 கூடுதலாகவும் குறைவாகவும் கணிப்பிடப்பட்டிருந்தன.

உ) மீளாய்வாண்டிற்குரிய ஆராய்ச்சி புத்தகங்களது (Research Books) அச்சிடற் செலவினமாகிய ரூபா 114,000 முன்னைய ஆண்டிற்கான சீராக்கல் கணக்கில் கணக்கிலிடப்பட்டமையால் ஆண்டிற்கான மிகை அதேயளவு அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

ஊ) ஆண்டின்போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 3,705,040 பெறுமதியான 5 வகைச் சொதத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்ட திகதியின் அடிப்படையில் தேய்மானம் செய்யப்படாமையால் ஆண்டிற்கான தேய்மானம் ரூபா 373,411 அதிகரித்துக் காட்டப்பட்டிருந்ததுடன், ஆண்டிற்கான மிகை மற்றும் சொத்துக்கள், பொறித் தொகுதி, உபகரணங்களது நிகர பெறுமதி என்பன அதேயளவு குறைத்துக் காட்டப்பட்டிருந்தன.

(எ) 2016 ஆம் ஆண்டின் பொருட்டு மீளாய்வாண்டில் கொடுப்பனவு செய்யப்பட்ட ரூபா 1,044,593 செலவினமானது முன்னைய ஆண்டிற்கான சீராக்கல் கணக்கில் சீராக்கல் செய்யப்படுவதற்குப் பதிலாக மீளாய்வாண்டினது மிகையில் சீராக்கல் செய்யப்பட்டதால் மீளாய்வாண்டினது மிகை அதேயளவு குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஏ) மீளாய்வாண்டினது கொடுப்பனவு அனுப்பல் பத்திரத்தின் பிரகாரம் ஊழியர் சேமலாப நிதியத்தின் 12 சதவீத பங்களிப்பு ரூபா 5,907,230 ஆகும். எவ்வாறாயினும், ஊழியர் சேமலாப நிதியக் கணக்கின் பிரகாரம் அது ரூபா 7,501,011 ஆகக் கணக்கிலிடப்பட்டமையால் ஆண்டிற்கான செலவினம் ரூபா 1,593,781 கூடுதலாகக் கணிப்பிடப்பட்டிருந்தது.

(ஐ) மீளாய்வாண்டிற்கான ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியப் பங்களிப்பின் கொடுப்பனவு ரூபா 1,475,814 ஆகியபோதும், நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் அது ரூபா 1.356,698 ஆகக் கணக்கிலிடப்பட்டமையால் ஆண்டிற்கான செலவினம் ரூபா 119,116 குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. மேலும், கொடுப்பனவு செய்ய வேண்ய ஊழியர் நம்பிக்கைப் பொறுப்புத் தொகையான ரூபா 122,086 கணக்கில் சேர்த்துக் கொள்ளப்படாதிருந்தது.

(ஒ) 2017 டிசெம்பர் மாத சம்பளத்தில் அறவிடப்பட்ட இடர் கடன் தவணைப் பணமாகிய ரூபா 162,612 இடர் கடன் முற்பணக் கணக்கிலிடப்படாததால், 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான இடர் கடன் முற்பணக் கணக்கு மீதி அதேயளவு அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஓ) மீளாய்வாண்டின்போது முற்பணத்தைத் தீர்வு செய்வதற்குப் பயன்படுத்திய 22 ஆம் இலக்க நாட்குறிப்புக்குரிய ரூபா 395,205 இரு முறை கணக்கிலிடப்பட்டமை காரணமாக ஆண்டிற்கான செலவினம் அதேயளவு அதிகரித்தும் பெற வேண்டிய ஊழியர் முற்பணக் கணக்கு மீதி அதேயளவு குறைத்தும் காட்டப்பட்டிருந்தது.

(ஔ) மீளாய்வாண்டின்போது ஆணைக்குழு பெற்றிருந்த ரூபா 540,800 பெறுமதியான தளபாடங்களும் பொருத்திகளும் கணக்கிலிடப்படவில்லை.

(க) 2017 ஏப்ரல் மாத கால சம்பளக் கொடுப்பனவைக் கணக்கிலிடுவதற்கான 143 ஆம் இலக்க நாட்குறிப்பு பேரேட்டில் இரு முறை குறித்துக் கொள்ளப்பட்டதன் காரணமாக சம்பளமும் வேதனமும் ரூபா 4,707,763 மற்றும் குறித்த பொறுப்பும் வருமானக் கணக்கும் அதேயளவு கூடுதலாகக் கணிப்பிடப்பட்டிருந்தன.

மேலும், 2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் சம்பள மற்றும் வேதனச் செலவினம் ரூபா 47,807,117 ஆகுமாயினும், கணக்காய்வுக் கணிப்பின் பிரகாரம் அச் செலவினம் ரூபா 51,001,833 ஆகியமையால் மீளாய்வாண்டிற்கான சம்பள மற்றும் வேதனச் செலவினம் ரூபா 3,194,716 குறைத்துக் கணிப்பிடப்பட்டிருந்தது.

(ங) 2017 மே முதல் டிசெம்பர் வரை நிரந்தர பதவியணியினருக்குக் கொடுப்பனவு செய்யப்பட்ட சம்பளத்தில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 1,374,087 சம்பள கழிவானது நாட்குறிப்பின் மூலம் குறித்த கணக்குகளில் சீராக்கல் செய்யப்படாததால், குறித்த கழிவுக் கணக்கு அதேயளவு குறைவாகக் கணிப்பிடப்பட்டிருந்தது.

(ச) 2017 சனவரி 01 தொடக்கம் நிலையான சொத்துத் தேய்மான நிதியேற்பாட்டுக் கணக்கின் ஆரம்ப மீதியைச் சீராக்குவதற்கு 385 ஆம் இலக்க நாட்குறிப்பின் மூலம் பேரேட்டில் கணக்கிலிடப்பட்ட ரூபா 775,620 நிதிக் கூற்றுக்களில் காட்டப்படாமையால் 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட தேய்மானக் கணக்கு மீதி அதேயளவு அதிகரித்துக் கணிப்பிடப்பட்டிருந்தது.

(ஞ) மீளாய்வாண்டின்போது கொடுப்பனவு செய்யப்பட்ட ரூபா 23,627,595 பகுப்பாய்வுக் கட்டணத்தில் 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளுக்குரிய கட்டணங்களும் உள்ளடங்கியிருந்ததுடன், அது தொடர்பான குறித்த தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. எவ்வாறாயினும், தெரிவுச் செவ்வையின்போது 2017 ஒக்டோபரில் கொடுப்பனவு செய்யப்பட்ட ரூபா 3,906,715 பகுப்பாய்வுக் கட்டணத்தில் 2016 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 932,965 உள்ளடங்கியமையால் முன்னைய ஆண்டிற்கான செலவினம் மீளாய்வாண்டிற்குரியதாகக் கணக்கிலிடப்பட்டிருந்தமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

(ட) 2017 மே மாதத்திற்கான தலைவரின் மாதாந்தப் படியாகிய ரூபா 75,000 மற்றும் பகுப்பாய்வுக் கட்டணமாகிய ரூபா 12,300 என்பன காசேட்டிலும் குறித்த செலவினக் கணக்குகளிலும் மூன்று தடவைகள் குறித்துக் கொள்ளப்பட்டமை மற்றும் 12 காசோலைகளின் மூலம் கொடுப்பனவு செய்யப்பட்ட ரூபா 196,300 செலவினம் காசேட்டிலும் குறித்த செலவினக் கணக்குகளிலும் இரு தடவைகள் வீதம் குறித்துக் கொள்ளப்பட்டதன் காரணமாக காசேட்டு மீதி ரூபா 370,900 குறைத்துக் கணிப்பிடப்பிடப்பட்டிருந்ததுடன் குறித்த செலவினம் அதேயளவு அதிகரித்துக் கணிப்பிடப்பட்டுமிருந்தது.

(ண) மீளாய்வாண்டின் பொருட்டு 2018 ஆம் ஆண்டில் கொடுப்பனவு செய்யப்பட்ட ரூபா 1,149,142 நானாவித செலவினம் மீளாய்வாண்டின் சேர்ந்து நின்ற செலவினமாகக் கணக்கிலிடப்படாமையால், ஆண்டிற்கான மிகை மற்றும் 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான சேர்ந்து நின்ற செலவினம் என்பன முறையே அதேயளவு அதிகரித்தும் குறைத்தும் கணிப்பிடப்பட்டிருந்தன.

(த) 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு தயாரிக்கப்பட்ட நிதி நிலைமைக் கூற்றில் உரித்துத் தலைப்பின் கீழ் குறிப்பிடப்பட வேண்டிய பிற்போட்ட வருமான மானியக் கணக்கு நடைமுறை அல்லாத பொறுப்புகளின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

2.2.4 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 03 ஊழியர் கடன் கணக்கு மீதிகள் ரூபா 8,438,717 ஆகியபோதும், கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட விரிவான பட்டோலையின் பிரகாரம் அக்கடன் மீதிகளது கூட்டுத் தொகை ரூபா 6,431,601 ஆகியமையால் ரூபா 2,007,116 வேறுபாடு நிலவியது.

(ஆ) 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான பரீட்சை மீதியின் பிரகாரம் 10 கணக்கீட்டு விடயங்களது மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 74,172,354 ஆகுமாயினும் பேரேட்டின் பிரகாரம் அம்மீதிகளது கூட்டுத் தொகை ரூபா 68,234,831 ஆகியமையால் பரீட்சை மீதிக்கும் பேரேட்டுக் கணக்கிற்குமிடையே ரூபா 5,937,523 வேறுபாடு நிலவியது.

	கணக்கீட்டு விடயம்	பரீட்சை மீதியின் படியான பெறுமதி	பேரேட்டின் படியான பெறுமதி
		ரூபா	ரூபா
1.	ஆணைக்குழுக் கடன்	1,012,319	950,875
2.	ஆணைக்குழுக் கடன் வட்டி	39,722	43,491
3.	முற்பணம்	259,000	9,000
4.	இடர்க்கடன்	6,731,598	7,069,548
5.	இடர்க்கடன் வட்டி	379,658	402,445
6.	விழா முற்பணம்	694,800	679,800
7.	தேசிய தொழில்சார் தகைமைப் பரிசோதனைக் கட்டணம்	10,623,090	10,625,089
8.	வங்கிக் கணக்கு (PB-12268324)	4,208,448	1,219,682
9.	திருப்பிச் செலுத்த வேண்டிய மானியம் (டச் யுவர் பியுச்சர்)	11,028,098	9,881,092
10.	திருப்பிச் செலுத்த வேண்டிய மானியம் (உலக வங்கி)	39,195,571	37,353,809
	மொத்தம்	74,172,354	68,234,831

(இ) 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான பரீட்சை மீதியின் பிரகாரம் 09 கணக்கீட்டு விடயங்களது கூட்டுத் தொகை ரூபா 30,852,444 ஆகுமாயினும், நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் அது ரூபா 32,830,312 ஆகியமையால் பரீட்சை மீதிகளுக்கும் நிதிக்கூற்றுக்களுக்குமிடையே ரூபா 1,977,868 வேறுபாடு நிலவியது.

	கணக்கீட்டு விடயம்	நிதிக் கூற்றுக்களின் பிரகாரமான பெறுமதி	பரீட்சை மீதியின் பிரகாரமான பெறுமதி
		ரூபா	ரூபா
1.	திரண்ட தேய்மானம் - கணனி	21,484,361	20,924,366
2.	திரண்ட தேய்மானம் - அலுவலக உபகரணம்	5,694,175	5,478,548

3.	ஆண்டிற்கான தேய்மானம் - கணனி	3,044,802	2,484,807
4.	ஆண்டிற்கான தேய்மானம் - அலுவலக உபகரணம்	977,267	761,642
5.	பகுப்பாய்வுக் கட்டணம்	-	11,500
6.	நிதிசார் மானிய மாற்றக் கணக்கு	-	6,000
7.	கொடுப்பனவு செய்ய வேண்டிய உழைக்கும்போதே செலுத்தும் வரி அறவீடு	-	8,449
8.	முன்னைய ஆண்டிற்கான சீராக்கல்	1,157,183	1,177,132
9.	டச் யுவர் பியூச்சர் நிகழ்ச்சித் திட்டம் (ஏனையவை)	472,524	-
		32,830,312	30,852,444

2.2.5 கணக்காய்விற்கான சான்றின்மை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆணைக்குழு முறையான இலக்கமிடப்பட்ட சகல கொடுப்பனவு உறுதிச் சான்றுகள் மற்றும் உறுதிச் சான்று இலக்கம் என்பவற்றுடனான காசோலைகளின் அடியிதழைக் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்காமையால், நியாயபூர்வமானதும் போதுமானதுமான கணக்காய்வை மேற்கொள்ள முடியவில்லை. மேலும், காசேடு உள்ளடங்கலான பேரேட்டுக் கணக்குகள் முறையாகப் பேணப்படாமையால் நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கிய கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் மீதிகளது பிழையற்ற தன்மையையும் பூரணத்துவத்தையும் கணக்காய்வில் உறுதி செய்ய முடியவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்கான வங்கி கணக்கிணக்கம் முறையாகத் தயாரிக்கப்படாமையால் வங்கி கணக்கிணக்கங்களது பிழையற்ற தன்மையைக் கணக்காய்வில் உறுதி செய்ய முடியவில்லை.

2.3 பெற வேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பெற வேண்டிய மீதியுள் உள்ளடங்கிய 2007 ஆம் ஆண்டு தொடக்கம் தனியார் நிறுவனம் ஒன்றிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 167,895 அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் காணப்படும் 05 ஆண்டுகளைக் கடந்த ஏழு ஊழியர் கடன் மீதியாகிய ரூபா 117,140 தீர்த்து வைக்கப்படுவதற்கான நடவடிக்கை 2017 டிசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் மேற்கொள்ளப்படவில்லை.

2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமை அவதானிக்கப்பட்டன.

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு	இணங்காமை
(அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் நிதிப்பிரமாணங்கள்	
(i) நிதிப்பிரமாணம் 272(1), (3)	நிதிப் பிரமாணத்தின்படி, குறித்த மாதம் முடிவடைந்து 6 வாரங்களுக்குள் அம்மாதத்திற்குரிய கொடுப்பனவு உறுதிச் சான்றுகளைக் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்க வேண்டுமாயினும், மீளாய்வாண்டினது 155 கொடுப்பனவு உறுதிச் சான்றுகள் கணக்காய்வுச் சந்தர்ப்பமான 2018 ஒக்டோபர் 15 ஆந் திகதியளவிலும் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(ii)	நிதிப்பிரமாணம் 341	நிதிப்பிரமாணத்தின்படி அடியிதழ் சேர் புத்தகங்கள் பதிவேடு பேணப்படவில்லை.
(iii)	நிதிப்பிரமாணம் 372	ஆணைக்குழு உத்தியோகத்தர்களுக்கு பல்வேறு நடவடிக்கைகளுக்குமென வழங்கப்பட்ட முற்பணம் தொடர்பாக பதிவேடொன்று பேணப்படவில்லை.
(iv)	நிதிப்பிரமாணம் 396	2011 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு வழங்கப்பட்டு, கொடுப்பனவுக்காக வங்கிக்குச் சமர்ப்பிக்கப்படாதுள்ள 07 மாதங்கள் தொடக்கம் 2 ஆண்டுகள் வரையிலான காலங் கடந்த ரூபா 1,321,122 பெறுமதியான 147 காசோலைகள் சம்பந்தமாக நிதிப்பிரமாணத்திற்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படவில்லை.
(v)	நிதிப்பிரமாணம் 454(1)	நிறுவனம் பயன்படுத்தும் பட்டோலையிடப்பட்ட பொருட்கள் தொடர்பான அறிக்கைகளை உள்ளடக்கிய பொருட் பதிவேடொன்று பேணப்படவில்லை.
(ஆ)	2016 மார்ச் 31 ஆந் திகதிய 05/2016 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை	2017 ஆம் ஆண்டிற்கான வருடாந்த பொருட் கணிப்பின் பொருட்டு ஆணைக்குழு 2017 டிசெம்பர் 22 மற்றும் 2018 ஒக்டோபர் 04 ஆகிய தினங்களில் பொருட் கணிப்புச் சபைகளை நியமித்திருந்தபோதும், சுற்றறிக்கையின் பிரகாரம் 2018 நவெம்பர் 10 ஆந் திகதியளவிலும் ஆண்டிற்கான பொருட் கணிப்பு அறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

3. நிதிசார் மீளாய்வு

3.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2017 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான ஆணைக்குழுவினது நிதிப் பெறுபேறு ரூபா 16,912,796 மிகை ஆகும். இதற்கெதிரான முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 15,982 ஆகியமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டினது நிதிப்பெறுபேற்றில் ரூபா 16,928,778 அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் ஒட்டுமொத்த செலவினம் ரூபா 3,281,150 அதிகரித்தபோதும், அரசாங்க மீண்டுவரும் மானியம் ரூபா 12,088,546 மற்றும் செயற்பாட்டு வருமானம் ரூபா 4,658,896 என அதிகரித்தமையே மேற்படி அதிகரிப்புக்கான பிரதான காரணமாகும்.

மீளாய்வாண்டினதும் முன்னைய 4 ஆண்டுகளினதும் நிதிப் பெறுபேறுகளைப் பகுப்பாய்வு செய்கையில் 2013 ஆம் ஆண்டின் ரூபா 4,846,384 பற்றாக்குறையானது 2017 ஆம் ஆண்டளவில் ரூபா 16,912,796 மிகையாக அதிகரித்திருந்தது. எவ்வாறாயினும், நிதிப்பெறுபேற்றில் ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறை அல்லாத சொத்துக்களது தேய்மானம் என்பவற்றை மீண்டும் சீராக்கல் செய்யும்போது 2013 ஆம் ஆண்டில் ரூபா 39,198,869 ஆகவிருந்த பங்களிப்பு 2017 ஆம் ஆண்டளவில் ரூபா 87,726,750 வரை அதிகரித்திருந்தது.

3.2 நிறுவனத்திற்கு எதிராகவும் நிறுவனத்தாலும் ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்டபூர்வ நிகழ்வுகள்

நிதியைத் திருப்பி பெறும் நோக்கில் ஆணைக்குழு தனி நபர்களுக்கு எதிராக ஒரு வழக்கையும் வெளி நபர்கள் ஆணைக்குழுவிற்கு எதிராக ஒரு வழக்கையும் தொடுத்திருந்தபோதும் நிதிக் கூற்றுக்களில் இவை தெரிவிக்கப்படவில்லை.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 செயலாற்றல்

4.1.1 திட்டமிடல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 - 2018 காலப்பகுதிக்கென ஆணைக்குழுவால் தயாரிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டம் மீளாய்வாண்டிற்கேற்ப நாளதுவரையாக்கப்படவில்லை.

(ஆ) 2017 ஆம் ஆண்டிற்கென ஆணைக்குழு தயாரித்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்ட பணிகளது முன்னேற்றத்தை தெரிவிக்கும் விதத்தில் செயலாற்றல் அறிக்கையை தயாரித்திருக்க வேண்டுமாயினும், அதற்கமைய செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்படவில்லை.

4.1.2 செயற்பாடும் மீளாய்வும்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் தேசிய ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட சான்றிதழை வழங்குவதற்கான முறையாக ஆணைக்குழு அறிமுகம் செய்திருந்த தேசிய தொழில்சார் தகைமைச் சான்றிதழை (NVQ) வழங்கும் முறையை மேற்பார்வையிடலும் பரிசீலனை செய்வதும் ஆணைக்குழுவின் பிரதான கடமையாகும். எனினும், ஆணைக்குழுவிடம் அதற்கான போதிய வளங்கள் இல்லாமையால் மதிப்பாய்வாளர்களை நியமதித்தல், மதிப்பாய்வு செய்தல், மதிப்பாய்வாளர்களுக்குக் கொடுப்பனவை மேற்கொள்ளுதல் மற்றும் சான்றிதழ்களை வழங்குதல் ஆகிய பல கால கட்டங்களிலும் தாமதம் நிலவியது. மேலும், NVQ சான்றிதழ் வழங்கும் மேற்பார்வை நடவடிக்கைகள் அதன் காரணமாகப் போதியளவு நடைபெறாமை பின்வரும் விடயங்களிலிருந்து அவதானிக்கப்பட்டது.

(i) 2017 ஆம் ஆண்டில் புதிதாக அரச துறையில் 150 தொழில்சார் பயிற்சி நிறுவனங்கள் மற்றும் தனியார் துறையில் 210 தொழில்சார் பயிற்சி நிறுவனங்கள் என 360 நிறுவனங்களைப் பதிவு செய்வதற்கான மதிப்பாய்விற்கு திட்டமிடப்பட்டபோதும், செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் முறையே 37 மற்றும் 173 என 210 நிறுவனங்கள் மாத்திரமே மதிப்பாய்வு செய்யப்பட்டிருந்தன. அதற்கமைய, அடையப் பெற்ற ஒட்டுமொத்தச் செயலாற்றல் 58 சதவீதம் மாத்திரமே.

(ii) 2017 ஆம் ஆண்டில் அரச துறையால் நடாத்தப்படும் 400 தொழில்சார் பயிற்சிக் கற்கை நெறிகளையும் தனியார் துறையினரால் நடாத்தப்படும் 100 தொழில்சார் பயிற்சி கற்றை நெறிகளையும் சேர்த்து 500 கற்கை நெறிகளை புதிய தராதர அங்கீகாரத்துக்காக மதிப்பாய்வு செய்வதற்குத் திட்டமிடப்பட்டிருந்தபோதும், செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் முறையே 195 மற்றும் 98 என 273 கற்கை நெறிகள் மாத்திரமே பகுப்பாய்வு செய்யப்பட்டிருந்தன. அதற்கமைய, அடையப் பெற்ற ஒட்டுமொத்தச் செயலாற்றல் 55 சதவீதமாகும்.

(ஆ) 2017 ஆம் ஆண்டில் 02 சஞ்சிகைகளை அச்சிட்டு விநியோகிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தபோதும், ஒரு வார சஞ்சிகை மாத்திரமே அச்சிட்டு விநியோகிக்கப்பட்டிருந்தது.

(இ) நிபுணத்துவத் துறை அபிவிருத்திச் செயற்திட்ட நிதியத்தின் கீழ் மீளாய்வாண்டின்போது 90 பயிற்சி நிலையங்களுக்கான முகாமைத்துவ நிலைமை முறைமையை நிறுவுவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தபோதும் மீளாய்வாண்டின் போது 65 நிலையங்கள் மாத்திரமே நிறுவப்பட்டிருந்தன.

(ஈ) 2014 - 2020 ஆம் ஆண்டிற்கான செயற்திட்ட செயல் நடவடிக்கைத் திட்ட இலக்கின் பிரகாரம், நிர்மாண வேலைகள், தகவல் மற்றும் ஊடகத் தொழில்நுட்பம், இலகு பொறியியலும் உற்பத்தியும் மற்றும் விருந்தோம்பல் மற்றும் சுற்றுலா எனும் துறைகளுக்கு 4 நிபுணத்துவ மன்றங்கள் மீளாய்வாண்டின் இறுதியளவில் அமைக்கப்பட்டிருந்தன. அவை தொடர்பாகப் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) மூன்று நிபுணத்துவ மன்றங்களின் பொருட்டு 2017 ஆம் ஆண்டில் ரூபா 11.64 மில்லியன் செலவிடப்பட்டிருந்தபோதும், அவற்றுடன் தொடர்புடைய வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டமும் செயலாற்றல் அறிக்கைகளும் சமர்ப்பிக்கப்படாமை.

(ii) மன்ற நடவடிக்கைகள் அமைச்சினாலோ அல்லது நிபுணத்துவ அபிவிருத்தி செயற்திட்டங்களாலோ மேற்பார்வை செய்யப்படாமை.

(iii) வியாபாரத் திட்டத்திற்கமைய, அம்மன்றங்கள் ஆரம்பமாகிய ஆண்டு தொடக்கம் வருமானத்தை ஈட்ட வேண்டுமாயினும், அவ்வாறானதொரு விதிமுறை கடைப்பிடிக்கப்படாமை.

(iv) பிணை வரம்புக்குட்பட்ட கம்பனிகளாக இயங்கும் இந்நிறுவனங்களது வருடாந்த கணக்கீட்டு அறிக்கைகள் கணக்காய்வின் பொருட்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படாமை.

4.2 முகாமைத்துவச் செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அமைச்சிற்குரிய கட்டிடத்தின் மூன்றாம் மாடியில் அமைந்துள்ள ஆணைக்குழுவிற்கு மேலதிக இட வசதி பெறப்படும் நோக்குடன் அதன் எட்டாவது மாடியைப் பொருத்தமானவாறு தயாரிப்பதற்கு 2016 நவம்பர் 24 ஆந் திகதியன்று ஒரு மாத ஒப்பந்த அடிப்படையில் ரூபா 6,575,375 பெறுமதியில் ஒப்பந்தம் ஒன்று வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பாகப் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) எட்டாவது மாடியை அபிவிருத்தி செய்வதற்கு முன்னர் சாத்தியக்கூறு ஆய்வுகள் மேற்கொள்ளப்படாமை, எட்டாவது மாடியை ஆணைக்குழுவினது நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்துவது சம்பந்தமாக அமைச்சுக்கும் ஆணைக்குழுவிற்குமிடையே கணக்காய்வுச் சந்தர்ப்பமான 2018 செப்டெம்பர் 07 ஆந் திகதியளவிலும் உடன்படிக்கை செய்து கொள்ளப்படாமை.

(ii) உடன்படிக்கைப் பிரகாரம் குறித்த முதல் கட்ட அபிவிருத்தி நடவடிக்கைகள் குறித்த காலத்தில் முடிவடையாதிருந்ததுடன் 142 நாட்கள் தாமதித்து 2017 மே 23 ஆந் திகதியன்று ஒப்பந்தம் நிறைவேறியிருந்தது. ஒப்பந்தக்கால நீடிப்பு மேற்கொள்ளப்பட்டிராததுடன் அதன் பொருட்டு தாமதக் கட்டணமாக ரூபா 466,856 அறவிடப்பட்டிருக்க வேண்டுமாயினும், ரூபா 144,658 மாத்திரமே அறவிடப்பட்டிருந்தமை.

(iii) எட்டாவது மாடி அபிவிருத்திக்கான ஆரம்ப வேலைகள் நிறைவடையாததால் அதில் உள்ளடங்காத பகுதியை அபிவிருத்தி செய்வதற்காக 2017 செப்டெம்பரில் மீண்டும் கூறு விலைகள் கோரப்பட்டிருந்தன. எனினும், மதிப்பாய்வுக் குழுவால் பரிந்துரைக்கப்பட்ட குறைந்த கூறு விலையான ரூபா 6,552,695 க்கு ஒப்பந்தம் வழங்கப்படாது மீண்டும் கூறு விலைகள் கோரப்பட்டிருந்தன. அதற்கமைய, ரூபா 7,628,324 பெறுமதியிலான ஒப்பந்தத்தை 90 நாட்களுக்குள் நிறைவேற்றுவதற்கு அவ்வொப்பந்தம் 2017 செப்டெம்பர் 29 ஆந் திகதியன்று வழங்கப்பட்டிருந்தது.

(iv) 2017 டிசெம்பர் 31 ஆந் திகதியளவில் எட்டாவது மாடியின் இரண்டு கட்ட அபிவிருத்தி வேலைகளுக்கு ரூபா 9,769,691 செலவிடப்பட்டிருந்த போதும், ஆணைக்குழுவின் அலுவலக நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படக் கூடியவாறு பொருத்தமான மட்டத்தில் அம்மாடி இல்லாதிருந்தமையால் மீண்டும் முற்றாக அபிவிருத்தி செய்யப்பட வேண்டுமென பொறியியல் பணிகளுக்கான மத்திய உசாத்துணைப் பணியகம் (CECB) ஆணைக்குழுவிற்கு 2018 ஒக்டோபர் 31 ஆந் திகதிய தனது அறிக்கையின் மூலம் அறிவித்திருந்தது.

(v) 2018 மார்ச் 02 ஆந் திகதிய பிரதிப் பணிப்பாளரது கடிதத்தின் பிரகாரம் மழைநீர் கசிவதால் எட்டாவது மாடியிலிருந்த ஆணைக்குழுவுக்குரிய உபகரணங்களும் ஆவணங்களும் பாதிப்படைந்திருந்ததுடன், இழப்பு மதிப்பீடு செய்யப்பட்டிராததுடன் 02 அலுவலக மேசைகளுக்கு ஒப்பந்தகாரரிடமிருந்து ரூபா 22,000 மாத்திரமே அறவிடப்பட்டிருந்தது.

(ஆ) 1990 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி அதிகாரச்சட்டத்தின் 111 ஆம் அத்தியாயத்தினது 14(1) ஆம் பிரிவின் கீழ் பதிவு செய்யப்படாது மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வித் திட்டத்திற்கென நிறுவனங்கள் அமைக்கப்படுதல், முகாமைத்துவமிடப்படல், நடாத்தப்படுதல் அல்லது நிர்வகிக்கப்படுதல் என்பன மேற்கோள்ளப்படலாகாதெனினும், 2014 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சியின் பிரகாரம், தீவின் ஒட்டுமொத்த தொழில்சார் பயிற்சி நிறுவனங்களது எண்ணிக்கை 2,701 ஆகியதுடன், ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்ட கல்வி நிறுவனங்களது எண்ணிக்கை 1,080 அல்லது 40 சதவீதம்

வரையாக அமைந்திருந்தது. முறைப்படி 02 ஆண்டுகளுக்கு ஒரு முறை இந்நிறுவனங்கள் தமது பதிவை புதுப்பித்திராமையால் கணக்காய்வுச் சந்தர்ப்பமான 2017 ஒக்டோபர் 01 ஆந் திகதியளவில் பதிவு செய்யப்பட்டிருந்த நிறுவனங்களது எண்ணிக்கை 692 வரை குறைவடைந்திருந்தது. பணிப்பாளர் நாயகத்தினது பதிலுக்கமைய, அதிகாரச்சட்டத்தில் ஏற்பாடுகள் இல்லாததால் பதிவு செய்யப்படாத மற்றும் புதுப்பிக்கப்படாத பயிற்சி நிறுவனங்களுக்கு எதிராக சட்டபூர்வ நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாதிருந்ததாக அறிவிக்கப்பட்டிருந்தது.

(இ) 1990 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க மூன்றாம் நிலை தொழில்சார் கல்வி அதிகாரச்சட்டத்தின் 111 ஆம் அத்தியாயத்தினது 15(1) ஆம் பிரிவின் கீழ் பதிவு செய்யப்படாது எந்தவொரு தொழில்சார் மற்றும் அல்லது தொழில்சார் கல்விக்கான குறிப்பிடத்தக்க கற்கை நெறிகளை நடாத்தல் ஆகாது. எவ்வாறாயினும், 2014 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சியொன்றின் பிரகாரம் ஆணைக்குழுவினது தேசிய நிபுணத்துவ தகைமை மட்டத்தையுடைய கற்கை நெறிகளுக்கு பதிவாகிய எண்ணிக்கை 2,442 ஆகும். முறைப்படி 02 ஆண்டுகளுக்கு ஒரு முறை கற்கை நெறிகளுக்கான பதிவுகளைப் புதுப்பிக்காமையால் கணக்காய்வுச் சந்தர்ப்பமான 2017 ஒப்டோபர் 01 ஆந் திகதியளவிலும் பதிவு செய்யப்பட்டிருந்த கற்கை நெறிகளது எண்ணிக்கை 1,625 வரை குறைவடைந்திருந்ததுடன், சகல பயிற்சி நிறுவனங்களையும் கற்கை நெறிகளையும் பதிவு செய்வதற்கான குறிப்பிட்ட விதி முறைகளை நிறுவனம் கடைப்பிடிக்காமையே இதற்கான காரணமாக அமைந்தது.

(ஈ) அதிகாரச்சட்டத்தின் கீழ் உருவாக்கப்படும் கட்டளைகள் அல்லது சட்டங்கள், பயிற்சி நிறுவனங்களாலும் பயிற்றுவிக்கப்படுவர்களாலும் கடைப்பிடிக்கப்படுவதை நிறுவன ரீதியான பரிசீலனைகளின் மூலம் உறுதி செய்வதற்குப் போதுமான பதவியணியினர் ஆணைக்குழுவில் இல்லாதபோதும், 50 மற்றும் 51 ஆம் பிரிவுகளின் மூலம் அப்பணியை நிறைவேற்றுவதற்கு இந்த அதிகாரச் சட்டத்தின் மூலம் நிறுவப்பட்ட தேசிய பயிலுனர் மற்றும் தொழில்நுட்ப பயிற்சி அதிகாரசபையின் பரிசோதகர்களை ஆட்சேர்த்திருந்தபோதும், அவர்களின் மூலமேனும் அப்பரீசீலனைகளை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளை முகாமைத்துவம் மேற்கொள்ளவில்லை.

(உ) நிறுவனத்தின் கணனி முறைமை 2017 மே 09 ஆந் திகதி தொடக்கம் செயலற்றுப் போனமை மற்றும் அதனுடன் தொடர்புடைய தரவுகளின் களஞ்சியம் (Back-ups) வைத்திருக்கப்படாமை சம்பந்தமாக விசாரணை மேற்கொண்டு அதற்குப் பொறுப்பானவர்களை இனங்காண்பதற்கு ஆணைக்குழு கணக்காய்வுச் சந்தர்ப்பமான 2018 செப்டெம்பர் மாதமளவிலும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

4.3 செயற்பாட்டு நடவடிக்கைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்டுள்ள நிறுவனங்கள் தற்போது நடாத்தும் கற்கை நெறிகளை ஏற்றுக்கொள்ளப்பட்ட நிபுணத்துவக் கற்கை நெறிகளாக முன்னேற்றுவதற்கு ஆணைக்குழுவால் நிதியளிக்கப்படும் செயல் அமுலாக்கப்பட்டிருந்தது. அது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 2017 ஆம் ஆண்டில் 03 அரச துறை நிறுவனங்களுக்குரிய 104 நிலையங்கள் நிதி உதவியைப் பெறுவதற்கு விண்ணப்பித்திருந்தன. அவற்றுள் இலங்கை தொழில்சார் பயிற்சி அதிகாரசபையின் 03 நிலையங்களது 06 கற்கை நெறிகளுக்கு மாத்திரம் 382 உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கான மதிப்பாய்வு மேற்கொள்ளப்பட்டு பரிந்துரை வழங்கப்பட்டிருந்தது. எனினும், ஆண்டின்போது எந்தவொரு அரசாங்க அல்லது இடருக்குள்ளான பிரிவினருக்கும் நிதி உதவி வழங்கப்படவில்லை.

(ii) 2017 ஆம் ஆண்டில் கற்கை நெறி அபிவிருத்திக்கென நிதி உதவியைப் பெறுவதற்கு 52 தனியார் நிறுவனங்கள் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்திருந்தன. எனினும், அதில் ஒரு தொழில்சார் பயிற்சி நிறுவனத்திற்கு மாத்திரம் ரூபா 2,686,526 நிதி உதவியளிக்கப்பட்டிருந்தது.

(iii) இனங்காணப்பட்ட கற்கை நெறிகளுக்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட நிபுணத்துவத்துக்கமைய தராதர அங்கீகாரம் வழங்குவதன் மூலம் அவற்றைத் தேசிய தொழில்சார் தகைமை மட்டத்திற்கு இட்டுச் செல்வதே அரச மற்றும் தனியார் துறை தொழில்சார் பயிற்சி நிதி உதவி வழங்கும் நோக்கமாகும். எனினும், 2016 முதல் 2018 வரை 18 கற்கை நெறிகளுக்கு ரூபா 3,825,890 நிதியுதவி வழங்கப்பட்டிருந்தபோதும், அப்பயிற்சிக் கற்கை நெறிகளில் எதுவுமே கணக்காய்வுச் சந்தர்ப்பமான 2018 ஒக்டோபர் 05 ஆந் திகதியளவிலும் தராதர அங்கீகாரத்திற்குள்ளாகவில்லை.

(iv) 2011 முதல் 2014 வரை கற்கை நெறிகளை தராதர அங்கீகாரப்படுத்துவதற்குத் தேவையான உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கு இலங்கை தொழில்சார் பயிற்சி அதிகாரசபைக்கு ஆணைக்குழு வழங்கிய நிதியுதவி ரூபா 10,427,342 ஆகும். அது குறித்த நோக்கத்திற்குப் பயன்படுத்தப்படாது 2017 டிசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் தொழில்சார் பயிற்சி அதிகாரசபையின் கணக்குகளில் பயன்படுத்தப்படாதிருந்தது.

(ஆ) தேசிய தொழில்சார் தகைமை (NVQ) கற்கை நெறிகள் நடாத்தப்படும் தொழில்சார் பயிற்சி நிலையங்களது நிலைமையைச் சான்றுறுதிப்படுத்தும் நிலைமை முகாமைத்துவ முறைமையை ஏற்படுத்தும் தேவை ஆணைக்குழுவைச் சார்ந்ததாகும். அதற்கென 2017 ஆம் ஆண்டின்போது ரூபா 04 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. இது தொடர்பாகப் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) இருபது உள்ளக உத்தியோகத்தர்களும் 13 வெளியக உத்தியோகத்தர்களுமாக 33 நிலைய முகாமைத்துவக் கணக்காய்வாளர்கள் பிரதான கணக்காய்வாளர்களாகப் பயிற்றுவிக்கப்பட்டிருந்தனர். எனினும், வெளியக உத்தியோகத்தர்களைக் கணக்காய்வாளர்களாக ஆட்சேர்க்கும்போது தேவையான தகைமைகளுடன் ஏற்றுக்கொள்ளக்கூடிய நியமங்கள் இனங்காணப்பட்டிராததுடன் அதில் 10 உத்தியோகத்தர்கள் கணக்காய்வு நடவடிக்கைகள் எதிலுமே ஈடுபட்டிருக்கவுமில்லை.

(ii) உள்ளக உத்தியோகத்தர்களில் 06 பேர் 27 முதல் 35 தவணையாகக் கணக்காய்வு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கையில் 14 பேர் 1 முதல் 16 தவணைகளிலான கணக்காய்வு நடவடிக்கைகளிலேயே ஈடுபட்டமையும் உள்ளக உத்தியோகத்தர்களுடன் ஒப்பிடப்படுகையில் வெளியக உத்தியோகத்தர்கள் குறைவாகவே கணக்காய்வு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

(iii) 2017 ஆம் ஆண்டில் தொழில்சார் பயிற்சி அதிகாரசபையும் தேசிய பயிலுனர் பயிற்சி அதிகாரசபையும் இம்முறையில் உட்புகுவதற்காக ரூபா 25.83 மில்லியனைச் செலவழித்து முன்கூட்டியே தயாராகியபோதும், அந்நிலையங்களை ஆணைக்குழு கணக்காய்வு செய்யவில்லை.

(iv) முகாமைத்துவ நிலைமை முறைமையை உருவாக்குவதற்கான முறையான விதி முறைகள் மற்றும் அம்முறைமையைக் கணக்காய்வு செய்வதற்கான நிறுவனங்களைத் தெரிவு செய்வதல், கணக்காய்வு உத்தியோகத்தர்களை நியமித்தல் போன்ற நடவடிக்கைகள் தெளிவுற நடைபெறுவதை உறுதி செய்வதற்கான விதி முறைகள் அறிமுகஞ் செய்யப்படவில்லை.

(v) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட ஆணைக்குழுவின் தீர்மானத்துக்கமைய, ஆணைக்குழுவின் பணிப்பாளர் சபையால் 2015 முதல் 2017 வரையான 03 ஆண்டுகளின்போது நிலைமையைச் சான்றுறுதிப்படுத்தும் கட்டணத்தை மூன்று சந்தர்ப்பங்களில் ரூபா 50,000, ரூபா 25,000, ரூபா 7,500 என மாற்றஞ் செய்திருந்தது.

(vi) முகாமைத்துவ நிலைமை முறைமையை உருவாக்குவதற்கு, கணக்காய்வு நடவடிக்கைகளில் பயன்படுத்தப்படும் உள்ளக உத்தியோகத்தர்களுக்கு போக்குவரத்துப் படி, தங்குமிட படி, முதல் நாள் படி என முறையே நாளொன்றிற்கு ரூபா 3,500, ரூபா 2,000, ரூபா 5,000 எனும் வீதப்படி தாபன விதிக்கோவையின் XIV அத்தியாயத்தினது 4.5 ஆம் பந்திக்கு முரணாக கொடுப்பனவு செய்திருந்ததுடன், அதற்கான திறைசேரியின் அங்கீகாரம் பெறப்படவில்லை.

4.4 பயன்படுத்தப்படாததும் குறைவாகப் பயன்படுத்தப்படுவதுமான சொத்துக்கள்

ஆணைக்குழுவிற்குச் சொந்தமான ரூபா 2,150,000 கிரயமுடைய மோட்டார் வாகனமொன்று 2017 செப்டெம்பர் 18 தொடக்கம் செயற்படாதிருந்தது. எனினும், கணக்காய்வுத் தினமான 2018 ஒக்டோபர் 25 ஆந் திகதியளவிலும் அது பழுதுபார்க்கப்படாது இருந்தது.

4.5 பதவியணி நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டில் ஆணைக்குழுவினது அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 116 ஆகியபோதும், உள்ளவாறான பதவியணி 96 ஆகவிருந்தது. அவற்றுள் அத்தியாவசிய பதவிகளான பிரதிப் பணிப்பாளர் நாயகப் பதவி, 02 பணிப்பாளர் பதவிகள், 04 பிரதிப் பணிப்பாளர்கள் பதவிகள் என்பன இருந்தன.

(ஆ) நிறுவனத்திற்கு உத்தியோகத்தர்களை ஆட்சேர்க்கும் முறையான விதி முறைகளுக்குப் புறம்பாக, அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் அடங்காத ஒருங்கிணைப்பு மறுசீரமைப்பு மற்றும் பயிற்சி அபிவிருத்திப் பதவிகளுக்கு 218/18 ஆம் இலக்க சபைப் பத்திரத்தின் மூலம் அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது. அதற்கமைய, 2017 ஒக்டோபர் 01 முதல் 2018 ஒக்டோபர் 21 வரையான குறுகிய காலத்தினுள் பல சந்தர்ப்பங்களில் உத்தியோகத்தர்கள் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்டு ரூபா 714,665 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

4.6 நிதியப் பயன்பாடு

சர்வதேச தொழில் ஸ்தாபனத்திடமிருந்து 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் பெறப்பட்ட ரூபா 3,300,000 பணிப்பாளர் சபையினதோ திறைசேரியினதோ அங்கீகாரமின்றியும் ஆணைக்குழுவினது நோக்கத்திற்கு முரணாகவும் 03 நிலையான வைப்புக்களில் இடப்பட்டிருந்தன.

5. நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி

5.1 நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி நோக்கங்களையும் இலக்கையும் அடைதல்

2017 ஆகஸ்ட் 14 ஆந் திகதிய என்பீ/எஸ்பீ/எஸ்டீஜீ/17 ஆம் இலக்க தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார நடவடிக்கைகள் அமைச்சினது செயலாளரால் வெளியிடப்பட்ட கடிதம் மற்றும் நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் 2030 ஆம் ஆண்டிற்கான "நிகழ்ச்சி நிரல்" என்பவற்றின் பிரகாரம் சகல அரச நிறுவனங்களும் செயற்பட வேண்டுமாயினும், மீளாய்வாண்டில் ஆணைக்குழு தனது பரப்பெல்லைக்குள் வரும் பணிகளில் எவ்வாறு ஈடுபடுவது என்பதை அறிந்திருக்கவில்லை. அதன் காரணமாக, தனது பணிகள் தொடர்பாக நிலைத்து நிற்கவல்ல நோக்கங்கள், இலக்குகள் மற்றும் அவ்விலக்கை அடையும் விதம், இலக்கை அடையப் பெற்றதை அளவிடுவதற்கான சுட்டுக்களை இனங்கண்டிருக்கவுமில்லை.

6. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

6.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக் கூற்றுக்களை கணக்காய்விற்கு சமர்ப்பிக்க வேண்டுமாயினும், ஆணைக்குழுவினது 2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 190 நாட்கள் தாமதத்தின் பின்னர் 2018 நவெம்பர் 07 ஆந் திகதியன்றே கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

6.2 உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் அங்கீகரிக்கப்பட்ட பதவியிணியினரது எண்ணிக்கை 05 ஆகும். எனினும், அதில் 02 உதவிப் பணிப்பாளர் பதவிகள் வெற்றிடமாக இருந்ததால் மீளாய்வாண்டின்போது போதியளவு கணக்காய்வு நடைபெறவில்லை. உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் நான்கு பேருமே மேற்பார்வை மட்டத்திலமைந்ததால் ஆண்டின்போது 2 உத்தியோகத்தர்கள் உள்ளவாறு மேற்பார்வை மட்டத்திலேயே பணியாற்றியிருந்தனர்.

6.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான பாதீடு செய்யப்பட்ட வருமானம் மற்றும் செலவினம், உள்ளவாறான வருமானம் மற்றும் செலவினத்துடன் இணக்கம் செய்யப்படுகையில் 20 முதல் 148 சதவீதம் வரையிலான வேறுபாடுகள் நிலவியமையால் பாதீடானது பயனுள்ள முகாமைத்துவ கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

6.4 தீர்வு செய்யப்படாதுள்ள கணக்காய்வுப் பந்திகள்

2016 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியினது அறிக்கையின் 4.4 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்டவாறு ஆட்சேர்ப்பு நடைமுறையின் 4.1.2 ஆம் பிரிவின் பிரகாரம் முகாமைத்துவச் சேவை தரப் பதவிக்கு விண்ணப்பிக்கும் உள்ளக விண்ணப்பதாரர் கனிஷ்ட முகாமைத்துவ மட்டத்தின் 1 ஆம் தரத்தில் 5 ஆண்டு கால திருப்திகர சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருக்க வேண்டும். எனினும், கீழ் முகாமைத்துவ மட்டத்தில் குறித்தவாறு சேவைக்கால அனுபவத்தை பூர்த்தி செய்திராத 06 உள்ளக உத்தியோகத்தர்கள் உதவிப் பணிப்பாளர் பதவிகளில் ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர். மேலும், புள்ளி வழங்கும் நடைமுறை அறிமுகம் செய்யப்பட்டபோதும், வேறு தகைமைகளுக்கும் அனுபவத்திற்கும் சகல விண்ணப்பதாரருக்கும் நியாயமாக நடக்கும் விதத்தில் நேர்முகப் பரீட்சைச் சபையால் புள்ளிகள் வழங்கப்படவில்லை.

7. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வவ்போது ஆணைக்குழுவினது பணிப்பாளர் நாயகத்தினது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறை	அவதானிப்பு
(அ) கணக்கீடு	(i) புதிய கணனி கணக்கீட்டு முறைமையில் 2017 ஆம் ஆண்டிற்கான சகல உறுதிச் சான்றுகளும் உள்ளடக்கப்படாமை.

	(ii)	2017 மே மாதத்தில் கணனிக் கணக்கீட்டு முறைமை செயலற்றுப் போனதால் தரவுகள் முறைமையாகக் களஞ்சியப்படுத்தப்படாது, (Back up) அதன் காரணமாக கணனித் தரவு முற்றாக அழிவுக்குள்ளானமை.
(ஆ) நிதிக் கட்டுப்பாடு	(i)	நிபுணத்துவத் துறை சார்ந்த அபிவிருத்திச் செயற்திட்டத்தின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்ட நிதி பயன்படுத்தப்படாமை.
	(ii)	வங்கிக் கணக்கிணக்கக் கூற்றைத் தவறின்றித் தயாரிக்காமை.
(இ) மனிதவள முகாமைத்துவம்		மதிப்பாய்வாளர்களது தேவையை மதிப்பிடாமை, ஆட்சேர்ப்பு மற்றும் கொடுப்பனவு மேற்கொள்ளல் என்பவற்றிற்குப் போதிய முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளை அறிமுகம் செய்யாமை.
(ஈ) ஆவணங்களது பாதுகாப்பு		கணக்காய்விற்கு உறுதிச் சான்றுகளைச் சமர்ப்பிக்கும்போது உறுதிச் சான்றுகள் நிலுவையுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் பொறுப்பான உத்தியோகத்தர் ஒருவரால் பரிசீலிக்கப்படாமை, உறுதிச் சான்றுகளைப் பாதுகாப்பதற்குப் போதுமான நடவடிக்கைகளை மேற்கொள்ளாமை என்பன.

எச்.எம்.காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

கணக்காய்வு அத்தியட்சகர்,
கணக்காய்வு அத்தியட்சகர் திணைக்களம்,
பத்தரமுல்ல.

மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் 2017 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த வருடத்தில் நிதி நிலைக்கூற்று தொடர்பான 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி சட்டத்தின் 14 (2) சீ பந்தியிற்கு அமைவான கணக்காய்வு அத்தியட்சகரின் அறிக்கை

தங்களது VTY/E/TVEC/1/17/19 ஆம் மற்றும் 14 (2) சீ இலக்க 2019/02/08 ஆம் திகதிய மேற்படி கணக்காய்வு அறிக்கையின் பொருட்டு தற்கால நிலைமை மற்றும் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் தொடர்பாக இதன்மூலம் தெரியப்படுத்துகின்றேன்.

2. நிதி நிலைக்கூற்று

2.2.1 இலங்கை அரச பிரிவு கணக்கீட்டு நியமங்கள்

(அ)

i. இங்கு, குறை நிரப்பு ஒதுக்கீட்டு செயற்பாட்டு இலாபத்திற்கு பொருத்தமான வகையில் ரூபா 3,764,893.00 மீதியில் அடங்கியுள்ள பெறுமதியானது வங்கி சரிசெய்தல் அறிக்கையினை தயார்செய்தல் மூலம் தீர்வு செய்யப்பட்டுள்ளது. ரூபா 1,352,722 முன்னைய வருட சரிசெய்தலாக காட்டப்பட்டிருப்பது 2016 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டுள்ள செலவுகள் 2017 ஆம் ஆண்டில் கணக்கீடு செய்யப்பட்டுள்ளமையினால் அப் பெறுமதியானது அடையாளங்காணப்பட்டு அவை முன்னைய வருடத்திற்கான சரிசெய்தல் கணக்கில் தீர்வுசெய்யப்பட்ட பெறுமதியாக காட்டப்பட்டுள்ளது.

ii. இங்கு நிர்வாக செயற்பாடுகளின் மூலம் கிடைக்கப்பெறும் நிதி ஓட்டத்தினை கணக்கீடு செய்யும் போது பிந்திய வருமான பெறுமதியாக காட்டப்பட்டிருப்பது 2016 ஆம் ஆண்டின் நிதிநிலை கூற்றில் உள்ள பிந்திய வருமான மீதி மற்றும் 2017 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையில் உள்ள பிந்திய வருமான மீதி ஆகியவற்றுக்கிடையிலான வேறுபாட்டினையாகும்.

iii. இங்கு கொள்வனவுகளிற்குரிய நிதித்தொகையான ரூபா 9,975,499.00 முதலீட்டின் கீழான நிதி ஓட்டமாக காட்டப்பட்டுள்ளது என்பதனை தெரிவித்துக்கொள்கின்றேன்.

(ஆ) இலங்கை அரசதுறை கணக்கீட்டு நியமம் 07

i. இங்கு 08 ஆம் மாடியினை மேம்படுத்துவதற்குரிய செலவினமானது கட்டிட மேம்பாட்டின் கீழ் காட்டப்பட்டுள்ளதுடன் கட்டிட நிர்மாணமாக கணக்கீடு செய்யப்படவில்லை எனபதனை தெரிவித்துக்கொள்கின்றேன்.

ii. இங்கு கட்டிடம் தொடர்பான உரிமையானது சம்பந்தப்பட்ட அமைச்சிடம் காணப்படுவதுடன் அது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட மேம்படுத்தல் ஆனது கட்டிட புனருத்தாபன செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதனை தெரிவித்துக்கொள்கின்றேன்.

2.2.2 கணக்கீட்டு கொள்கை

இவ்வேறுபாடானது முன்னைய வருட சரிசெய்தல் மூலம் 2018 ஆம் ஆண்டில் சரிசெய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2.2.3 கணக்கீட்டு குறைபாடு

(அ) இங்கு குறிப்பிடப்பட்டிருப்பது குறைபாட்டினை தவிர்ப்பதற்கு பழைய பக்கேஜ் இனை பயன்படுத்துவதிலிருந்து 2017.03.31 ஆம் திகதியன்று பெற்றுக்கொள்ளப்பட்ட மீதியானது சரிபார்க்கப்பட்டு 2017.04.01 ஆம் திகதிய ஆரம்ப மீதியாக புதிய பக்கேஜ் ,ற்கு சேர்க்கப்பட்டுள்ளது.

i. இவ் வேறுபாடானது அவதானிக்கப்பட்டமையினால் மேலே கூறப்பட்டுள்ளவாறு பழைய பக்கேஜ் இன் பயன்பாட்டினால் கிடைக்கப்பெற்ற மீதி பரீட்சிப்பின் போது கிடைக்கப்பெற்ற குறிப்பிடப்பட்ட பெறுமதியானது புதிய பக்கேஜ் இல் 2017.04.01 ஆம் திகதிய ஆரம்ப மீதியாக உள்ளடக்கப்பட்டுள்ளது.

ii, iii. மேலே i இல் குறிப்பிடப்பட்டுள்ள விடையானது இவற்றிற்கும் பொருத்தமாதாகும்.

(ஆ) i, ii, iii இல் காட்டப்பட்டுள்ள அனைத்து குறைபாடுகளும் வங்கி சரிசெய்தல் வெளியீட்டினை தயார்செய்யும் போது அடையாளம் காணப்பட்டுள்ளன. அதற்கிணங்க, இம் மாற்றமானது கணக்கீட்டிற்கு சேர்க்கப்பட்டு குறிப்பினை திருத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(இ) காட்டப்பட்டுள்ள நிலையான சொத்து கணக்கின் ரூபா 312,500 பெறுமதியான கணனி உதிரிப்பாகங்கள் மற்றும் அதற்காக ஒதுக்கப்பட்ட தேய்மான ஒதுக்கீட்டினை சரிசெய்வதற்கு உரிய ஜேர்னல் பதிவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(ஈ) பணிக்கொடை கணக்கு மீதியினை சரிசெய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(உ) 2018 ஆம் ஆண்டின் இறுதி கணக்கின் மீதியினை சரிசெய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(ஊ) ரூபா 373,411 கூடுதலாக காட்டப்பட்டிருந்த தேய்மான பெறுமதியானது சரியான ஜேர்னல் பதிவு மூலம் சரிசெய்யப்பட்டுள்ளது.

(எ) (ஏ) (ஐ)

காட்டப்பட்டுள்ள அனைத்து குறைபாடுகளும் 2018 ஆம் ஆண்டிற்கான கணக்கீடுகளை தயார்செய்யும் போது சரிசெய்யப்பட்டுள்ளன.

(ஒ) இடர்கடன் மீதியினை சரிசெய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(ஓ) இரண்டு முறை பதிவு மேற்கொள்ளப்பட்ட முற்பணக் கணக்கு ஜேர்னல் பதிவு இல 22 பரீட்சித்து பார்க்கப்பட்டு சரிசெய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

(ஔ) குறிப்பிடப்பட்டுள்ள ரூபா 540,800.00 பெறுமதியான மரத்தளபாடங்கள் மற்றும் பொருத்துதல் செயற்பாடு என்பவை தொடர்பாக பரீட்சிக்கப்பட்டு கணக்கீட்டினை மேற்கொள்ளும் செயற்பாடு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

(க) (கா) (ஜ)

மேற்கூறப்பட்ட இலக்கங்களின் கீழ் கண்காணித்தல் மற்றும் கணக்கீட்டு தவறுகள் 2018 ஆண்டிற்கான கணக்கீட்டினை தயார் செய்யும் போது சரிசெய்யப்பட்டுள்ளன.

(ட) 2017 ஆம் ஆண்டிற்கான செலவினங்களின் பொருட்டு கட்டண வவுச்சர் பத்திரங்கள் கூடுதல் எண்ணிக்கையில் சமர்ப்பிக்கப்பட்டமையினால் வருட ஒழுங்கில் வேறுபிரிப்பதற்கு முடியாமல் போனது. அதற்கிணங்க, அவ் அனைத்தும் 2017 ஆம் ஆண்டில் கணக்கீடு செய்யப்பட்டுள்ளன என்பதனை தெரிவித்துக்கொள்கின்றேன். அதற்கிணங்க, எதிர்காலத்தில் உரிய வருடங்களை அடையாளங்கண்டு கணக்கீடஜ செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(ட) 2017 ஆம் ஆண்டு மே மாதத்திற்கு உரிய தலைவர் அவர்களின் கொடுப்பனவு இரண்டு முறை பதிவு செய்யப்பட்டுள்ள போதிலும் நிதி ஓட்டமானது ஒரு முறை மாத்திரமே இடம்பெற்றுள்ளது. மேலும் குறிப்பிடப்பட்டுள்ள கணிப்பீட்டு கட்டணமான ரூபா 196,300.00 இற்குரிய செலவினம் தொடர்பாக தேடிப்பார்த்து சரியான பதிவினை மேற்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

(ன) திரட்டு செலவினத்தினை கணக்கீடு செய்து உரியவாறு கணக்கீட்டினை தயார் செய்யும் செயற்பாடு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

(த) பிந்திய வருமானத்தினை பிரதான நிதி நிலைமை கூற்றிற்குரிய தலைப்பின் கீழ் காட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

2.2.4 தெளிவற்ற வேறுபாடுகள்

(அ) 2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றினை தயார்செய்யும் போது காட்டப்பட்டுள்ள வேறுபாடுகள் இனங்காணப்பட்டு விடயங்களை உள்ளடக்கிய உப ஆவணங்கள் மற்றும் நிதிக்கூற்று என்பவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள கடன் மீதிகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

(ஆ) மீதி பரீட்சிப்பு மற்றும் லெஜர் என்பவற்றுக்கிடையில் காணப்படும் வேறுபாடுகள் என்பன தொடர்பான விபரங்கள் பின்வருமாறு.

கணக்கு		மீதி பரீட்சிப்பு இணங்க பெறுமதி (ரூ)	லெஜரிற்கு இணங்க பெறுமதி (ரூ)	தெளிவுபடுத்துதல்
1	ஆணைக்குழு கடன்	1,012,319	950,875	சரிசெய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது
2	ஆணைக்குழு கடன் வட்டி	39,772	43,491	சரிசெய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது
3	முற்பணம்	259,000	9,000	வேறுபாடு தொடர்பாக பரீட்சித்து சரிசெய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது
4	இடர் கடன்	6,731,598	7,069,548	வேறுபாடு தொடர்பாக பரீட்சித்து சரிசெய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது
5	இடர்கடன் வட்டி	379,658	402,445	சரிசெய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது
6	விழா முற்பணம்	694,800	679,800	வேறுபாடு தொடர்பாக பரீட்சித்து சரிசெய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது
7	தேசிய தொழிற் தகைமை பரீட்சை கட்டணம்	10,623,090	10,625,089	இவ் வேறுபாடு தொடர்பாக பரீட்சித்து சரிசெய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது
8	வங்கிக் கணக்கு	4208448	1219682	சரிசெய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது
9	மீண்டும் செலுத்த வேண்டிய வழங்கல்	11,028,098	9,881,092	இதற்கான காரணத்தினை கண்டறிந்து சரி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது
10	மீண்டும் செலுத்த வேண்டிய வழங்கல	39,195,57	37,353,809	இதற்கான காரணம் கணக்கினை தயார் செய்தவுடன் கண்டறியப்படும் ஜேர்னல் குறிப்பினை சரிசெய்தலாகும்

(இ)

கணக்கு		மீதி பரீட்சிப்பு இணங்க பெறுமதி (ரூ)	லெஜரிற்கு இணங்க பெறுமதி (ரூ)	தெளிவுபடுத்துதல்
1	சேர்க்கப்பட்ட மீதி	21,484,361	20,924,366	சரிசெய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது
2	சேர்க்கப்பட்ட மீதி - அலுவலக உபகரணம்	5,694,175	5,478,548	சரிசெய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது
3	வருட மீதி - கணனி	3,044,802	2,484,807	சரிசெய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது
4	வருட மீதி - அலுவலக உபகரணம்	977,267	760,642	சரிசெய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது
5	கணிப்பீட்டு கட்டணம		11,500	சரிசெய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது

	கணக்கு	மீதி பரீட்சிப்பு இணங்க பெறுமதி (ரூ)	லெஜரிற்கு இணங்க பெறுமதி (ரூ)	தெளிவுபடுத்துதல்
6	நிதி வங்குதலினை மாற்றுதல		6,000	சரிசெய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது
7	செலுத்த வேண்டிய ஈட்டும் போது வரி அறவிடுதல்		8,449	சரிசெய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது
8	முன்னைய வருட சரிசெய்தல் கணக்கு	1,157,183	1,177,132	சரிசெய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது
9	ரச் யுவர் பியூச்சர் வேலைத்திட்டம்	472,524		சரிசெய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது

2.3 கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்கு

(அ) இத் தனியார் நிறுவகத்திற்கு எதிராக வழக்கொன்று இடம்பெற்று வருகின்றது. இங்கு, கிடைக்கப்பெறும் தீர்ப்பிற்கு இணங்க எதிர்காலத்தில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

(ஆ) சேவையிலிருந்து விலகிய மற்றும் நீக்கப்பட்ட நபர்கள் மூலம் செலுத்தப்பட வேண்டிய கடன் தொகையினை அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

2.4 சட்டம் ஒழுங்கு, ஒழுங்குமுறை மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களிற்கு இணங்காமை

(அ)

i. கணக்கீட்டு முறைமையில் தரவுகள் விரயமாகியமையினால் ஏற்பட்ட தாமதத்தினால் இவ் வவுச்சரினை சமர்ப்பிப்பதற்கு தாமதமாகியது. இவ்வாறான தாமதங்கள் எதிர்காலத்தில் இடம்பெறாமல் இருப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ii. வங்கி கணக்குகள் மூன்றிற்கும் உரியவாறு மூன்று உப பத்திர புத்தகங்கள் பேணப்பட்டு வருகின்றது.

iii. கணக்கீட்டு பக்கேஜ் ஆனது பயன்படுத்தப்பட்டு தயாரிக்கப்பட்ட முற்பண ஆவணமானது போதுமானதற்றதாக கணக்காய்வில் காட்டப்பட்டமையினால் 2018 ஆம் ஆண்டில் இருந்து முற்பண ஆவணமானது முன்னையவாறு புத்தகங்களில் தயாரிக்கப்படுகின்றன.

iv. இங்கு தபால் தொடர்பாக ஏற்படும் தாமதங்கள் உள்ளடங்கலான பல காரணங்களினால் வாடிக்கையாளர்களின் காசோலைக்கான காலமானது செல்லுபடியடியற்றதாகுவதனால் கணக்கு பிரிவிடம் சமர்ப்பிக்கப்பட்டு காலநீடிப்பு செய்யப்படுகின்றது. இக் கணக்கீட்டு முறைமை ஊடாக இடம்பெறாமையினால் பழைய காசோலை தினத்திற்கு வங்கி சரிசெய்தலில் காட்டப்பட்டுள்ளது. இத் திகதி மாற்றத்திற்குரிய பதிவேடானது கணக்கு பிரிவில் பேணப்பட்டு வருகின்றது.

v. நிறுவகத்தில் பயன்படுத்தப்படும் இன்வென்ரி பொருட்கள் தொடர்பான புத்தகமானது பேணப்படுவதுடன் அதனை நாளாதுவரையாக்குவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

(ஆ) 2017 ஆம் ஆண்டில் பொருட் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்ட போதிலும் 2017 ஆம் ஆண்டில் கணக்கீடு மேற்கொள்ளும் கணனியில் ஏற்பட்ட தகவல் இழப்பினால் அவ் அறிக்கை தொடர்பான உண்மைத்தன்மை தொடர்பாக பிரச்சினை காணப்படுகின்றது. இவ்வாறான நிலைமையின் கீழ் 2017 ஆம் ஆண்டிற்கான பொருட்கணக்கெடுப்பு தொடர்பான சரியான அறிக்கையினை கணக்காய்வு அத்தியட்சகரிடம் கையளிக்க முடியாமல் போயுள்ளது. ஆயினும், 2018 ஆம் ஆண்டிற்கான பொருட்கணக்கெடுப்பின் மூலம் இக் குறைபாட்டு நிலைமையினை சரிசெய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

4.1 செயற்திறன்

4.1.1 திட்டமிடல்

(அ) 2014 - 2018 காலப்பகுதியிற்கான இணைந்த திட்டமானது நாளாதுவரையாக்கப்படாமையின் காரணமாக அரசாங்க நிதி சுற்றுநிருப இல 01/2014 ஆவணத்திற்கு இணங்க திட்டமானது செயற்படுத்தப்படல் தற்காலிகமாக நிறுத்தப்பட்டது. எவ்வாறாயினும், இவ் வருடங்களில் செயற்பாட்டு திட்டமானது இணை திட்டத்திற்கு இணங்க தயாரிக்கப்பட்டது. ஆயினும், 2019 ஆம் ஆண்டில் இணை திட்டத்தினை நாளாதுவரையாக்கும் பொருட்டு வேலைத்திட்டமானது தற்போது தயாரிக்கப்பட்டுள்ளது. இதில் 2019 ஆம் ஆண்டிற்கான வருடாந்த செயற்பாட்டு திட்டமும் அடங்கும்.

(ஆ) 2017 ஆம் ஆண்டு தொடர்பாக செயற்திறன் அறிக்கையினை தயாரிக்கப்பட்ட போதிலும் அது செயற்திறன் திட்டத்திற்கு ஏற்புடையதாக தயார்செய்யப்படாமையினை தவிர்ப்பதற்கு தற்போது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதற்கிணங்க, எதிர்காலத்தில் செயற்பாட்டு திட்டத்திற்கு ஏற்புடையதாக திட்டமிடப்பட்ட செயற்திறன் இனை முன்வைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

4.1.2 செயற்திறன் மற்றும் மீளாய்வு

(அ)

i. 2017 ஆம் ஆண்டில் நிறுவகங்களை பதிவு செய்தல் தொடர்பாக புதிய பதிவுகள் பற்றிய 360 கணிப்பீடுகளையும் தற்போது காணப்படுபவை தொடர்பான 400 கணிப்பீடுகளையும் மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. அதற்கிணங்க, 294 புதிய பதிவுகள் தொடர்பான கணிப்பீடுகளும் புதிய பதிவுகள் தொடர்பான 425 கணிப்பீடுகளும் மேற்கொள்ளப்பட்டன. அதற்கிணங்க, ஒட்டுமொத்தமாக 760 கணிப்பீடுகள் இலக்கிடப்பட்டு அவற்றில் 719 கணிப்பீடுகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. அதற்கிணங்க, கூடிய செயற்திறனானது எட்டப்பட்டுள்ளது. அவ்வாறே, மேற்கொள்ளப்பட்ட கணிப்பீடுகளில் உரிய நிபந்தனைகளை பூர்த்தி செய்துள்ள 119 நிறுவகங்கள் பதிவு செய்யப்பட்டதுடன் 314 நிறுவகங்கள் தொடர்பான பதிவுகள் புதுப்பிக்கப்பட்டுள்ளன. அதனடிப்படையில் ஒட்டுமொத்தமாக 433 பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ii. 2017 ஆம் ஆண்டில் பாடநெறிகளுக்கான தராதர அங்கீகார அளிப்பு தொடர்பாக புதிய தராதர அங்கீகாரம் தொடர்பாக 100 கணிப்பீடுகளையும் மற்றும் தற்போது காணப்படுபவை தொடர்பான 400 கணிப்பீடுகளையும் மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. ஒட்டுமொத்தமாக 743 கணிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டு 573 பாடநெறிகளுக்கு தராதரர அங்கீகாரங்கள் அளிக்கப்பட்டுள்ளன. அதற்கிணங்க, அதிகூடிய செயற்திறனானது எட்டப்பட்டுள்ளது.

(ஆ) 2017 ஆம் ஆண்டில் இரண்டு பருவ வெளியீடுகளை அச்சிட்டு வெளியிடுவதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன் ஒரு பருவ வெளியீடே அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டிருந்தது.

புள்ளிவிபரவியல் திணைக்களத்தினால் தரவுகள் வழங்கப்படுதலில் ஏற்பட்ட தாமதத்தினால் இரண்டாவது பருவ வெளியீடானது 2017 ஆம் ஆண்டின் இறுதி காலாண்டில் நிறைவு செய்யப்பட்டு 2017.12.18 ஆம் திகதி அச்சிடல் தொடர்பான விலைமனுக் கோரல் மேற்கொள்ளப்பட்டு 2018 ஆம் ஆண்டில் அச்சிடப்பட்டு விநியோகிக்கப்பட்டது.

(ஆ) 65 மத்திய நிலையங்களாக காணப்படுவது ஏனைய நிறுவகங்கள் வெளிவாரி கணக்காய்வுகள் தொடர்பாக தயார் நிலையில் காணப்படாமையாகும்.

2017 ஆம் ஆண்டில் எதிர்பார்க்கப்பட்ட கணக்காய்வு இலக்குகள் 150 ஆக காணப்படுவதுடன் அதில் 104 கணக்காய்வுகள் மாத்திரமே மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதன் சதவீதம் 69% ஆகும். மேலும், QMS சான்றிதழினை வழங்குவதற்கு நிறுவகங்கள் தொடர்பாக வெளிவாரி கணக்கெடுப்புகள் இரண்டும் வெற்றிகரமாக நிறைவடைதல் வேண்டும்.

எவ்வாறேயினும், QMS கணக்கெடுப்புக்கள் தொடர்பாக கோருதல் மற்றும் தகைமைகளை பெற்றிருத்தல் என்பன பயிற்சி நிறுவகங்களின் பங்களிப்புடனேயே இடம்பெறுவதுடன் அவர்களுக்கான QMS இனை ஸ்தாபிக்கும் அவசியத்தினை ஊக்குவிப்பதற்கு எம்மால் மேலும் மேலும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(இ)

i. திறன்கள் துறைசார் சபைகள் மூலம் அவைகளது செயற்பாட்டு திட்டங்கள் தயாரிக்கப்படல் வேண்டும். அச் செயற்பாட்டு திட்டமானது மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்ககுழுவின் பணிப்பாளர் சபையிடம் (Commission) சமர்ப்பிக்கப்பட்டு அனுமதியானது பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும். அவ்வாறு அனுமதி கிடைக்கப்பெற்ற துறைசார் சபைகளிற்கு நிதி மானியமானது அளிக்கப்படுகின்றது. அவ்வாறே, நிதியினை அளிக்கும் துறைசார் திறன்கள் அபிவிருத்தி திட்டத்திடம் திறன்கள் துறைசார் சபைகளின் முன்னேற்றங்களை நேரடியாக அளிக்கப்படுவதுடன் அதன் பிரதியானது மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவிடம் வழங்கப்பட்டுள்ளது.

ii. அனைத்து துறைசார் திறன்கள் சபைகளும் SSDP மற்றும் ADB ஒதுக்கீடுகள் தொடர்பான DLI இற்கு இணங்க ஸ்தாபிக்கப்பட்டுள்ளதுடன் அவசிய ஒதுக்கீடுகளை வழங்குதல் மாத்திரம் மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படுகின்றது. அதற்கிணங்க, இச் சபைகள் திறன்கள் துறைசார் திட்டதின் மூலம் மேற்பார்வை செய்யப்பட்டு நிதியினை அளிப்பதற்கு அவர்களால் ஆலோசனை வழங்கப்படுகின்றது.

iii. வருமானத்தினை ஈட்டுவது தொடர்பாக உரிய துறைசார் திறன்கள் சபைகளிற்கு தொடர்ச்சியாக தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் இதுவரையில் இத் துறைசார் திறன்கள் சபைகள் கீழே தரப்பட்டுள்ளவாறு வருமானங்களை ஈட்டியுள்ளன.

a. கட்டுமான துறைசார் திறன்கள் சபை - ரூ.500,000.00

b. தகவல் மற்றும் தொடர்பாடல் துறைசார் திறன்கள் சபை - ரூ. 53,400.00

c. தயாரிப்பு மற்றும் பொறியியல் சேவை துறைசார் திறன்கள் சபை - ரூ. 205,677.00

d. சுற்றுலா கைத்தொழில் துறைசார் திறன்கள் சபை - ரூ. 10,000.00

2020 நிறைவடையும் போது திறன்கள் துறைசார் சபைகள் மூலம் ஒதுக்கீட்டு நிதி ஈட்டப்படல் வேண்டும் என துறைசார் சபை ஸ்தாபித்தல் தொடர்பான புரிந்துணர்வு உடன்படிக்கைகளில் உடன்பாடு எட்டப்பட்டுள்ளது.

iv. மேற்கூறப்பட்ட துறைசார் திறன்கள் சபைகள் தொடர்பான கணக்காய்வு நடவடிக்கைகள் அந்தந்த துறைசார் திறன்கள் சபைகளின் மூலம் தேர்வு செய்யப்பட்ட கணக்காய்வு நிறுவகங்கள் மூலம் கணக்காய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. அவற்றின் பிரதிகள் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்படுகின்றன.

4.2 முகாமைத்துவ செயற்பாடு

(அ)

i. எமது நிறுவகமானது அமைச்சின் கீழ் செயற்பட்டு வருகின்றமையினால் எழுத்துமூல ஒப்பந்தம் இல்லாமல் கடிதத்தின் மூலம் மாத்திரம் இவ் எட்டாவது மாடியானது ஒப்படைக்கப்பட்டது (இவ் எட்டாவது மாடி ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்பட்டவொன்று அல்ல என்பதுடன் ஆணைக்குழுவில் இடவசதிகள் இன்மையின் காரணமாக வழங்கப்பட்ட தீர்வொன்றாக இவ் எட்டாவது மாடியானது ஆணைக்குழுவிற்கு கிடைக்கப்பெற்றது). ஆயினும், இது வரையில் நாம் எட்டாவது மாடியினை மீண்டும் சம்பந்தப்பட்ட அமைச்சிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

ii. முதலாவது படிமுறையில் அபிவிருத்தி செயற்பாடுகள் நிறைவு செய்யப்பட்டுள்ளதாக எழுத்துமூலமாக வழங்குநரினால் ஆணைக்குழுவிடம் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் 2017 ஆம் ஆண்டு மே மாதம் 23 ஆம் திகதியன்று அனைத்து கட்டுமானங்களும் மேற்கொள்ளப்பட்டு இறுதி விலைப்பட்டியலானது வழங்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க, அனைத்து கட்டுமானங்களும் பரீட்சித்துப்பார்க்கப்பட்டு 47 நாட்கள் தொடர்பாக தாமத கட்டணமானது அறவீடு செய்யப்பட்டு 2017/07/03 ஆம் திகதியன்று கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

iii. எட்டாவது மாடியின் அபிவிருத்தி தொடர்பாக விலைகோரலினை முன்வைத்திருப்பது ஒரு வழங்குநர் மாத்திரமே ஆகும். இவ் வழங்குநர் முன்வைத்த மொத்த நிதித்தொகை ரூபா 7,071,095.00 ஆகும். ஆனால், மதிப்பீட்டு குழுவின் மூலம் இவ்வாறு முன்வைக்கப்பட்ட கூறுவிலையின் ஓரிடத்தில் காணப்பட்ட பிழை ஒன்றின் காரணமாக விலைகோரலின் பொறுமதி ரூபா 6,552,695.00 ஆக வேண்டுமென சுட்டிக்காட்டப்பட்டது.

அதற்கிணங்க, இந் நிறுவகம் திருத்தப்பட்ட விலை கோரலினை முன்வைக்காததுடன் இவ் விலைகோரலிற்கான இரண்டாவது வழங்குநர் இன்மையினால் மீண்டும் விலை கோரல் மேற்கொள்ளப்பட்டது. அதற்கிணங்க, இரண்டாவது விலைகோரல் முன்வைக்கப்பட்டதன் பின்னர் குறைந்த கூறுவிலையான ரூபா 7,628,324 இற்கு இவ் 08 ஆவது மாடி அபிவிருத்தியின் பொருட்டு வழங்கப்பட்டுள்ளது.

iv. நிபுணதா பியச இன் எட்டாவது மாடியில் சான்றிதழ் பிரிவின் ஸ்தாபிப்பிற்கு முன்னதாக எட்டாவது மாடியிலுள்ள கண்ணாடிகள் காற்றின் காரணமாக உடைந்து விழக்கூடிய ஆபத்தான நிலைமையொன்று காணப்படுவதன் காரணமாக ஊழியர்களுக்கு பாதிப்பு ஏற்படும் என்பதனால் CECB நிறுவகத்திடமிருந்து அறிக்கையொன்று கோரப்பட்டது. இவ் அறிக்கையில், இவ் எட்டாவது மாடி ஊழியர்கள் இருப்பதற்கு பொருத்தமற்றது எனவும் அது பொருத்தமான முறையில் மீண்டும் புதுப்பிக்கப்படல் வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், இவ் அறிக்கை கிடைக்கப்பெறுவதற்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட புதுப்பித்தல் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருப்பது இம் மாடியில் சேவை புரியும் ஊழியர்களுக்கு அவசியமான வசதிகளை வழங்குவதற்கேயாகும்.

v. 2018/08/23 ஆம் திகதி AKK பொறியியல் நிறுவகத்திற்கு (ஒப்பந்த கம்பனி) இரண்டாம் தவணை நிதியினை செலுத்தும் போது நீர் ஒழுக்கு காரணமாக ஏற்பட்ட இழப்பிற்கு ரூபா 500,000 நிதித்தொகையானது அறவீடு செய்யப்பட்டு மீதி நிதித் தொகையானது செலுத்தப்பட்டுள்ளது

(ஆ) பயிற்சி நிறுவகங்கள் பதிவு செய்யப்படாமை தொடர்பாக மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு சட்டமூலத்திற்கு அமைவாக அவைகளுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு ஒதுக்கீடுகள் காணப்படவில்லை. அவ்வாறே, 2017 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 01 ஆம் திகதி வரையில் நிறுவகங்களை பதிவு செய்தல் குறைவடைந்தமைக்கான காரணங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

1. நிறுவக பதிவு மற்றும் பதிவுகளை புதுப்பித்தல் போன்றவை தொடர்பாக நிறுவகங்கள் கோராமை

2. கோரப்பட்டிருந்த போதிலும் இது தொடர்பாக உரிய கொடுப்பனவு மேற்கொள்ளப்படவில்லை

3. Online மூலம் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் பூரணமற்றிருத்தல்

எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள்

1. ஆணைக்குழுவின் சட்டமூலத்தினை திருத்துவதற்கு இதுவரையில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2. நிறுவகங்களை பதிவுசெய்தல் தொடர்பாக விழிப்புணர்வூட்டும் செயலமர்வுகளை மேற்கொள்ளல். 2017 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் வரையில் இவ்வாறான 12 செயலமர்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

3. கட்டணங்களை செலுத்தாத நிறுவகங்களுக்கு தொலைபேசி மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

4. செயலமர்வுகள் மூலம் வெற்றிகரமாக இணையத்தளம் ஊடாக விண்ணப்ப படிவங்களை அனுப்பும் முறை தொடர்பாக தெரியப்படுத்துதல்.

5. வியாபார பெயர் பதிவு செயற்பாட்டில் தொழிற்பயிற்சியினை வழங்கும் நிறுவகங்கள் தொடர்பாக TVEC பதிவு பெற்றுக்கொள்ள வேண்டுமென "கம்பனி பதிவாளர்" மற்றும் வியாபார பெயர் பதிவினை மேற்கொள்ளும் மாகாண நிறுவகங்களை தெரியப்படுத்துதல்.

அதற்கிணங்க, இதுவரையில் நிறுவக பதிவுகள் தொடர்பாக தெளிவான முன்னேற்றமொன்று காட்டப்பட்டுள்ளது.

பதிவு செய்யப்பட்டுள்ள மொத்த நிறுவக எண்ணிக்கை பின்வருமாறு

வருடம்	2014	2015	2016	2017	2018
பதிவு செய்யப்பட்டுள்ள நிறுவக எண்ணிக்கை	2096	2242	2424	2537	2658

மேலும், தற்போது செற்பாட்டிலுள்ள நிறுவக எண்ணிக்கை 2018.04.30 ஆம் திகதியாகும் போது 786 ஆகும் என்பதோடு அவை 2019.03.29 ஆம் திகதியாகும் போது 1228 வரையில் அதிகரிக்கும்.

(இ) 2017 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 01 ஆம் திகதியாகும் போது பாடநெறிகளுக்கான தராதர அங்கீகாரங்கள் குறைவடைவதற்கு காரணமாவது 2017 ஆம் ஆண்டில் முதன்முறையாக online முறையூடாக செயற்படுத்தப்பட்டமையினாலும் மற்றும் தொழில்நுட்பத்துடன் கூடியதாக விண்ணப்பப்படிவங்களை முன்வைப்பதற்கு பயிற்சி நிறுவகங்கள் ஆர்வம் காட்டாமையுமேயாகும். ஆனால், இவ் எண்ணிக்கையினை அதிகரிப்பதற்கு கீழே தரப்பட்டுள்ள செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- பாடநெறி தராதர அங்கீகாரம் தொடர்பாக விழிப்புணர்வூட்டும் செயலமர்வுகளை நடாத்துதல். 2017 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் வரையில் இவ்வாறான 12 செயலமர்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதுவரையில் வெற்றிகரமான முன்னேற்றத்தினை எட்டமுடிந்துள்ளது.

துராதர அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ள மொத்த நிறுவக எண்ணிக்கை பின்வருமாறு

வருடம	2014	2015	2016	2017	2018
பாடநெறி தராதர அங்கீகாரம்	1115	1678	2359	2843	3211

மேலும், தற்போது செற்பாட்டிலுள்ள நிறுவக எண்ணிக்கை 2018.04.30 ஆம் திகதியாகும் போது 1817 ஆகும் என்பதோடு அவை 2019.03.29 ஆம் திகதியாகும் போது 2325 வரையில் அதிகரிக்கும்.

(ஈ) நிறுவக பரீட்சிப்பு தொடர்பாக திறன்கள் அபிவிருத்தி அலுவலர்கள் தற்போது ஈடுபடுத்தப்பட்டுள்ளதுடன் 2018 ஆம் ஆண்டின் இறுதி அரையாண்டிலும் மற்றும் 2019 ஆண்டிலிருந்தும் NAITA நிறுவக கண்காணிப்பாளர்களை பயன்படுத்தி பரீட்சிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(எ) ஆணைக்குழுவின் கணக்கீட்டினை மேற்கொள்ளும் முறைமையிலுள்ள கணனி பக்கேஜ் ஆனது எதிர்பாராத விதமாக செயலிழந்தமையினால் கணக்கீடு தொடர்பாக பயன்படுத்தப்பட்டு வந்த கணனி பக்கேஜ் ஆனது முழுமையாக செயலிழந்துள்ளது. அதில் அடங்கியுள்ள தரவுகளை மீண்டும் ஸ்தாபிக்கும் பொருட்டு தகவல் முறைமைகள் பிரிவானது முயற்சித்துள்ளதுடன் வெளிவாரி நிறுவகங்கள் சிலவற்றிடமும் ஒப்படைக்கப்பட்ட போதிலும் அம் முயற்சிகள் வெற்றியளிக்கவில்லை. இக் கணக்கீட்டு முறைமையினை ஸ்தாபிக்கும் போது இவ் வெளிவாரி நிறுவகங்கள் மூலம் பிழையுடன் கூடியதாக கணக்கீட்டு முறைமையில் தரவுகளை களஞ்சியப்படுத்தியமை இதற்கு காரணமாக விளங்குகின்றது.

அவ்வாறே இத் தரவுகளை வேறொரு கணனியில் களஞ்சியப்படுத்தி வைத்திருக்கவில்லை. இவ்வாறான சந்தர்ப்பத்தில் புதிய கணக்கீட்டு முறைமை ஒன்றினை கொள்வனவு செய்வதற்காக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதுடன் அதில் தரவுகளை களஞ்சியப்படுத்தி வைத்தல் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

4.3 செயற்படுத்தல் செயற்பாடுகள்

(அ)

i. இந் நிறுவகத்தினால் மேற்கொள்ளப்பட்டுவரும் தேர்வு செய்யப்பட்ட பாடநெறிகளுக்குரிய உபகரணங்கள் தொடர்பாக விலை கோரலானது குறிக்கப்பட்ட காலப்பகுதியினுள் முன்வைக்கப்படாமையினால் நிதியுதவியானது வழங்கப்படவில்லை.

ii. ஆணைக்குழு விஞ்ஞாபன இல 226/15 மூலம் 3 மாத பாடநெறிகள் தொடர்பாக நிதியுதவியினை அளிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது. தனியார் துறைசார் டொன் பெஸ்கோ தொழிற்பயிற்சி மத்திய நிலையம் மூலம் மேற்கொள்ளப்பட்டுவரும் 3 மாதங்களில் நிறைவடையும் பாடநெறிகள் தொடர்பாக நிதியுதவிகளை வழங்குமாறு ஆலோசனை மற்றும் அனுமதி என்பன கிடைக்கப்பெற்றுள்ளன. அதற்கிணங்க, 03 மாதங்களில் நிறைவடையும் 03 நிறுவகங்களுக்கான 05 பாடநெறிகளின் பொருட்டு 2017 ஆம் ஆண்டில் நிதியுதவிகள் அளிக்கப்பட்டுள்ளன.

iii. 2012 ஆம் ஆண்டிலிருந்து 2016 ஆம் ஆண்டு வரையில் நிதியுதவி அளிக்கப்பட்ட அரச பிரிவு நிறுவகங்கள் இடையில் 05 பாடநெறிகளிற்கு மாத்திரம் தராதர அங்கீகாரம் அளிக்கப்படவில்லை. இப் பாடநெறிகளுக்கான தராதர அங்கீகாரங்களை பெற்றுக்கொள்வதற்கு அவசியமான விரைவான நடவடிக்கைகளை எடுக்குமாறு எழுத்துமூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது. தனியார் துறை நிறுவகங்கள் மூலம் மேற்கொள்ளப்படும் 07

பாடநெறிகள் தொடர்பாக சட்டரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் மேலும் 03 பாடநெறிகள் மாத்திரம் தராதர அங்கீகாரத்திற்கான நிலைமையினை அடையவில்லை.

தராதர அங்கீகாரமின்றிய பாடநெறிகளின் தராதர அங்கீகாரங்களின் பொருட்டான மேலதிக செயற்பாடுகளின் நிமித்தம் பாடநெறிகளுக்கான தராதர அங்கீகார பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

iv. 2011 ஆம் ஆண்டிலிருந்து 2012 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியினுள் அரச துறை தொடர்பான நிதியுதவியினை அளித்தலின் கீழ் இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையிற்கு நிதியுதவியானது அளிக்கப்பட்டிருப்பது 2011 ஆம் ஆண்டு வரையிலாகும். இவ் வருடத்தில் இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையின் 18 நிறுவகங்களின் 23 பாடநெறிகளின் பொருட்டு ரூபா7,382,110.00 நிதித்தொகையானது வழங்கப்பட்டுள்ளதுடன் இதுவரையில் 18 பாடநெறிகளிற்கான தராதர அங்கீகாரங்கள் பெறப்பட்டுள்ளன. 2012 ஆம் ஆண்டிலிருந்து எமது அமைச்சுடன் தொடர்பற்ற பயிற்சி நிறுவகங்களுக்கு நிதியுதவிகள் அளிக்கப்பட்டுள்ளதுடன் 2012 ஆம் ஆண்டிலிருந்து இதுவரையில் இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையிற்கு நிதியுதவியானது வழங்கப்படவில்லை.

(ஆ)

i. தர முகாமைத்துவ கணக்காய்வாளர்களாக இலங்கை கட்டளைகள் நிறுவகத்திடமிருந்து சான்றிதழ்களை பெற்றுக்கொண்ட அலுவலர்கள் இக் கணக்காய்வுகளின் பொருட்டு ஈடுபடுத்தப்படுகின்றனர். வெளிவாரி கணக்காய்வாளர்களில் மேற்படி தகைமையுள்ள சான்றிதழ்களை பெற்றுக்கொண்டுள்ள கணக்காய்வாளர்களும் ஈடுபடுத்தப்படுகின்றனர். ஆனால், பெரும்பாலும் இவ் அலுவலர்கள் ஏனைய நிறுவகங்களில் நிரந்தர கடமைகளில் ஈடுபட்டுள்ளமையினால் எமது ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படும் கணிப்பீடுகளின் பொருட்டு QMS கணிப்பீட்டாளர்களாக விடுவிக்கப்படுவதில்லை. இவ்வாறான பிரச்சினைகளின் காரணமாக உரிய அலுவர்களின் சேவையினை பெற்றுக்கொள்ள முடிவதில்லை. அவ்வாறே, உள்ளக QMS கணக்காய்வாளர்களின் சேவையினை பெற்றுக்கொள்ளல் தற்போது இடம்பெற்றுவருவதுடன் 2017 ஆம் ஆண்டில் பயிற்சி பெற்ற கணக்காய்வாளர்களுடன் தற்போது ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் அனைத்து கணக்காய்வாளர்களினதும் சேவையினை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ii. வெளிவாரி கணக்காய்வாளர்கள் மேற்கூறப்பட்ட தகைமைகளை கொண்ட கணக்காய்வாளர்களாக பெற்றுக்கொள்ளப்படுகின்றனர். ஆனால், பெரும்பாலும் இவ் அலுவலர்கள் வேறு நிறுவகங்களில் நிரந்தரமான முறையில் கடமையாற்றி வருவதனால் எமது ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படும் கணக்காய்வுகளின் பொருட்டு QMS கணக்காய்வாளர்களாக அவர்கள் விடுவிக்கப்படுவதில்லை. இவ்வாறான பிரச்சினைகளிற்கு மத்தியில் உரிய அலுவலர்களிடமிருந்து சேவையினை பெற்றுக்கொள்வதற்கு முடியாமல் உள்ளது. அந்த வகையில், உள்ளக ஞஆளு கணக்காய்வாளர்களின் சேவையினை பெற்றுக்கொள்ளல் தற்போது இடம்பெற்று வருகின்றது.

iii. தொழிற்பயிற்சி அதிகாரசபை மற்றும் தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற்பயிற்சி அதிகாரசபை என்பன தர முகாமைத்துவ முறைமையினை ஸ்தாபிப்பதற்கு அவசிய தகுதி மட்டத்தினை பூர்த்தி செய்யமுடியாமையின் காரணமாக ஆணைக்குழுவினால் கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

இவ்வாறான தகுதி மட்டத்தினை அடைவதற்கு அவசிய தகைமைகளை பூர்த்தி செய்தல் அந்தந்த நிறுவகத்தினை சார்ந்ததாகும்.

iv. இவ் விடயத்திற்குரிய தர ஆவணமானது தற்போது பேணப்பட்டு வருகின்றது. இதனால், உரிய வருடத்தில் விண்ணப்பித்த நிறுவகங்கள், விண்ணப்பித்த திகதிகள் மற்றஜம் முதலாவது கணக்காய்வு (Stage - 01) மற்றும் இரண்டாவது கணக்காய்வு (Stage - 02) என்பன மேற்கொள்ளப்பட்ட திகதிகள், பங்குபற்றிய கணக்காய்வாளர்கள் தொடர்பான விபரங்கள் உள்ளடங்கலாக மென்பொருளானது தயாரிக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டு வருகின்றது. ஆயினும், மேற்கூறிய தகவல்கள் அந்தந்த நிறுவகங்களுக்காக ஒதுக்கப்பட்ட கோவைகளிலும் குறிக்கப்பட்டு வருகின்றது.

v. அடிப்படையில் சான்றளிப்புக்கான கட்டணமாக ரூபா 25,000.00 ம் கணக்காய்வு கட்டணமாக ரூபா 10,000.00 ம் அறவீடு செய்வதற்கு அனுமதியானது பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், பின்னர் இது தொடர்பாக முன்னாள் தலைவர் அவர்களின் முன்மொழிவிற்கு இணங்க அவரினால் குழுவொன்று நியமிக்கப்பட்டு சான்றளிப்பு கட்டணமாக ரூபா 50,000.00 ம் கணக்காய்வு கட்டணமாக ரூபா 10,000.00 ம் அறவிடுவதற்கு அனுமதியானது வழங்கப்பட்ட போதிலும் மீண்டும் திறன்கள்

துறைசார் அபிவிருத்தி திட்டத்தின் மூலம் உரிய கட்டணமானது சான்றளிப்புக்கான கட்டணம் ரூபா 25,000.00 ஆகவும் கணக்காய்வு கட்டணம் ரூபா 10,000.00 ஆகவும் திருத்தப்பட்டுள்ளன.

இவ்வாறு காணப்படும் போதிலும் இதன் பொருட்டு பணியாற்றிய பிரதி பணிப்பாளர் நாயகம் அவர்கள் அவருக்கு அளிக்கப்பட்ட இலக்கான 50 தனியார் துறை நிறுவகங்களின் பொருட்டு அவரால் ரூபா 7,500.00 சான்றழிக்கும் கட்டணமாக உரிய நிதித்தொகையானது சில நிறுவகங்களிடமிருந்து அறவிடப்பட்டிருந்தது. (இது தொடர்பாக ஆணைக்குழுவின் அனுமதியானது பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது) எவ்வாறாயினும், தற்போது இக் கட்டணமானது ரூபா 25,000.00 மற்றும் ரூபா 10,000.00 ஆக அறவிடப்படுவதுடன் இவை ஒருமித்ததாக அறவிடப்பட்டு வருகின்றது.

மேலும், அமைச்சின் செயலாளரின் வழிகாட்டலின் கீழ் மிகப் பொருத்தமான நிதி தொடர்பாக (சான்றுப்படுத்தும் பொருட்டு) அரச நிதி திணைக்களமிருந்து விசாரிக்கப்பட்டுள்ளது.

vi. இச் செயற்பாட்டிற்குரிய நிபுணத்துவ தகைமைகள் (Lead Auditor) காணப்படும் அலுவலர்களுக்கு மாத்திரம் கணக்காய்வினை மேற்கொள்ள முடிவதுடன் இது தொடர்பாக உரிய கொடுப்பனவினை வழங்குவதற்கு ஆணைக்குழு அனுமதியானது பெறப்பட்டுள்ளது. அவ்வாறே, இக் கொடுப்பனவானது திறன்கள் அபிவிருத்தி திட்டத்தின் அனுமதி மற்றும் அதன் ஒதுக்கீடு என்பவற்றிற்கிணங்க மேற்கொள்ளப்படுகின்றது. தற்போது அரச சேவையில் ஈடுபட்டுள்ள அலுவலர்களிடமிருந்து 10மூ புனைவுரிமை தொகையானது குறைக்கப்படுகின்றது. அத்துடன், அலுவலர்களுக்கு கொடுப்பனவினை வழங்காவிடின் தரப்பட்டுள்ள இலக்கினை அடைவதில் தடங்கல்கள் ஏற்படும்.

4.4 செயலற்ற மற்றும் பயன்படுத்தப்படாத சொத்துகள்

கொள்வனவு சபையினால் பரிந்துரைக்கப்பட்ட குறைந்த செலவுடைய KF- 7354 மோட்டார் வாகனத்தின் உதிரிப்பாகங்களை தற்போதைய சந்தையில் கொள்வனவு செய்யமுடியாமையினால் திருத்த வேலைகளை மேற்கொள்ளமுடியாத நிலைமையானது ஏற்பட்டுள்ளது. அதற்கிணங்க, குறைந்த செலவுடைய பொருட்களை தேர்வுசெய்வதில் அவற்றின் தரங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பான செய்முறை பிரச்சினைகள் எழுந்துள்ளன.

கொள்வனவு செய்யப்பட்ட நிறுவகத்திடமிருந்து வெளிப்புறமாக தென்படும் பகுதிகள் மாத்திரம் திருத்தப்படமுடியும் என கூறுவிலை கோரப்பட்ட AMW நிறுவகத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் இந் நிறுவகத்தினால் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பது இவ் வாகனத்தில் திருத்தப்பட வேண்டிய அத்தியவசிய பாகங்கள் தற்போது உற்பத்தி மற்றும் இறக்குமதி செய்யப்படுவதில்லை என்பதாகும். அதற்கிணங்க, மிகவும் கூடிய செலவினத்துடன் திருத்த வேலையினை மேற்கொள்ள முடியாமையினால் வாகனத்தினை பயன்பாட்டிலிருந்து நீக்குவதற்கு அவசிய செயற்பாடுகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

4.5 அலுவலர்களின் முகாமைத்துவம்

(அ) அலுவலர்களிற்கான வெற்றிடங்களிடையில் நிலவும் பிரதி பணிப்பாளர் நாயகம் பதவிக்காக தற்போது ஆட்சேர்ப்பானது மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் வெற்றிடங்கள் நிலவும் பிரதி பணிப்பாளர் பதவிகளிடையில் 03 பதவிகள் தொடர்பாக பதவியுயர்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இப்பதவி உயர்விற்கு காரணமாவது பிரதி பணிப்பாளர் பதவியின் பொருட்டு நேரடி ஆட்சேர்ப்பினை மேற்கொள்ள முடியாமையாகும்.

(ஆ) உறவு மறுசீரமைப்பு மற்றும் பயிற்சி அபிவிருத்தி பதவி தொடர்பாக ஆட்சேர்ப்பு செய்வதற்கு அனுமதியானது விஞ்ஞாபன இல 218/18 இன் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்டதன் பிற்பாடு ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இங்கு காணப்பட்ட சேவை அவசியத்தின் நிமித்தம் திறன்கள் அபிவிருத்தி திட்டத்தின் மூலம் சம்பளம் வழங்குவதற்கு எட்டப்பட்ட உடன்பட்டின் அடிப்படையில் ஆட்சேர்ப்பானது தற்காலிக அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டதுடன் செயற்பாடுகள் நிறைவடைந்த பின்னர் அவரது சேவையானது முடிவுறுத்தப்படும்.

4.6 முதலீட்டு பயன்பாடு

கணக்கியல் குழுவின் பரிந்துரையுடன் சர்வதேச தொழிலாளர் அமைப்பிடமிருந்து கிடைக்கப்பெற்ற ஒதுக்கீட்டின் மீதி நிதித்தொகையானது நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் வட்டி வருமானத்தினை நிறுவகத்தினால் ஈட்ட முடியும். குறிப்பிடப்பட்டுள்ளதற்கு இணங்க இது தொடர்பாக நிர்வாக குழுவினால் திறைசேரியிடமிருந்து அனுமதியினை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

5.1 நிலையான அபிவிருத்தி இலக்குகள் மற்றும் இலக்கினை எட்டுதல்

நிலையான அபிவிருத்தி நோக்கங்கள் 2019 ஆம் ஆண்டில் நாளாதுவரையாக்குவதற்கு தீர்மானிக்கபட்ட இணைந்த திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன. அதற்கிணங்க, 2019 ஆம் ஆண்டின் செயற்பாட்டு திட்டமானது தயாரிக்கப்பட்டுள்ளது.

6. பொறுப்பு மற்றும் நல்லாட்சி

6.1 நிதிக்கூற்றினை முன்வைத்தல்ர

பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு பக்கேஜ் ஆனது முற்றுமுழுதாக செயலிழந்தமையினால் 2017 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றினை கணக்காய்வின் பொருட்டு முன்வைப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது என்பதனை தெரிவித்துக்கொள்கின்றேன்.

6.2 உள்ளக கணக்காய்வு

உள்ளக கணக்காய்வு பிரிவின் அலுவலர்களின் பொருட்டு அனுமதிக்கப்பட்ட உதவி பணிப்பாளர்கள் இருவரில் ஒருவர் இணைக்கப்பட்டுள்ளதுடன் மற்றைய உதவி பணிப்பாளர் பதவி தொடர்பாக அதிகாரி ஒருவர் நியமனம் செய்யப்படாமையினால் அது தொடர்பாக இரு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் இணைக்கப்பட்டுள்ளனர். அதற்கிணங்க, கணக்காய்வு பிரிவின் திட்டத்திற்கு அமைவாக இக் கணக்காய்வு பிரிவின் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அவ்வாறான சில சந்தர்ப்பங்களில் கணக்காய்வு விஸ்தரிப்பிற்கு இணங்க காலப்பகுதியானது தீர்மானிக்கப்படுவதால் அபாயம் குறைந்த விடயங்களுடன் கூடிய பிரதேசத்தில் கணக்காய்வானது மேற்கொள்ளப்படுவது குறைவாகும் என்பதனை தெரிவித்துக்கொள்கின்றேன்.

6.3 வரவு செலவு முகாமைத்துவம்

நெகிழ்வான வருமானம் மற்றும் செலவு பட்ஜெட் செய்யப்பட்ட வருமானம் மற்றும் செலவுடன் ஒப்பிட்டு வரவுசெலவுத்திட்டத்தினை வினைத்திறன் மிக்கதாக முகாமை செய்யும் ஓர் நிர்வாக இயக்கியாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

6.4 தீர்க்கப்படாத கணக்காய்வு பந்திகள்

ஆட்சேர்ப்பு நடைமுறைக்கு இணங்க உள்ளக அலுவலர்களை உதவி பணிப்பாளர் பதவிகளின் பொருட்டு நேர்முகத்தேர்வுகளுக்கு அழைக்கப்படுதல் மேற்கொள்ளப்பட்டது.

2017.06.07 ஆம் திகதிய VTY/E/A/TVEC/2016/13/04 ஆம் இலக்க கணக்காய்வு விசாரணைக்கான பதிலாக 2017.07.13 ஆம் திகதி அனுப்பிவைக்கப்பட்ட TVEC/E2/Audit ஞரநசல இற்கு இணங்க நியமனங்களை வழங்கும் போது சில புள்ளிகளை வழங்கும் முறைமை புள்ளி வழங்கும் நிபந்தனைகளுக்கு இணங்க மேற்கொள்ளப்படாததுடன் இந் நிபந்தனைகள் ஆணைக்குழுவின் மூலம் தயாரிக்கப்பட்ட நிபந்தனைகளாவதுடன் நேர்முகத்தேர்வு சபையினால் இதற்கிணங்க புள்ளிகள் வழங்கப்பட்டுள்ள போதிலும் இந் நிபந்தனைகளின் அடிப்படையில் மேற்கொள்ளமுடியாது என்பது தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், இங்கு ஆங்கில அறிவு தொடர்பாக நேர்முகத்தேர்வில் முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது என்பதும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

7. முறைமை மற்றும் முகாமைத்துவம்

(அ) கணக்கீடு

i. வவுச்சரினை புதிய பக்கேஜ் இல் இடும் போது 02 நடவடிக்கைகளின் கீழ் உள்ளீடு செய்யப்பட்டுள்ளன. இவ்வாறு உள்ளீடு செய்யும் போது ஏற்படும் பிழையினை தவிர்ப்பதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ii. பழைய பக்கேஜ் ஆனது செயலிழந்து போனமையினால் ஏற்படும் இழப்பினை தவிர்க்கும் பொருட்டு புதிய பக்கேஜ் இன் தரவுகளை நிதிப்பிரிவிலும் மற்றும் தகவல் முறைமை பிரிவிலும் களஞ்சியப்படுத்தி வைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(ஆ)

i. மீளாய்வு ஆண்டில் திட்டமிடப்பட்டவாறு திறன்கள் துறைசார் அபிவிருத்தி திட்டத்தின் மூலம் வழங்கப்பட்ட ஏற்பாடுகள் முழுமையாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதுடன் 2018 ஆம் ஆண்டில் குறைவான பயன்பாட்டினை தவிர்க்கும் பொருட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ii. வங்கி சரிசெய்தல் வெளியீட்டினை சரியான முறையில் தயாரிப்பதற்கான அவசிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(இ) கணிப்பீட்டாளர்களுக்கான தேவையானது மதிப்பீடு செய்யப்படுவது தராதர அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ள பாடநெறிகளின் எண்ணிக்கையின் அடிப்படையிலாகும். ஆட்சேர்ப்பானது வருடம் பூராவும் தேவையின் அடிப்படையில் இடம்பெறும். கொடுப்பனவு வழங்குவதில் தாமதமானது ஏற்பட்டமையானது ஒதுக்கீடு கிடைக்கப்பெறுவதில் ஏற்பட்ட தாமதத்தினாலாகும். ஆயினும் இது வரையில் கொடுப்பனவு வழங்கல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் 2018 ஆம் ஆண்டு டிசெம்பர் மாத இறுதிக்கு முன்னர் அனைத்து கொடுப்பனவு வழங்கல்களும் நிறைவடையும்.

(ஈ) கணக்காய்வு தொடர்பாக வவுச்சர் பத்திரங்களை கையளிக்கும் போது பொறுப்பு வாய்ந்த அதிகாரி ஒருவர் அவற்றினை பரீட்சித்துப்பார்த்து கையளிப்பதற்கும் வவுச்சர் பத்திரங்களை பாதுகாத்துக் கொள்வதற்கும் ஏதுவாக நாளாந்தம் கோவையிடல் செயற்பாட்டினை தொடர்ச்சியாக மேற்கொள்வதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

எஸ்.யூ.கே.ரூபசிங்க

பணிப்பாளர் நாயகம் (பதில்)

பிரதி - செயலாளர் - கைத்தொழில் மற்றும் வணிக செயற்பாடுகள் நீண்டகாலமாக இடம்பெயர்ந்த நபர்களின் மீள்குடியேற்றம், கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சு (தெரிந்து கொள்வதற்காக)

கணக்காய்வு அத்தியட்சகர் - அரச கணக்காய்வு பிரிவு (தெரிந்து கொள்வதற்காக)

மளகானயஉர் றழுர்டயஜ - (உள்ளக கணக்காய்வு மற்றும் விசாரணை) - மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு (தெரிந்து கொள்வதற்காக)



Tertiary and Vocational Education Commission

(Ministry of Skills Development and Vocational Training)

'Nipunatha Piyasa', 354/2, Elvitigala Mawatha,

Colombo 05, Sri Lanka

Tel : +94 (0)11 7608000, Fax : +94 (0)11 2555007

email: info@tvec.gov.lk

Web: www.tvec.gov.lk